# தமிழரசு

நவம்பர் 1-30, 2001 ரூ.10



மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பங்கேற்கும்
விற்பனைக் கண்காட்சி


பறவைகள் சரணாலயம் – வேடந்தாங்கல்

# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2032
ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 1–30, 2001
மலர் : 33 இதழ் : 9 & 10
விலை ரூ.10


## இந்த இதழில்...


- பெண்கள் மேம்பாட்டில் மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் பங்கு ........ 2
- சிட்கோ நிறுவனத்தில் அமைச்சர் ஆய்வு ........ 5
- அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ........ 6
- நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகள் ........ 9
- வீட்டுவசதித்துறையில் அமைச்சர் ஆய்வு ........ 15
- தொழில் முதலீட்டுக் கழகத்தில் ஆய்வு ........ 16
- மருத்துவத்துறைச் சீரமைப்பு ........ 17
- டெங்கு காய்ச்சல் ........ 20
- குடிநீர் - சுகாதாரத் திட்டத்தில் இருபாலர் சமநோக்கு ........ 22
- தமிழ்ப் பணியில் பாவாணர் ........ 25
- வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு ........ 31
- பான்மசாலா - குட்கா விற்க தடை ........ 33
- ஜவகர்லால் நேரு ........ 34
- முதலமைச்சர்கள் மாநாட்டில் - முதல்வர் உரை ........ 37
- எழில்மிகு முக்கொம்பு ........ 42
- அந்தச் சின்ன பீப்பாய் (சிறுகதை) ........ 45
- சமுதாயம் விழிப்படைய (கவிதை) ........ 49
- வெளிநாடு செல்வோர் கவனத்திற்கு ........ 50
- பூமி பிறந்த கதை ........ 53
- எங்கள் ஊர்ப் பிரச்சினை ........ 57
- நீரில் மூழ்குவதால் ஏற்படும் மரணம் ........ 60
- கூட்டுறவே நாட்டுயர்வு (கவிதை) ........ 64
- கரும்பு விவசாயிகளுக்கு ........ 65
- இலக்கியமும் உளவியலும் ........ 66
- நூலகங்களின் வளர்ச்சி ........ 71
- அமைச்சர் ஆய்வு ........ 72
- தமிழ்நாடு சுற்றுலா ........ 75




# பெண்களின் மேம்பாட்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பங்கு

திருமதி. **குத்சியா காந்தி**, இ.ஆ.ப.,
தலைவர் – மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுக் கழகம்

பன்னாட்டு வேளாண் மேம்பாட்டு நிதி உதவியுடன், **1990**இல் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் சோதனை அடிப்படையில் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டு **1991–92**ஆம் ஆண்டில் அப்போதைய மாவட்டமான சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களிலும் **1993**ஆம் ஆண்டு மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட்டது. **1995–96**ஆம் ஆண்டில் இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும் பயன் உள்ள வகையிலும் செயல்படுத்தப்பட்டதால் இத்திட்டத்தினை அரசு நிதியுடன் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாகியது. தற்போது அனைவரும் அறியும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் போடி அருகில் உள்ள அம்மாபட்டி கிராமத்தில் பஸ்சுக்காக நான்கு ஐந்து பெண்கள் காத்திருந்தார்கள். அப்பொழுது அவ்வழியே பளிச்சென ஒரு மினி பேருந்து வந்தது. காத்திருந்த பெண்கள் அவசரமாக மினி பேருந்துக்குள் ஏறினர். உள்ளே சென்றதும் இருக்கையில் இருந்த பெண்களைப் பார்த்து வியந்தனர். அடுத்து பஸ்ஸில் உட்காரும்பொழுது முன்னும் பின்னும் இருந்த இருக்கைகளில் ஒரே நிறச் சீருடை உடுத்திய பெண்களையும் கண்டனர். "டிக்கெட், டிக்கெட்'' எனக்கூறிய பெண்ணின் குரலைகேட்டுதிரும்பிப்பார்த்தால்கண்டக்டரும் பெண்.

பஸ்ஸில் ஏறிய சாந்தி அருகிலிருந்த வள்ளியிடம் "ஏங்கா டிரைவரும் கண்டக்டரும் பெண்களாயிருக்கின்றார்களே! என்ன இது?'' என்றார். அப்போது சீருடை அணிந்த பெண் என்ன இவ்வளவு ஆச்சரியப்படுகிற! உங்களுக்கு மகளிர் திட்டத்தை தெரியாதா? இந்த ஊரு தானே! என கேட்டார். ஆமாக்கா நான் இந்த ஊருதேன் ஆனா எனக்கு நீங்க சொல்ற திட்டம் சரியாக தெரியலை. அதைப்பற்றி நல்லாதான் சொல்லுங்களேன்''என சாந்தி கூறினார். அதற்கு உடனே அம்மாபட்டி கிராமத்தை சேர்ந்த ரோஜா மகளிர் குழு ஊக்குனர் செல்வி ''மகளிர் திட்டம் தமிழக அரசு உதவியுடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுகிறது என ஆரம்பித்தார்''. நான் ரோஜா குழுவில் ஊக்குனராக இருக்கிறேன் என கூறினார். சுய உதவிக்குழு என்றால் என்ன? என்று வள்ளி கேட்டார்.





அதற்கு செல்வி கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் உள்ள பெண்களை தொண்டு நிறுவனம் சமூக வரைப்படம் மற்றும் சொத்து வரிசைபடுத்துதல் மூலம் கண்டறிந்து 12 முதல் 20 வரை கொண்ட ஒரே கிராமத்தை சாா்ந்த உறுப்பினர்களைக் கொண்டு சிறு சிறு குழுக்களாக அமைக்கிறார்கள். இந்தக் குழுவிற்கு பெயர் சுய உதவிக்குழு. எங்களை மாதிரி தமிழ்நாட்டில் 16 இலட்சம் மகளிர் 98,000 குழுக்களில் சேர்ந்துள்ளார்கள்.

உடனே சாந்தி, திட்டத்தில் சேர்ந்தால் என்ன நன்மை ''உடனே அருகில் இருந்த வட்டார ஒருங்கிணைப்பு குழு பிரதிநிதி ருக்குமணி, –'' நாங்க குழுவில் சேர்வதற்கு முன் உலகம் தெரியாமல் வறுமையில் இருந்தோம். எங்களுக்கு மாதந்தோறும் விழிப்புணர்வு, சேமிப்பின் அவசியம், முறை, போன்ற பயிற்சிகள் பெற்றுள்ளோம். அதனால் எங்களுடைய தேவைகளை யார் மூலம் பெறுவது, எப்படி பேசுவது, அரசு நல திட்டங்கள் என்ன என்ன அதை எப்படி பெறுவது என்று எங்களுக்கு தெரியும் என்றாா். மேலும் நாங்க வாரந்தோறும் கையில் கிடைக்கிற காசை குழுவில் சேமித்து, வங்கியில் செலுத்தி குழு உறுப்பினருக்கு தேவையான அவசர செலவுகளுக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கிறோம். கடன் தொகையை தவணை முறையில் தவறாமல் செலுத்துகிறோம். அக்டோபர் 2001 வரை 1691485 உறுப்பினர்கள் ரூ.132.38 கோடி சேமிப்பு செய்துள்ளனர்.

இதனால் கந்து வட்டிக்காரர்கள் பிடியிலிருந்து முழுமையாக விடுதலை பெற்றுள்ளோம். குடும்பச் செலவு மட்டும் அல்லாமல், சிறு சிறு தொழில்கள் தொடங்குவதற்கும் குழுவிலிலிருந்து கடன் பெற்றுள்ளோம். 30.9.2001 வரை 31,390 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15,088.91 இலட்சம் கடன் வசதி பெற்றுத் தரப்பட்டுள்ளது.

உடனே சாந்தி – ''எங்களால சேமிக்க முடியாதே! ஐய்யய்யோ இங்க தான் நீங்க தப்பு பண்றீங்க – நாங்களும் உங்க மாதிரி ஏழையாகத்தான் குழுவில் சேர்ந்தோம். வாரம் வாரம் ஐந்தோ பத்தோ சேமிச்சோம். இப்படி சேமிச்சுதான் தமிழ்நாட்டில் உள்ள எல்லா குழுவிலும் சேர்ந்து 133 கோடி ரூபாய் ஆகியிருக்கு மேலும் வள்ளி! நீங்க எல்லோரும் ஒரே சீருடையுடன் எங்க போறீங்க''.

அதற்கு செல்வி – ''நாங்க மாதா மாதம் வட்டார ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு போவோம். அங்கு, பொது விஷயம் மட்டும் பேசாமல்,




நாங்க மருத்துவம், கல்வி, சுகாதாரம் போன்ற முகாமிற்குச் சென்று நாங்க மட்டும் பயன் அடையாமல், கிராமங்களில் உள்ள மகளிர், குழந்தைகளையும் அழைத்து செல்வோம். மேலும் நம்ம போய்கிட்டு இருக்கிற பஸ்கூட ஐந்து சுய உதவிக்குழுக்கள் சேர்ந்து எஸ்.ஜி.எஸ்.ஒய் (SGSY) கடன் பெற்று வாங்கி உள்ளோம். இதில் வர இலாபம் 5 குழுக்களுக்கும் பொதுவானது. இந்த கண்டக்டரும் சுய உதவிக்குழு பெண் தான்.

அப்ப நீங்க எல்லாம் இந்த வட்டாரக் கூட்டத்திற்குத் தான் போறீங்களா! என வள்ளிக் கேட்டார். இல்ல இல்ல நாங்க தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சிக்கு போறோம். அப்படின்னா ?

தமிழக அரசு ஐந்து இலட்சம் பெண்களுக்கு 2001–2006 ஆம் ஆண்டுகளில் தொழில் முனைவோர் பயிற்சி கொடுத்து, அவர்களை தொழில் அதிபர்களாக உருவாக்க திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தினை ஒருங்கிணைத்து செயலாக்க தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் முகவராக நியமிக்கப் பட்டுள்ளது. இந்த பயிற்சியில் 80 விழுக்காடு பெண்கள் சுய உதவிக் குழுக்களிலிருந்து தேர்வு



செய்யப்படுகிறார்கள். இந்த பயிற்சி தேவைப்படுவோர்க்கு அவர்கள் தேர்வு செய்யும் தொழிலுக்கு பயிற்சியும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் தொழில் துவங்க தேவைப்படும் நிதி வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டில் 1,18,240 பெண்கள் பயிற்சி பெறுவர், நாங்களும் அந்த பயிற்சிக்குப் போயிட்டிருக்கோம். இந்த பயிற்சி முடிந்த பின் நாங்களும் அதிக வருமானம் பெற தொழில் முனைவோராகிவிடுவோம் என உறுதியாக நம்புகிறோம். அப்படியா அக்கா ரொம்ப சந்தோஷம் ? வேற என்ன திட்டம் இருக்கு ? புதிதாக திருமணமான சுய உதவிக்குழு உறுப்பினர் அல்லது அவரின் திருமணமான ஒரே ஒரு மகளுக்கு மட்டும் இலவசமாக முதல் எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது. இவ்வாண்டு 5000 குழு உறுப்பினர்களுக்கு நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. சுய உதவிக்குழு நடவடிக்கைகள், வருவாய் ஈட்டும் தொழில்கள், அரசு நலத் திட்டங்கள், மருத்துவ குறிப்புகள், சிறு கட்டுரை ஆகியவை கொண்ட மாத பத்திரிக்கை ''முற்றம்'' என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. இந்த மகளிர் அதிகாரப் பகிர்வு ஆண்டில் சுய உதவிக்குழுவில் உள்ள அனைத்து பெண்களும் முழு எழுத்தறிவு பெற வேண்டும் என்பதற்காக மகளிர் அறிவொளி திட்டம் செயல்படுத்த போறாங்க. அப்புறம் இதோட இல்லாமல் நாமெல்லாம் வேகமாக நன்மை அடையும் வகையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன தலைமையகத்தில் அனைத்து நடவடிக்கையும் கணினி மையமாக்கி இருக்காங்க.

உடனே சாந்தி, அக்கா நாங்க எல்லோரும் குழுவில் சேர்ந்து எல்லா திட்டத்திலும் பயன் பெற்று உங்கள மாதிரி முன்னேறுவோம்! நீங்க உதவுங்க. ★

# சிறுபான்மையினத்தவர் தன்னார்வ தொண்டு நிறுவன கருத்தரங்கம்

தமிழக அரசின் மகளிர் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக மகளிர் திட்டத்தினை தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தில் மிகவும் ஏழ்மையில் உள்ள 16 இலட்சம் பெண்கள் 98,000 குழுக்களில் உறுப்பினராகி உள்ளனர். அவர்களுள் சிறுசேமிப்பு, கடனுதவி என்றில்லாமல் அவர்களுக்கு சமூக விழிப்புணர்வுக்காக பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இதன் காரணமாக பல பெண்கள் சிறுசிறு தொழில்கள் தொடங்கி குடும்பத்திற்கு தேவையான வருவாய் ஈட்டி வருகின்றனர். இத்திட்டம் சமூகத்தில் குறிப்பாக பெண்களிடத்தில் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தி உள்ளது.

எனினும் இத்திட்டத்தில் சிறுபான்மை இனத்தவர்கள் குறிப்பாக முஸ்லீம் பெண்கள் அதிகமாக பங்கேற்கவில்லை. தமிழக அரசு ஏழை முஸ்லீம் பெண்கள் இத்திட்டத்தில் சேர்ந்து முன்னேற வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக உள்ளது. இதன் முதற்கட்டமாக, ஏழைகளுக்கென செயல்படும் சிறுபான்மையினரின் தன்னார்வ தொண்டு நிறுவன தலைவர்களுடன் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ப. வளர்மதி அவர்கள் தலைமையில் 15.11.2001 அன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசின் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட செயலர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன தலைவி மற்றும் மேலாண் இயக்குநர் திருமதி குத்சியா காந்தி, இ.ஆ.ப. மற்றும் செயல் இயக்குநர் டாக்டர் சந்தோஷ்பாபு, இ.ஆ.ப. கலந்து கொண்டனர். மேலும் பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சமூக நல வாரிய அலுவலர்களும் பங்கேற்றனர்.

சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லீம் பெண்கள் அதிக அளவில் பங்கேற்று பயனடைய வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளில் தொண்டு நிறுவனம் பெரும் தொண்டாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

★ ★ ★

# சிட்கோ நிறுவனத்தில் அமைச்சர் ஆய்வு

தமிழகத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்கென எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஊரகத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். வைத்திலிங்கம் அவர்கள் 6.11.2001 அன்று சிறுதொழில் வளர்ச்சி நிறுவன (சிட்கோ) அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

தொழிற்பேட்டைகளில் காலியாக உள்ள தொழிற்கூடங்களையும், மனைகளையும் விரைவாக விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுரை வழங்கினார். தொழில்முனைவோர்களிடம் இணைந்து தொழிற்பேட்டைகளை முறையாக பராமரிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் கேட்டுக்கொண்டார். தமிழகத்தில் சிறுதொழில்கள் வளர்ச்சிக்காக அரசு மூலம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் திருமுல்லைவாயிலில் அமையவிருக்கும் தொழிற்பேட்டை சம்பந்தப்பட்ட பணிகளை விரைவுபடுத்துமாறு அறிவுரை வழங்கினார். சுற்றுச் சூழல் மாசுபடாதவாறு தொழிற்பேட்டை அமைத்திட ஆலோசனை வழங்கினார். மேலும் தமிழகத்தில் பெண்களுக்கென அமைக்கப்படவுள்ள 5 தொழிற்பேட்டைகளுக்கான பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார்.

சிறுதொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் அரசு நிறுவனங்களுக்கும் தேவையான மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சிட்கோ மூலம் விற்பனை செய்யும் திட்டம் முதலியவைகளை ஆய்வு செய்து இப்பணிகளை மேலும் விரிவாக்கம் செய்ய அறிவுறுத்தினார்.

அமைச்சர் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் சிட்கோவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், பொதுமேலாளர் மற்றும் முதுநிலை மேலாளர்கள் கலந்து கொண்டனர். •

# அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்

– மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. சி.துரைராஜ்

மனித வாழ்வுக்கு குடிநீர் இன்றியமையாதது. இக்குடிநீர் போதிய அளவு மக்களுக்கு கிடைக்கச் செய்வது அரசின் தலையாய கடமையாகும். மக்களுக்குக் கிடைக்கின்ற குடிநீரின் அளவு, தரம் ஆகிய இரண்டும் இயற்கை வளங்கள், பல்வேறு பிரிவினரும் பயன்படுத்துகின்ற முறை போன்றவைகளை ஒட்டி அமைகின்றது. பெருகிவரும் மக்கள் தொகை, மாறிவரும் வாழ்க்கைத்தரம், காடுகள் அழிப்பு, அதிகப்படியான நிலத்தடி நீர் எடுத்தல், இறைத்தல், நீர் சுழற்சி முறையில் மாற்றங்கள், நீர் ஆதாரங்கள் மாசுபடுதல், நதி மற்றும் ஏரிகளின் ஆழம் குறைந்து வருதல் போன்ற முக்கிய காரணங்களினால் குடிநீர் பற்றாக்குறை அதிகரித்து வருகின்றது. நிலம், நீர், காடு ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து சார்ந்திருந்தாலும், அவைகளை தனித்தனியாக பாவித்து, அழிவுக்கு வழி வகுக்கின்றோம். அனைத்து உயிரினங்களும் வாழ, ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியமாகிறது.

உலக அளவிலான மக்கட் தொகையில், இரண்டாவது இடத்திலுள்ள நம் இந்தியாவில் 72 விழுக்காடு மக்கள் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமங்களில் வாழும் 74 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்குதல் என்பது சாதாரணமானது அல்ல. இதற்கு அதிக நிதி, தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை மிக்க சமுதாயக் கண்ணோட்டம் ஆகியவை தேவைப்படுகிறது. மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தும் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்துடன், மாநில அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின் வாயிலாகவும் தமிழகத்தில் ஊரகப் பகுதியில் குடிநீர் வசதி அளிக்கப்படுகின்றது. தமிழகத்தை பொறுத்தவரை குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகளே இல்லை என்ற நிலையை எய்தியுள்ளோம். இது ஓர் பிரமிக்கத்தக்க சாதனை என்றாலும் காலப்போக்கில் குடிநீரின் தரம் மற்றும் நீர் ஆதாரங்களின் கொடுதிறன் குறைவு காரணமாக பெரும்பாலான குடியிருப்புகள் போதுமான அளவுக்கு குடிநீர் பெறாத நிலை தொடர்கிறது.

தமிழக மக்கள் தொகையான 6.2 கோடியில் 3.5 கோடி (56 விழுக்காடு) மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். 73 விழுக்காடு கடினப் பாறைகளும், 27 விழுக்காடு சாதாரண படிவங்களும் கொண்ட தமிழகத்தில் நிலத்தடி நீர் குறைவாகவே உள்ளது. நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழக கடற்கரைப் பகுதிகளில் நிலத்தடி நீர் உவர் நீராக உள்ளது. நான்கில் ஒரு பகுதி நிலப்பரப்பில் 85 விழுக்காடு நிலத்தடி நீர் எடுக்கப்பட்டுவிட்டது. எனவே, கிடைக்கின்ற நீரைக் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் திட்டங்களைத் தீட்டி பயனுக்குக் கொண்டு வருவது அவசியமாகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு நீர்வளம் குறைவான மாநிலமாக உள்ளது. பூகோள ரீதியாக இவ்வளவு இடர்பாடுகளும், பிரச்சினைகளும் இருக்கின்ற நிலையிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலில் குறிப்பாக கிராம மக்களுக்கு வழங்குவதில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு இருக்கின்றது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.



தமிழகத்தைப் பொறுத்தவரையில், குடிநீர் நிலை பற்றிய கள விவரங்களை அறியும் பொருட்டு, துவக்கத்தில் இருந்தே அறிவியல் ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படியே திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், வருவாய்க் கிராமங்களை கணக்கிற்கொள்ளாது குடியிருப்புகள் மட்டத்தில் திட்டமிடுதலும் தமிழ்நாட்டிலேதான் முதலில் செயல்படுத்தப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கடைசியாக, இந்த முழு ஆய்வு **1992**ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, தற்போதைய உண்மையான கள நிலவரத்தைக் கண்டறிந்து இவைகளில் குடிநீரின் தரம் மற்றும் போதிய அளவு குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகளை கண்டறியும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் வரும் நிதியாண்டில் **(2002–2003)** இருந்து இந்த புதிய ஆய்வின்படியே திட்டங்களை தெரிவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது. மேலும், மாறி வரும் குடிநீரின் தரம் மற்றும் அளவுகளை அவ்வப்போது கண்டறிந்து தேவையான நிவர்த்திகளை மேற்கொள்ளவும் அரசு முடிவெடுத்துள்ளது. இந்த ஆண்டில், இந்த அரசு ஒரு புதிய திட்டத்தையும் அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்படி, கையிறைப்பான் ஆதாரங்களிலிருந்து சிறு மின்விசை மூலம் இறைத்து தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேமித்து குடிநீர் வழங்கும் புதியதோர் திட்டத்தை இவ்வாண்டில் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆக, தமிழ்நாடு குடிநீர் வழங்குதலில் தொடர்ந்து முன்னோடியாக இருந்து வருகின்றது. ஊரகக் குடிநீர்த் திட்டங்களில் பொதுமக்களும் பங்கேற்கும் வகையிலான திட்டம் மைய அரசின் உதவியுடன் நான்கு மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. **844** திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, **609** திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. மக்களின் தேவைக்கேற்ப நிறைவேற்றப்படும் இத்தகைய திட்டம் நல்ல வரவேற்பை பெற்று வருகின்றது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை வகிக்கின்றது என்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி அளிக்க அதிக நிதி ஒதுக்கீடு செய்து திட்டமிட்டு தொடர்ந்து செயல்பட்டாலும், இன்னும் போதிய அளவு குடிநீர் வசதி அளிக்கப்படாத குடியிருப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதற்கு கீழ்க்கண்ட காரணங்களைச் சுட்டிக் காட்டலாம்.

1. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவதால் குடிநீரின் தரத்தில் பிரச்சனை.
2. நீராதாரக் கொடுதிறன் குறைதல்.
3. காடுகள் அழிக்கப்படல் மற்றும் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருத்தல்.
4. திட்டப் பராமரிப்பிலுள்ள குறைபாடுகள்.
5. பொதுமக்களின் ஒத்துழைப்பும் போதிய ஈடுபாடும் இல்லாமை.
6. நீராதாரக் கொடுதிறனை அதிகப்படுத்த முயற்சி மேற்கொள்ளாமை.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காணும் வகையில் கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கையாளலாம்.

1. நிலத்தடி நீர்ச்சட்டம் அமல்படுத்தப்பட்டு முறைப்படுத்துதல்.
2. குடிநீர்த்திட்ட பராமரிப்பில் பயனீட்டாளர்களை ஈடுபடுத்தி மேலாண்மை முறையைக் கையாளுதல்.
3. நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்தல்.
4. மரங்களை நடுதல் மற்றும் நீர்ச் செறிவூட்டும் முகத்தான் சிறு குறுக்கணைகள் மற்றும் தடுப்பணைகள் அமைத்தல்.
5. குடிநீர்த் திட்டங்களின் பல்வேறு கட்டங்களான திட்ட வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவைகளில் மக்களை பங்குபெறச் செய்தல்.

மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீரை மேம்படுத்துதல் போன்ற நீரைச் சேமிக்கின்ற பல வழி முறைகள் இருப்பினும் அவைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே, பெய்யும் மழை அளவு சமூக பொருளாதார அடிப்படையிலான வாழ்க்கை முறை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு முன்னெச்சரிக்கை அணுகுமுறையின் மூலம் தீர்வு காணலாம்.

நீராதாரச் செறிவூட்டும் பணிகளையும் நீராதார நிலைத் தன்மைப்படுத்தும் பணிகளையும் அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. இந்த ஆண்டு ரூபாய் 15 கோடி அளவில் நீர் ஆதாரங்களை நீர்ச் செறிவூட்டும் பணியிலும், நீராதார நிலைத்தன்மைப்படுத்தி உறுதி செய்யும் பணிகளையும் மாநிலம் முழுமைக்கும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மழை நீரை ஆங்காங்கே சேகரித்து பயன்படுத்தப்பட வேண்டியதன் தேவையை பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் பணியை அரசு முழு மூச்சில் தொடங்கி உள்ளது. இதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் கட்டட உரிமம் பெறுவதற்கே மழைநீரைச் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்துவதை கட்டாயமாக்கிடவும் அரசு முடிவெடுத்துள்ளது. அனைத்து அரசு கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்புத் திட்டங்களை நிறைவேற்றிடவும் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் கையிறைப்பான்கள் முதல் விசையிறைப்பான் திட்டங்கள் வரையிலான பெரும்பாலான குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஓரிரு குடியிருப்புகள் பயனுறும் தனி மின் இறைப்பான் திட்டங்களிலிருந்து மாறி, நதி நீர்

பரிமாற்றம், தொலை தூரங்களுக்கு குடிநீரைக் கொண்டு செல்லுதல் போன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உரிய நிதியை ஒதுக்கி, வழிவகைகளையும் காண வேண்டும். எனவே, நீரின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்த நவீன அறிவியல் தொழில்நுட்ப முறையைக் கையாள வேண்டும். அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதிய அளவு அளிக்கும் போது தனி மனிதனின் நலமும் வளமும் மேலோங்கும். இக்குறியீட்டை அடைய நாம் பல்வேறு தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இச்சூழலில் நடைபெற உள்ள இந்த கருத்தரங்கு நான் முன்பு குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர ஆய்ந்து பயனுள்ள பல முடிவுகளை இந்த நாடு பயன்பெறும் வகையில் அளிக்கும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. அதோடு வருகை தந்துள்ள பிரதிநிதிகள் தங்களின் பணிகளுக்கிடையே தமிழ்நாட்டின் கலாசாரத்திற்கும் பண்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாக உள்ள இடங்களையும் கண்டு களித்திட கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் சென்னைப் பயணம் சிந்தனைக்கும் செயல்பாட்டிற்கும் வித்திடுவதாக அமையும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை.

*– சென்னையில் 16–11–2001 அன்று நடைபெற்ற குடிநீர் ஆதாரம் மற்றும் நீர் நிர்வாகம் பற்றிய கருத்தரங்கில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.சி.துரைராஜ் அவர்கள் ஆற்றிய உரை.*

# மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கு

மழைநீர் சேகரிப்பு குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு 16–17, நவம்பர் 2001 அன்று சென்னையில் நடைபெற்றது. நதிகளை இணைப்பதால் நாடு முழுவதும் வளம் பெறும் ஒருமித்த கருத்து இருந்தாலும், நமது தேவைகளை பூர்த்தி செய்யும் மழைநீர் சேகரிப்பு பற்றியும், அதன் பல்வேறு முறைகளையும் இக்கருத்தரங்கில் எடுத்துரைக்கப்பட்டது.

நமது நாடு வேகமாக வளர்ந்து வரும் சூழ்நிலையில் பல கிராமங்கள் நகரங்களாக வளர்ச்சி பெற்று வருகின்றன. பருவ மழை தவறாமல் பெய்தாலும், அவற்றை சேமிக்கும் திறனை நாம் அதிகரிக்க வேண்டும். அதனை இதுபோன்ற கருத்தரங்கங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றது. "மழைநீரை சேகரிப்போம் நீர் ஆதாரத்தைப் பெருக்குவோம்'' போன்ற செய்திகள் மக்களைச் சென்றடைய இதுபோன்ற கருத்தரங்குகள் மிகவும் அவசியமானதாகும்.


இதனால் மக்களும் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை உணர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நாட்டின் நீர்வள ஆதாரத்தை பெருக்குவர்.

மழைநீர் சேகரிப்பு கருத்தரங்கை மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எம்.வெங்கையா நாயுடு அவர்கள் தொடங்கிவைக்க, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.சி. துரைராஜ் அவர்கள் தலைமை தாங்கினார்.

இந்தியாவிற்கான யுனிசெப் ஆலோசகர் திரு.ரூபர்ட் டால்பட், மத்திய ஊரக வளர்ச்சித்துறையின் செயலாளர் திரு. எஸ்.கே.திரிபாதி, இ.ஆ.ப., சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பி.பி.சுந்தரேசன், மத்திய ஊரக வளர்ச்சித்துறையின் இணைச் செயலாளர் திரு.ஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப., உள்ளிட்டோர் சிறப்புரையாற்றி னார்கள்.

இவர்கள் அனைவரையும் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திருமதி சாந்தா ஷீலா நாயர், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்க இறுதியில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கில் சிறப்பான ஆலோசனைகளை வழங்கி கலந்து கொண்டதற்காக அனைவருக்கும் நன்றி கூறினார்.

• • •



# நிதிச்சீரமைப்பு நடவடிக்கைகள்

**2001** பொதுத் தேர்தலுக்குப் பின்பு புதிதாக பொறுப்பேற்ற அரசு முந்தைய ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக கடும் நிதி நெருக்கடியை சந்திக்க நேர்ந்தது. மேதகு ஆளுநர் உரையின் போதும், 2001–2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும், தடம் புரண்ட தமிழகத்தின் நிதிநிலையை நிலை நிறுத்த தமிழக அரசு மேற்கொள்ள விருந்த பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளைப் பற்றி அறிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் நிதிநிலையை சீராக்கி வளர்ச்சித் திட்டங்களுக்கு தகுந்த அளவு நிதி கிடைக்குமாறு செய்திட கடந்த 19–11–2001 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவை கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ள சிக்கன நடவடிக்கைகள், கட்டண உயர்வுகள், விலை ஏற்றங்கள் மற்றும் நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகள் ஆகியன வரும் 1–12–2001 முதல் அமுலுக்கு வரும்.

### சிக்கன நடவடிக்கைகள்

அரசு அலுவலர்களுக்கான செலவினங் களைப் பொறுத்த வரையில் தற்போது நிலவி வரும் கடுமையான நிதி பற்றாக்குறையை சமாளிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

1. புதிய பணியிடங்களை உருவாக்குதல் அனைத்துத் துறைகளிலும் முற்றிலும் தடை செய்யப்படுகிறது. நிருவாக தேவையின் அடிப்படையில் எங்கெங்கு புதிய பணியிடங்கள் தேவையோ அங்கெல்லாம் பிற துறைகளிலுள்ள தேவைக்கு அதிகமான பணியாளர்கள் பணியில் அமர்த்தப் படுவார்கள்.

2. அத்தியாவசிய பணிகள் என்ற இனத்தின் கீழ் வருகின்ற ஆசிரியர்கள், மருத்துவர்கள், காவலர்கள் ஆகியவை தவிர, இதர இனங்களில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படுவது முழுமையாக தடை செய்யப்படுகிறது.

3. பணியாளர்கள் ஆய்வு (Staff Review) செய்ய ஒரு ஆய்வுக்குழு உடனடியாக அமைக்கப்படும்.

4. தினக்கூலி அடிப்படையிலான தற்காலிக பணியாளர்கள் அமர்த்தப்படுவதை தடை செய்து தக்க அரசாணை பிறப்பிக்கப்படும்.

5. எங்கெங்கு வாய்ப்பு உள்ளதோ, எடுத்துக்காட்டாக, பாதுகாப்புப் பணி, வாகன ஓட்டும் பணி போன்றவற்றில் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டு, அத்தகைய இனங்களில் பணி நியமனம் செய்யப்படுவது முற்றிலும் தவிர்க்கப்படும்.

6. உரிய சட்ட ஆலோசனை பெறப்பட்ட பின்னர், குறைந்த செலவில் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட அரசு நடவடிக்கை எடுக்கும்.

7. ரயில் பிரயாணத்தைப் பொறுத்த வரையில் முதல் வகுப்பு அல்லது ஏ.சி.III அடுக்கு வகுப்பு வசதி ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதமும் அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

8. ரூ.12000–575–16500 என்ற ஊதிய விகிதமும் அதற்கு மேலும் பெறுகிறவர்கள் மட்டும் பிற மாநிலங்களுக்கு விமான பயணத்தில் சிக்கன வகுப்பு அல்லது ஏ.சி.II அடுக்கு வகுப்பில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

9. ஏ.சி. முதல் வகுப்பு பயண வசதி ரூ.17400–500–21900 ஊதிய விகிதமும் அதற்கு மேலும் பெறுகிற அலுவலர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

10. விமான பயணத்தில் உயர் வகுப்பில் (Executive Class) பயணம் செய்ய ரூ.22400–525–24500 ஊதிய விகிதம் மற்றும் அதற்கு மேலும் பெறுகிற அலுவலர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

11. ஈட்டிய விடுப்பினை (Surrender Leave) பணமாக்கிக் கொள்ளும் சலுகை ஓராண்டுக் காலத்திற்கு நிறுத்தப்படும்.

12. பொது வைப்பு நிதியிலிருந்து (General Provident Fund) முன் பணம் (Advance) எடுக்க விதிக்கப்பட்டுள்ள கால இடைவெளி 6 மாதங்கள் என்பது இனி 12 மாதங்களாக மாற்றப்படும்.

13. நமது மாநிலத்தில் உள்ள தேவைக்கும் அதிகமான கருப்பஞ்சாற்று கசண்டு (Molasses) ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கவும், அதற்கு டன் ஒன்றுக்கு ரூ.750 ஏற்றுமதி வரி (Export Tax) விதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நமது மாநில தொழில்துறை தேவை முற்றிலுமாக நிறைவு செய்யப்பட்ட பின்னரே இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும்.

14. பல்வேறு அரசுத் துறைகளிலும் குறிப்பாக எரிசக்தி, போக்குவரத்து மற்றும் உணவுத்துறைகளில் மத்திய அரசு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் வகுத்துள்ள கோட்பாடுகளுக்கிணங்க சீர்திருத் தங்கள் மேற்கொள்ள மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதன் வாயிலாக மத்திய அரசுடனும், உலக வங்கியுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு கடன் உதவி பெற்று அதன் மூலம் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. கணினி வாயிலான பரிசு சீட்டு திட்டம் (On Line Lottery System) உடனடியாக அமல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

16. பரிசு சீட்டு சட்டத்தின் கீழ் விதிமுறைகள் வெளிப்படையான முறையில் வகுக்கப்பட்டு அதன் மூலம் இதர மாநிலங்களின் பரிசு சீட்டுகள் நமது மாநிலத்தில் நடத்தப்படுவது ஒழுங்குப்படுத்தப்படும்.

17. தற்போது அமலில் உள்ள பரிசு சீட்டு குலுக்கல் தொடர்பான விதிகள் மாற்றி அமைக்கப்படும். குறிப்பாக மாநில பரிசு சீட்டுகளுக்காக வழங்கப்படும் 63 சதவீத பரிசு தொகை, மொத்த பரிசு தொகையில் 65 முதல் 68 சதவீதம் வரை உயர்த்தப்படவும், முகவர்கள் விற்கும் விலையானது 78 சதவீதத்திலிருந்து 75 முதல் 78 சதவீதம் வரை குறைக்கப்படவும், இதன் வாயிலாக அரசுக்கு கிடைக்கின்ற குறைந்தபட்ச வருவாய் 9 சதவீதம் கிடைக்கும் வகையிலும் பரிசு சீட்டு விதிகள் மாற்றி அமைக்கப்படும்.

18. ஒட்டுமொத்த விற்பனை முகவர் முறை (Bulk Selling Agent System) படிப்படியாக ரூ.1 பரிசு சீட்டிலிருந்து ஆரம்பித்து அமல்படுத்தப்படும்.

19. உயர்கல்வி துறைக்காக அரசு செய்கின்ற செலவினங்கள் குறைக்கப்படும் வகையிலும் பயனீட்டாளர்களுக்கான கட்டணம் உயர்த்தப் படுகின்ற வகையிலும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(அ) ஏழ்மையான குடும்ப நிலையை சார்ந்த மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குகின்ற அதே நேரத்தில் பல்வேறு படிப்புகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்படும்.

(ஆ) வருவாய் பெருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் அறிவுறுத்தப் படும்.

(இ) அரசு நிதி உதவி பெறுகின்ற தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கு

வழங்குகின்ற மானியத் தொகை குறைக்கப்படவோ அல்லது தற்போதுள்ள நிலையிலேயே இருக்கவோ உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் இந்த நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து செலவுத் தொகைகளைக் கட்டண மூலம் ஈடுகட்ட அறிவுறுத்தப்படும். ஆயினும், ஏழ்மையான குடும்பங்களை சார்ந்த மாணவ மாணவிகளுக்கு அரசு படிப்பு உதவித்தொகை வழங்கும்.

20. தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை வருகின்ற 5 ஆண்டுகளில் 30 சதவீதம் குறைக்கப்படும். அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவற்றில் உள்ள பணியாளர்களுக்காக விருப்ப ஓய்வு திட்டம் (Voluntary Retirement Package) அமல்படுத்தப் படும்.

21. மத்திய அரசு அறிவித்துள்ள பங்கேற்பு ஓய்வூதிய திட்டம் (Contributory Pension Scheme) மாநில அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் இனிமேல் பணியில் சேர்பவர்களுக்கு பொருந்தும் வகையில் வருகின்ற 1–12–2001 முதல் அமல்படுத்தப்படும்.

**மின் கட்டண சீரமைப்பு**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 2001–2002 ஆண்டிற்கான வருவாய் பற்றாக்குறை ரூ.2,747.59 கோடியாக உள்ளது.

உற்பத்திக்கான செலவு அதிகரிப்பு, மத்திய நிறுவனங்களிடமிருந்து மின்சார கொள்முதல் விலை அதிகரிப்பு மற்றும் தனியார்த் துறையில் மின் கொள்முதல் அதிகரிப்பு ஆகியவை இத்தகைய நிதிப் பற்றாக்குறையின் முக்கிய காரணங்கள் ஆகும். எனவே இந்நிலையில் மின்கட்டண உயர்வு இத்தகைய பற்றாக்குறை ஓரளவு சரிகட்ட மிகவும் அவசியமாகிறது.

உயர் மின் அழுத்த இனத்தில் தொழிற்சாலைகளும், இரயில்வேயும் உள்ளன. இவற்றிற்கான உச்ச கேட்பு கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு கே.வி.ஏ. (KVA) ஒன்றிற்கு ரூ.150–லிருந்து ரூ.300 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் உயர்மின் அழுத்த நுகர்வோர் பொருளாதார நிதிச்சுமையை குறைப்பதற்காக அவர்கள் உபயோகப்படுத்தும் மின்சக்தி அளவிற்கு பழைய கட்டண விகிதத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ.3.40லிருந்து ரூ.3.20 ஆகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ரயில்வே மின் இணைப்பைப் பொறுத்தவரையில் ஒரே விகித கட்டணமாக யூனிட் ஒன்றுக்கு ரூ.4.60 ஆக உச்ச கேட்புக் கட்டணம் இல்லாமல் உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், பொதுக் கழிவுநீர் அகற்று நிலையங்கள் போன்றவற்றிற்கு உச்ச கேட்புக் கட்டணத்தை கே.வி.ஏ.–விற்கு ரூ.25 உயர்த்துவது என்றும், மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 70 பைசா உயர்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வழிபாட்டுத் தலங்களுக்கு தற்போதுள்ள கட்டணம் தொடரும்; கட்டண உயர்வு ஏதுமில்லை.

வணிக நிறுவனங்கள் மற்றும் பிற உயர் அழுத்த மின் கட்டண இனத்தில் உள்ள ஏனைய பயனீட்டாளர்களுக்கான உச்ச கேட்புக் கட்டணத்தையும் மின் கட்டணத்தையும் முறையே ரூ.100, யூனிட் ஒன்றுக்கு 40 பைசா என உயர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத் திற்கான உயர் அழுத்த கட்டண விகிதத்தைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்தமாக யூனிட் ஒன்றுக்கு ரூ.3 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வந்தவாசி, திருமயம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்ற கிராமிய மின் கூட்டுறவு சங்கங்களின் தற்போதைய கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 18 மற்றும் 20 பைசா என இருப்பதை ரூ.1.25 என உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த மின் அழுத்த வீட்டு உபயோக மின்சாரத்திற்கான கட்டணங்கள் ஒரே நிலையாக அனைவருக்கும் பொருந்துமாறு திருத்தியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மிகக் குறைந்த அளவாக யூனிட் ஒன்றுக்கு 75 பைசா மற்றும் அதிகபட்ச அளவாக யூனிட் ஒன்றுக்கு ரூ.3.05 என உள்ளது. இதனை மாற்றி குறைந்தபட்ச அளவாக யூனிட் ஒன்றுக்கு ரூ.1 மற்றும் உயர்ந்தபட்ச அளவாக ரூ.4.50 எனவும் மாற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த மின் அழுத்த இனத்தில் உள்ள தெருவிளக்கு மற்றும் பொது குடிநீர் வழங்குவதற்காக விதிக்கப்படும் கட்டண விகிதத்தில் இனிமேல் கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு யூனிட் ஒன்றிற்கு ரூ.3.40 எனவும், நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியவற்றிற்கு ரூ.3.50 எனவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொது வழிபாட்டுத் தலங்களுக்கு தற்போது விதிக்கப்படும் மின் கட்டணத்தில் எவ்வித மாறுதலும் இல்லை. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு யூனிட் ஒன்றுக்கு ரூ.3லிருந்து ரூ.3.80 ஆக உயர்த்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த மின் அழுத்த இனத்தில் உள்ள சிறு குடிசைத் தொழிலுக்கான மூன்று அடுக்கான கட்டண விகிதமான யூனிட் ஒன்றுக்கு ரூ.1.40, ரூ.2.25, ரூ.2.50 என இருப்பதை முறையே, ரூ.1.60, ரூ.2.50 மற்றும் ரூ.3 என உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறைந்த மின் அழுத்த தொழிற்சாலை இனத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பம் சம்மந்தமான மின் இணைப்புகளுக்கும் இரண்டு அடுக்கு கட்டண விகிதமான யூனிட் ஒன்றுக்கு ரூ.3.20 மற்றும் ரூ.3.90 என்றிருப்பதை முறையே ரூ.3.50 மற்றும் ரூ.4.30 ஆக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வணிக மற்றும் இதர வகையான மின் இணைப்புகளுக்கு இரண்டு அடுக்கு கட்டண விகிதமான யூனிட் ஒன்றுக்கு ரூ.3.75 மற்றும் ரூ.4.25 என்றிருப்பதை முறையே ரூ.4.50 மற்றும் ரூ.5 ஆக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த மின் அழுத்தத்தில் உள்ள மின் இணைப்புகளுக்கு மாதாந்திர குறைந்தபட்ச கட்டணத்திலும் மற்றும் நிலை கட்டணத்திலும் எவ்வித மாற்றமும் இல்லை.

குடிசைகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். விவசாய மின் இணைப்புகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும்.

**போக்குவரத்து**

தமிழ்நாட்டில் 19 போக்குவரத்துக் கழகங்கள் தற்போது 16,906 பேருந்துகளை இயக்கி வருகின்றன. இப்போக்குவரத்துக் கழகங்கள் கடந்த 6 ஆண்டுகளாக தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதினால் அவைகளின் நிதி நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் குறைந்த பேருந்து கட்டணமும், அதிக இயக்கச் செலவினமாகும். 31–3–2001 முடிய அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் அடைந்த மொத்த நஷ்டம் ரூ.2035.02 கோடியாகும். இந்த நட்டத்திற்கான மூல காரணங்கள் – டீசல் விலை ஒரு லிட்டருக்கு ரூ.5.65–ல் இருந்து ரூ.18 ஆக உயர்ந்தது மற்றும் அதிகரித்து வரும் சம்பளச் செலவினம் ஆகியவை ஆகும்.

இதன் காரணமாக பெரும்பாலான போக்குவரத்துக் கழகங்களில் வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை, கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு பிடித்தம் செய்யப்பட்ட தொகை முதலியன நிலுவையில் வைக்கப்பட்டு அத்தொகை டீசல் வநியோகம் செய்த நிறுவனங்களுக்கு பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திடமிருந்து இந்தப் போக்குவரத்து கழகங்கள் ரூ.995.51 கோடி கடன் பெற்றுள்ளதால் வட்டிச் செலவினம் 2000–01ஆம் ஆண்டில் ரூ.158 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த 6 ஆண்டுகளாக போக்குவரத்துக் கழகங்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் நட்டத்தின் காரணமாக கழிக்கப்பட வேண்டிய பழைய பேருந்துகளை தேவையான அளவு மாற்றமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. 6,552 கழிக்கப்பட வேண்டிய பேருந்துகள் (39 சதவிகிதம்) போக்குவரத்துக் கழகங்களினால் இயக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் கழகங்கள் அன்றாட பராமரிப்புக்குத் தேவையான உதிரி பாகங்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் அக்டோபர் 2001 நிலவரப்படி சுமார் 803 பேருந்துகள் பழுதடைந்து தடத்தில் இயக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பேருந்துகளின் இயக்கத்தை மேம்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

19 போக்குவரத்துக் கழகங்களை 7 போக்குவரத்துக் கழகங்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் செலவினத்தை குறைக்கவும், அதிகரித்து வரும் சம்பள செலவினத்தை கருத்தில் கொண்டு பேருந்து இயக்கத்திற்கு தேவையான ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களை மட்டுமே தேவையான அளவு நியமித்து, இதர வகைத் தொழிலாளர்களை குறைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் தான் பேருந்து கட்டணம் மிகக் குறைவாக உள்ளது. எனவே மேற்கூறிய நடவடிக்கைகள் தவிர, நட்டத்தை ஈடு செய்ய பேருந்து கட்டணத்தை உடனடியாக உயர்த்துவதைத் தவிர மாற்று வழி ஏதுமில்லை.

இனி மாநகர மற்றும் நகரப் பேருந்துகளில் பயணக் கட்டணம் முதல் நிலைக்கு (First Stage) ரூ.2 ஆகவும், கடைசி நிலையான (Last Stage) 23ஆவது நிலை ரூ.10 ஆகவும் மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

புறநகர், மலைப்பகுதி மற்றும் விரைவுப் பேருந்துகளுக்கான கட்டணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதாவது, புறநகர் (சாதாரணம்) இனத்தின் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 22 பைசாவிலிருந்து 30 பைசாவாக உயர்த்தப்பட்டும், மலைப்பகுதியில் கட்டணம் 1 கி.மீட்டருக்கு 23 பைசாவிலிருந்து 37 பைசாவாக உயர்த்தப்பட்டும், சொகுசு விரைவு பேருந்திற்கான கட்டணம் 1 கி.மீட்டருக்கு 25 பைசாவிலிருந்து 36 பைசாவாக உயர்த்தப்பட்டும், அதிசொகுசு விரைவு பேருந்திற்கான கட்டணம் 1 கி.மீட்டருக்கு 30 பைசாவிலிருந்து 42 பைசாவாக உயர்த்தப்பட்டும், மலைப்பகுதி சொகுசு விரைவு பேருந்திற்கான கட்டணம் 1 கி.மீட்டருக்கு 30 பைசாவிலிருந்து 42 பைசாவாக உயர்த்தப்பட்டும், மலைப்பகுதி அதிசொகுசு விரைவு பேருந்திற்கான கட்டணம் 1 கி.மீட்டருக்கு 35 பைசாவிலிருந்து 47 பைசாவாகவும் உயர்த்தப்பட்டும் கட்டண விகிதங்கள் மாற்றியமைக்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அரசுக்கு கூடுதலாக நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டிய இச்சூழ்நிலையில் சில வகை மோட்டார் வாகனங்களுக்கு மோட்டார் வாகன வரியை சிறிதளவு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 51 சி.சி.–க்கும் அதிகமான கொள்ளளவு கொண்ட இரண்டு சக்கர வண்டிகளைப் பொருத்த அளவில் தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்படி செலுத்தப்பட வேண்டிய ஆயுட்கால வரியில் சலுகை அளிக்கும் வகையில், 19–2–2001 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை திரும்பப் பெறப்படுகிறது.

பல்வேறு ரக மோட்டார் வாகனங்களுக்கான மோட்டார் வாகன வரி கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட முடிவ செய்யப்பட்டுள்ளது.

சாதாரண வாடகை சீருந்திற்கான 5 ஆண்டு வரி ரூ.3500–லிருந்து ரூ.4000 ஆகவும், சுற்றுலா சீருந்திற்கான 5 ஆண்டு வரி ரூ.5000–லிருந்து ரூ.6,500 ஆகவும், மேக்ஸி கேப் (Maxi Cab) வாகனத்திற்கான (12 இருக்கைகள்) காலாண்டு வரி ரூ.175–லிருந்து ரூ.250 ஆகவும், தனியார் பணி வாகனத்திற்கான (55 இருக்கைகள்) காலாண்டு வரி ரூ.75–லிருந்து ரூ.100 ஆகவும், ஆம்னி பேருந்து வாகனத்திற்கான (35 இருக்கைகள்) காலாண்டு வரி ரூ.2000–லிருந்து ரூ.3000 ஆகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சரக்கு வண்டிகள் (லாரிகள்) பொறுத்த வரையில் சுமை மற்றும் அளவின் அடிப்படையில் காலாண்டு வரி, 3000 கிலோ வரை கொண்ட வாகனத்திற்கு ரூ.545–லிருந்து ரூ.600 ஆகவும், 3001 கிலோ – 5500 கிலோ வரையிலான வாக்னத்திற்கு ரூ.885–லிருந்து ரூ.950 ஆகவும், 5501 கிலோ முதல் 9000 கிலோ வரையிலான வாகனத்திற்கு ரூ.1355–லிருந்து ரூ.1500 ஆகவும், 9001 கிலோ முதல் 12000 கிலோ வரையிலான வாகனத்திற்கு ரூ.1755–லிருந்து ரூ.1900 ஆகவும், 12001 கிலோ முதல் 13000 கிலோ வரையிலான வாகனத்திற்கு ரூ.1930–லிருந்து ரூ.2100 ஆகவும், 13001 கிலோ முதல் 15000 கிலோ வரையிலான வாகனத்திற்கு ரூ.2300–லிருந்து ரூ.2500 ஆகவும், 15000 கிலோவிற்கு அதிகமான வாகனத்திற்கு ரூ.2300–லிருந்து (ஒவ்வொரு கூடுதல் 250 கிலோவிற்கும் கூடுதலாக ரூ.50 உட்பட) ரூ.2500 (ஒவ்வொரு கூடுதல் 250 கிலோவிற்கு கூடுதலாக ரூ.100 உட்பட) ஆகவும், மோட்டார் வாகன வரி உயர்த்தப்படும்.

இரண்டு சக்கர வாகனங்களுக்கான ஆயுட் கால வரி இயந்திர திறன் அடிப்படையில் 50 சிசி–க்கும் கீழ் உள்ளவற்றிற்கு ரூ.1000 எனவும், 51 சிசி முதல் 75 சிசி வரையிலான வாகனங்களுக்கு ரூ.1000–லிருந்து ரூ.1300 ஆகவும், 76 சிசி முதல் 170 சிசி வரையிலான வாகனங்களுக்கு ரூ.1750–லிருந்து ரூ.2200 ஆகவும், 170 சிசிக்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு ரூ.2340–லிருந்து ரூ.2500 ஆகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரம் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக தனியார் பேருந்துகளை இயக்க கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தற்போது அமலில் உள்ளது போன்று அரசு போக்குவரத்துக்கழக அனுமதி பெற்றுள்ள வழித்தடங்களில் தனியார் பேருந்துகளை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலையில் மாற்றங்கள்

தமிழ்நாட்டில் அக்டோபர் 2001–ல், சங்கங்களின் அளவில், பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 21.48 இலட்சம் லிட்டராகவும், அதில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கொள்முதல் 17.51 இலட்சம் லிட்டராகவும் உள்ளது. சென்ற ஆண்டு 2000–2001இல் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 16.99 இலட்சம் லிட்டராகவும் பால் விற்பனை7.22 இலட்சம் லிட்டராக இருந்தது.

தமிழக அரசு 1998ஆம் ஆண்டு பாலின் கொள்முதல் மற்றும் விற்பனை விலையை மாற்றியமைத்த பின்னர், இந்த விற்பனை விலை உயர்விற்கு எதிர்ப்பு ஏற்பட்டதால், பால் விற்பனை விலை குறைக்கப்பட்டது. அதனை ஓரளவு ஈடுகட்ட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு இதுவரை ரூ.50.70 கோடி கடனாக இணையத்திற்கு ரூ.28 கோடி வழங்கப்பட்டும் உள்ளது. 1998–ல் பால் விற்பனை விலையை ஏற்றி பின்னர் குறைத்ததால் ஏற்பட்ட நிதியிழப்பை இணையத்திற்கு இதுநாள் வரை அரசே ஈடுகட்டி வந்துள்ளது.

தற்போதுள்ள மோசமான நிதி நிலையை கருத்தில் கொண்டு இனி வருங்காலங்களில் விலை ஏற்றாமல் இருப்பின் ஏற்படும் நிதியிழப்பை அரசு ஈடு செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையால் 29–5–2000 அன்று ஏற்கெனவே பிறப்பித்த அரசாணை நிலை எண்.87–ஐ அமலுக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆணையின்படி, பால் கொள்முதல் மற்றும் விற்பனை விலையை அவ்வப்போது உயர்த்திக் கொள்ள பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் இணையத்திற்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விலையை மாற்றியமைக்கும் போது பால் உற்பத்தியாளர் நலனையும், நுகர்வோர் நலனையும் கருத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்னும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பொது விநியோகத் திட்டத்தில் மாற்றம்

மாநில அரசு கடுமையான நிதி பற்றாக்குறையில் உள்ளதால் உடனடியாக உணவிற்கான மானியத்தைக் குறைப்பது தவிர்க்க முடியாத தேவையாகும். பொது விநியோக முறையின் கீழ் வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் முதலியவற்றைக் கண்டறிந்து இந்த இனங்களுக்கு வெவ்வேறு அளவிலான விலை நிர்ணயம் செய்வதன் மூலம் தற்போதைய வருடாந்திர மானிய அளவான ரூ.1540 கோடியில் சுமார் ரூ.600 கோடி அளவிற்கு மானியச் செலவினைக் குறைக்க இயலும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்பங்களை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்கள் என பாகுபாடு செய்து அதனடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களுக்கு விற்பனை விலைகளை நிர்ணயம் செய்யப்படும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் சில்லரை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 ஆகவும், வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்காக வழங்கப்படும் அரிசியின் சில்லரை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.9 ஆகவும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டும் மைய அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் சர்க்கரையின் சில்லரை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.9 ஆகவும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டும் மைய அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் சர்க்கரையின் சில்லரை விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.13.25 என நிர்ணயம் செய்யப்படுகிறது.

## அரசு மருத்துவமனைகளில் சீர்திருத்த நடவடிக்கைகள்

சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்க மக்கள் நல்வாழ்வுத் துறையின் நிதி ஆதாரங்களை பெருக்குவதற்காக, அரசு மருத்துவ நிறுவனங்களில் வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகளில், குறிப்பிட்ட நில மருத்துவச் சிகிச்சைகளுக்கு கட்டணங்கள் விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ் படிப்புக்கான இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அதில் 50 சதவீத எண்ணிக்கையிலான இருக்கைகள் கட்டணம் செலுத்துவதன் பேரில் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்காக ஒதுக்கீடு செய்யவும்; மருத்துவமனைகளில் கட்டணப் பார்வையாளர் நேரம் நிர்ணயிக்கப்பட்டு அப்போது வருகை தரும் பார்வையாளர்களிடமிருந்து அடையாளக் கட்டணமாக ரூ.5 வசூலிக்கவும்; மருத்துவம் மற்றும் துணை மருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு, மருத்துவக் கல்லூரிகளிலுள்ள கட்டண அமைப்பு வீதங்களை அதிகரிக்கவும்; சிறப்பு சிகிச்சை (Super Speciality) பெறுவதற்காக வரும் நோயாளிகடமிருந்து புற நோயாளி சீட்டுக் கட்டணமாக (Out Patient) ரூ.5 விதிக்கவும் தமிழக அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

## சமச்சீர் தளவரி அமல்படுத்துதல்

உள்நாட்டு வணிக வரிகளை சீரமைப்பது குறித்து விவாதிக்க 16–11–1999 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதலமைச்சர்கள் மற்றும் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் 1–1–2000 முதல் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் சமச்சீர் தளவரியை நடைமுறைப்படுத்தல் வேண்டும் என ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது.

தளவரியினை முழுமையாக அமல்படுத்தாத தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசின் மானியம் மற்றும் நிதி உதவிகளை நிறுத்தி வைக்கும்படி, அதிகாரமளிக்கப்பட்ட நிதி அமைச்சர்களின் குழு மத்திய அரசின் நிதியமைச்சகத்திற்கு பரிந்துரை செய்து கடிதம் எழுதியுள்ளது. ஏற்கெனவே தமிழகத்தில், சில முக்கிய இனங்களைத் தவிர்த்து மற்ற எல்லா பொருட்கள் மீதும் சமச்சீர் தளவரி விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சூழ்நிலையில் விடுபட்டுள்ள பொருட்கள் மீதான வரி விகிதத்தை உடனடியாக சமச்சீர் தளவரி விகிதத்துக்கு இணையாக மாற்றி அமைத்து, சமச்சீர் தளவரி விகிதங்கள் முழுமையாக அமல்படுத்தப்பட்டு விட்டதாக தெரிவிப்பது, மத்திய அரசின் மானியம் மற்றும் நிதி உதவிகளைத் தொடர்ந்து பெற்றிட அவசியமாகிறது.

அதன்படி சமச்சீர் தளவரி, சமையல் எண்ணெய், பருத்தி பின்னலாடைகள், கணினி மென் பொருட்கள் ஆகிய மூன்று பொருட்களின் மீது 4% என விதிக்கப்பட்டு, அதன் மூலம் அரசிற்கு ரூ.31.19 கோடி கூடுதல் வருவாயும், யூரியா உரத்திற்கு 2% லிருந்து 4% ஆக உயர்த்துவதன் மூலம் அரசிற்கு ரூ.6.32 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். இது தவிர அரசின் நிதியாதாரங்களை பெருக்க ஏதுவாக விற்பனை வரி உயர்வு, இந்திய தயாரிப்பு அயல்நாட்டு வகை மது வகைகள் (IMFL) மீதான விற்பனை வரி உயர்வு 50%–லிருந்து 55% ஆக உயர்த்துவதன் மூலம் ரூ.140 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். மற்றும் காஸ்டிக் சோடா, காற்றழுத்த விளக்குகள் போன்ற சில பொருள்களுக்கு 11%–லிருந்து 12% ஆக உயர்த்துவதன் மூலம் அரசிற்கு ரூ.5 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும். இது தவிர டீசல், பர்னேஸ் (Furnace) ஆயில், லோ சல்பர் ஹெவி ஸ்டாக் (LSHS) மற்றும் சிமெண்ட் மீது நுழைவு வரி விதித்தல் மூலம் அரசிற்கு ரூ.30 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும்.

தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கும் இந்த முடிவுகளினால் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை, எளியவர்களுக்கு சிரமங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் அரசின் சீரிய திட்டங்களுக்குகுறிப்பாக வறுமைஒழிப்புத்திட்டங்களுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் போதிய நிதி இந்த நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுமக்கள் அரசின் இந்த நடவடிக்கைகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டு தடம் புரண்ட தமிழகத்தின் நிதிநிலைமையை சரிபடுத்த முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

• • •



# வீட்டுவசதித்துறை அமைச்சர் ஆய்வு

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் கோயம்பேடு காய்கறி அங்காடிகளை 3–11–2001 அன்றும் மற்றும் கோயம்பேடு பேருந்துநிலையத்தை 5–11–2001 அன்றும் பார்வையிட்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையும் மாலையும் அதிகாரிகளை அங்காடியை ஆய்வு செய்து சுத்தம் சுகாதாரத்தை பராமரிக்குமாறு அறிவுரை கூறினார். மேலும் பேருந்து நிலையத்திலுள்ள கழிப்பறைகள் மற்றும் பயணிகள் தங்குமிடம் ஆகியவற்றை அதிக அளவில் கட்டுமாறு அறிவுரை வழங்கினார். பேருந்தில் ஏற, இறங்க வரும் பயணிகளை கொண்டு விடும் ஆட்டோ, டாக்ஸி மற்றும் தனியார் வாகனங்கள் (இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்) நிறுத்துவதற்கு மேலும் இடவசதி செய்யுமாறு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (சி.எம்.டி.ஏ.)**

1. கோயம்பேடு மார்கெட்டில் உள்ள சாலைகளை செப்பனிட ரூ.4.00 கோடி செலவில் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட உள்ளன.
2. கோயம்பேடு பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் 2001, ஜனவரியில் முடிவடைந்துவிடும். இது சம்பந்தமாக உறுப்பினர் – செயலர், போக்குவரத்து கழகங்கள், போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து காவல்துறை அதிகாரிகளுடன் பேசி வருகிறார்.
3. சென்னை மாநகரில் காய்கறி, பழங்கள் மற்றும் பூ விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகளில் இன்னும் சிலர் கோயம்பேடு மொத்த வணிக வளாகத்திற்கு செல்லாமல், சென்னை மாநகரப் பகுதியில் மொத்த வியாபாரிகள் இன்னும் வியாபாரம் செய்கின்றனர். அவர்களை வெளியேற்றி, கோயம்பேட்டிற்கு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.
4. கட்டட வரன் முறைத்திட்டம்

இதுவரை 6,300 விண்ணப்பங்கள் விற்பனையாகி உள்ளன. 30–11–2001 வரை மனுக்கள் பெறப்படும். கட்டட வரன்முறைத் திட்டத்தில் 31–7–2001க்குள் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் 30–11–2001க்குள் மனு செய்ய வேண்டும். 1–8–2001க்கு பின்பு விதி மீறல்களுடன் கட்டப்பட்ட கட்டடங்கள் வரன்முறைத் திட்டத்தில் மனு செய்ய இயலாது.

அதுபோன்ற கட்டடங்கள் உடனடியாக இடிக்கப்படும். 1500 நோட்டீசுகள் இதுவரை கட்டடம் இடிப்பது சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

''குடும்பத்திற்கு ஒரு வீடு'' என்ற முறையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 2001ஆம் ஆண்டு ஜூன் முதல் செப்டம்பர் முடிய த.நா.வீட்டுவசதி வாரிய வீடுகள் 1500க்கும் மேல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும் கைவசமுள்ள நலிந்தோர்க்கான மனைகள் மொத்தம் 8,300யையும் பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து விண்ணப்பம் பெற்று ஒதுக்கீடு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கைவசமுள்ள வீடு மற்றும் மனைகளை உடனடியாக அந்தந்த மாவட்டங்கள் வாரியாக பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்து விண்ணப்பங்களை பெற்று தகுதிக்கு ஏற்ப விலைக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரங்களில் இதற்கான அறிவிப்புகள் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட உள்ளன.

**தமிழ்நாடு வீட்டுவசதி கூட்டுறவு இணையம்**

விவசாயிகளுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி மற்றும் சேவைக்கட்டணம் ஆகியவற்றை முன்பே அரசு அறிவித்துள்ளபடி தள்ளுபடிக்கான உத்திரவுகள் வழங்கப்பட உள்ளன. கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்தவரை 170க்கு மேலும் சங்கங்களின் மீது குறைகள் அரசுக்கு தெரிய வந்துள்ளன. அதில் 21 சங்கங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதி சங்கங்களின் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்**

பறக்கும் இரயில் திட்டத்தில் பாதிக்கப்பட்ட குடிசைவாசி மக்கள் மற்றும் பொதுப்பணித்துறை கால்வாய் கரைகளில் வெள்ள அபாயத்திற்குப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்கள் போன்றவர்களுக்கு மொத்தம் 11,416 வீடுகள் ரூ.57.25 கோடி செலவில் இந்த ஆண்டு (2001–2002) கட்டித்தர திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதைத்தவிர, மாவட்ட வாரியாக, ஒவ்வொரு மாவட்டமும், திட்டப் பணிகளை, ஊரக வளர்ச்சித்துறையின் மூலம், 30 முதல் 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மொத்தமாக, இந்த ஆண்டுக்குள், அனைத்து திட்டங்களின் மூலம் 2½ முதல் 3 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிடும். ●

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து தொழில் துறை அமைச்சர் ஆய்வு

தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள் நவம்பர் 8ஆம் தேதி சென்னை, நந்தனத்தில் உள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் அக்கழகத்தின் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார். கடன் ஒப்பளித்தல், வழங்குதல் மற்றும் வசூலித்தல் ஆகியவற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய வேண்டும் என்று அறிவுறுத்தினார். கழகத்தின் இலாபம் நடப்பாண்டு 2001-2002 முடிவில் மேலும் அதிகமாக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கழகத்தின் உயர் அதிகாரிகள், அமைச்சரிடம் கழகத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்களான தேசிய மூலதன நிதி, மறுநிதி உதவி திட்டத்தின் கீழ், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நவீன படுத்துதல் திட்டம், ஜவுளி மற்றும் பின்னலாடை தொழில் மேம்பாட்டு நிதி திட்டம் ஆகிய திட்டங்களுக்கு வங்கிகளுக்கு நிகரான வட்டி விகிதத்தில் கடன் அளிப்பது குறித்து விளக்கி கூறினர்.

அமைச்சர் தொழில் முனைவோர் களுக்கு தரம் மற்றும் உடனடியான சேவை ஆகியவற்றை கருத்தில் கொண்டு சேவை செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடம் வலியுறுத்தி சொன்னார்.

• • •

## டான்சியில்...

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் டான்சி (தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்) மத்திய அலுவலகம், கிண்டிக்கு 7.11.2001 அன்று நேரில் சென்று டான்சியின் செயலாக்கத்தினை விரிவாக ஆய்வு செய்தார். டான்சியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. கே. தீனதயாளன், ஐ.ஏ.எஸ்., பொது மேலாளர் திரு. பி. பாலகிருஷ்ணன் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர்.

டான்சியின் செயலாக்கம், நிதி நிலைமை, டான்சியின் உற்பத்திப் பெருக்கம் போன்ற பல கருத்துகள் ஆய்வு செய்யப்பட்டது. சென்ற ஆண்டு ஏப்ரல் 2000 முதல் அக்டோபர் 2000 வரை ரூபாய் 21 கோடி உற்பத்தி செய்த டான்சி, இந்த ஆண்டு ஏப்ரல் 2001 முதல் அக்டோபர் 2001 வரை ரூபாய் 27 கோடியாக அதிகரித்து உற்பத்தி செய்துள்ளதை அமைச்சர் பாராட்டினார். வாடிக்கையாளர்களின் திருப்தியை கருத்தில் கொண்டு டான்சியில் தயாரிக்கப்படும் அனைத்து பொருட்களும் உயர்ந்த தரத்துடன் தொடர்ந்து தயாரிக்க வேண்டுமென அறிவுறுத்தினார். டான்சியின் செயலாக்கத்தினை மேலும் விரிவாக்க வலியுறுத்தினார்.

டான்சியில் செய்யும் பொருட்களை, எல்லா அரசு துறைகளும், நிறுவனங்களும், டான்சியிடமிருந்தே வாங்குவதற்கு ஆவன செய்வதாக மாண்புமிகு அமைச்சர் கூறினார்.

2001–2002 நிதி நிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவித்தபடி டான்சிக்கு முன்னுரிமை வழங்கும் (Purchase Preference) அரசாணையினை வழங்கினால் டான்சி இன்னும் சிறப்பாக செயல்பட இயலும் என எடுத்து கூறியபோது, அமைச்சர் அவர்கள் அதற்கான உரிய நடவடிக்கைகள் பரிசீலனையில் இருப்பதாக கூறினார்.

அமைச்சர் அவர்கள் கிண்டியிலுள்ள டான்சி தச்சுப்பணி தொழிற்கூடத்தையும் (Tansi Furniture Works, Guindy) பார்வையிட்டு அதன் ஆக்க செயல்திறனை பாராட்டினார்.

• • •

# மருத்துவத்துறைச் சீரமைப்பு

### பார்வையாளர் நேரம் அல்லாத நேரங்களில் (Non-Visiting Hours) வருகை தரும் பார்வையாளர்களிடமிருந்து கட்டணம்

அரசு மருத்துவமனை ஒவ்வொன்றுக்கும், உள்நோயாளிகளை வந்து பார்த்துச் செல்வதற்கு பார்வையாளர் நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், பார்வையாளர்கள் அரசு மருத்துவமனைகளில் விருப்பம்போல் தற்சமயம் வந்து போய் வருகின்றனர். இதனால் மருத்துவமனைகளில் எப்போதும் அதிகக்கூட்டம் ஏற்படுகிறது. இந்நிலை நோயாளிகளை தொந்தரவு படுத்தப்படுகிறது. உரிமம் வழங்கப்படாத விற்பனையாளர்களும் சென்னைக்கு வருகிறவர்களும் மருத்துவமனைக்கு வந்து அங்குள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதனால், மருத்துவ மனையிலுள்ள வசதிகள் நோயாளிகளுக்கு கிடைக்கப் பெறாமல் போய்விடுகிறது.

நோயாளிகளுக்கு அவர்கள் விரைவில் குணமடைய வேண்டி உகந்த சூழ்நிலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மருத்துவமனைக்கு வரும் பார்வையாளர்களுக்கு தடைகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. உலக அளவில் நிலவும் நடைமுறைகளுக்கு ஒட்டித்தான் இத்தடைகள் கொண்டு வரப்படுகிறது. நோயாளிகளின் நலன் கருதியும் இத்தடை கொண்டு வரப்படுகிறது. நடைமுறையில் உள்ளது போல குறிப்பிட்ட பார்வையாளர்கள் நேரங்களில், பார்வையாளர்கள் நோயாளிகளை பார்க்க இலவசமாக அனுமதிக்கப்படுவர். இது மட்டுமல்லாமல், ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு உடனிருப்பவர் இருக்க வேண்டி ஒரு அனுமதிச் சீட்டு வழங்கப்படும். இந்த அனுமதிச் சீட்டு மூலம் நோயாளிகளை கவனித்துக் கொள்ள முடியும். அபாய கட்டத்தில் உள்ள நோயாளிகளைக் கவனிக்க வேண்டி இரண்டு அனுமதிச் சீட்டு வழங்கப்படும். ஒன்று பார்வையாளர் அனுமதிச் சீட்டாகும். மற்றொன்று இரவு நேரத்தில் நோயாளியோடு தங்கியிருப்பவருக்கு வழங்கப்படுவதாகும். பார்வையாளர் நேரம் தவிர பிற நேரத்தில் நோயாளியைப் பார்க்க வருபவர் அனுமதிச் சீட்டு வைத்துக் கொள்ளவில்லை என்றால் அவரிடமிருந்து ரூ.5 கட்டணம் வசூலிக்கப்படும். அவ்வாறு வசூலிக்கப்படும் தொகை மருத்துவமனையின் முதல்வர் மற்றும் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படும். இத்தொகை மருத்துவமனையின் துப்புரவினை மேம்படுத்தவும், குடிநீர் வசதியை ஏற்படுத்தவும், உள்கட்ட வசதிகளை ஏற்படுத்தவும் பயன்படுத்தப்படும். இதன் மூலம் நோயாளிகள் தங்கிவரும் இடத்தின் நிலை மேம்பட உதவும். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமையக மருத்துவமனைகளில் ரூ.5 கட்டணமாக வசூலிக்கப்படும். வட்ட மருத்துவ மனைகளிலும், வட்டம் சாரா மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இக்கட்டணம் வசூலிக்கப் படமாட்டாது.

### சிறப்பு துறைகளில் சிகிச்சை பெற

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தினமும் சுமார் 65,000 நோயாளிகள் இலவச சிகிச்சை பெறுகின்றனர்.



இவர்களில் சிலர் கீழ்க்கண்ட 10 சிறப்பு பிரிவு மருத்துவ துறைகளில் சிகிச்சைக்காக வருகின்றனர்.

1. இதய நோயியல்
2. சிறுநீரகவியல்
3. நரம்பியல்
4. சிறுநீரியல்
5. நீரிழிவு நோயியல்
6. உயர் இரத்த அழுத்த நோயியல்
7. ஒட்டு தசை அறுவை சிகிச்சையியல்
8. குடல் இரப்பை நோய் சிகிச்சையியல் – மருத்துவம்
9. குடல் இரப்பை நோய் சிகிச்சையின் அறுவை சிகிச்சை
10. இதய நோய் அறுவை சிகிச்சை

இந்த சிறப்பு பிரிவு துறைகளில் சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது. ஏழை எளிய நோயாளிகளுக்கு நவீன முறையில் சிகிச்சையளிக்க ஏதுவாக கருவிகளை மருத்துவமனைகளுக்கு அளிப்பதற்கு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ரூபாய் 86 கோடியில் கருவிகளை வாங்குவதற்காக பின்லாந்து நாட்டுடன் இந்த அரசு ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. அதேபோன்று புற்றுநோய் சிகிச்சைக்காக அமெரிக்காவின் சி.டி.சி. அட்லாண்டா நிறுவனத்துடன் இணைந்து ரூ.5 கோடி செலவில் தாம்பரம் நெஞ்சக மருத்துவமனையை மேம்படுத்தும் திட்டத்தினை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. இந்த சிறப்பு துறைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு முறையான சிகிச்சை அளிக்க மருத்துவ விவரங்கள் அடங்கிய அட்டைகளை பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த சிறப்பு துறைகளில் அளிக்கப்படும் அந்த சிகிச்சை சில காலம் தொடர வேண்டியுள்ளதாலும் சிகிச்சைக்கு செலவு அதிகமாக ஏற்படுவதாலும் சிகிச்சையைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியுள்ளதாலும் இச்சிகிச்சை விவர அட்டைகளை பராமரிக்க வேண்டியுள்ளது.

எனவே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் அட்டைகளை பராமரிக்க நோயாளிகளிடமிருந்து குறைந்தபட்சமாக ரூ.5 கட்டணமாக வசூலிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த முறையில் பயன்பெறும் நோயாளிகள் மருத்துவமனைக்கு வருகை தரும் முதல் தடவை மட்டும் இந்த ரூ.5 கட்டணத்தை செலுத்தினால் போதுமானது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் முதல்வரிடம் ஒப்படைக்கப்படும். இத்தொகை மருத்துவமனைகளில் நோயாளிகளின் சிகிச்சை பற்றிய விவர அட்டையை பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படும். மேலும் சிகிச்சை பற்றிய விவரம் அடங்கிய அட்டை (Booklet) ஒவ்வொரு நோயாளிக்கும் வழங்கப்படும். இது நோயாளிகளின் எதிர்கால சிகிச்சையை தொடர்வதற்கு ஏதுவாக இருக்கும்.

# மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டில் வாழும் இந்திய மாணவர்களுக்கு இடங்கள் ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் தற்போது 11 அரசு மருத்துவக் கல்லூரிகளும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்படும் ஒரு மருத்துவக் கல்லூரியும் உள்ளது. மொத்தம் 1,295 மாணவர்கள் இந்த 12 மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படுகிறார்கள். மருத்துவ மாணவர்களுக்கு சிறந்த மருத்துவக் கல்வி அளிக்கவும் மற்றும் மருத்துவமனைகளில் நவீன மருத்துவ தொழில்நுட்பத்தினை ஏற்படுத்துவதற்கும், மருத்துவக் கல்லூரி மற்றும் இத்துடன் இணைந்துள்ள மருத்துவமனைகளில் விலை உயர்ந்த நவீன மருத்துவக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் வேலூர் மற்றும் கன்னியாகுமரியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரங்கள் பெருமளவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன கருவிகள் ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவினம் மற்றும் அறிவிக்கப்பட்டுள்ள புதிய மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்த ஆகும் செலவினத்தை மேற்சொன்ன புதிய வருவாய் ஆதாரம் தேட முடிவு செய்யப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிகளில் தற்போதுள்ள அடிப்படை வசதிகளை பயன்படுத்தி, அரசு மருத்துவக் கல்லூரிகளில் 315 கூடுதல் இடங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 315 இடங்களில் 150 இடங்கள் அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் நிதி செலுத்தி படிப்பதற்கும் மீதி 165 இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். அயல்நாட்டில் வாழும் இந்திய மாணவர்களிடமிருந்து



பெறப்படும் நிதியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு துவங்கப்பட உள்ள மருத்துவமனை வளர்ச்சி, ஆராய்ச்சி மற்றும் கல்வி சங்கத்திற்கு ஒப்படைக்கப்படும். இந் நிதியினை இச்சங்கம், மருத்துவ வசதிகள், ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்தப் பயன்படுத்தும். இந்த நடவடிக்கை நோயாளிகள் நல்ல சிகிச்சை பெற வழிவகை செய்யும். மாணவர்களும் நவீன மருத்துவ வசதிகள் மற்றும் படிக்கும் வசதிகள் அடைந்திட துணை புரியும். •

# மருத்துவக் கல்லூரிகளில் பயிற்சிக் கட்டணம்

தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கற்பிக்கும் மருத்துவமனைகளில், மருத்துவ மற்றும் மருத்துவ சாரா மாணவர்களுக்கு பல பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள தனியார் மருத்துவக்கல்லூரி மாணவர்கள், பிற மாநில மாணவர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து மருத்துவப்படிப்பு முடித்து வரும் மாணவர்கள் ஆகியோர் மேற்சொன்ன பயிற்சிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

மருத்துவ நிறுவனங்களில் இந்தப் பயிற்சிக்கான தற்போதைய கட்டணம் குறைவாக உள்ளது. இந்தப் பயிற்சி அளிப்பதற்கான செலவினம் மற்றும் நவீன மருத்துவ கருவிகளை மருத்துவ கல்லூரிகளுக்கு வழங்குவது தொடர்பான செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இந்த கட்டண விகிதத்தை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

இதேபோல் தனியார் அறக்கட்டளைகள் மருத்துவம் சார்ந்த/பல் மருத்துவம்/மருத்துவக் கல்லூரிகள் துவங்க அவசியச் சான்றிதழ் வழங்கக்கோரும் விண்ணப்பங்களுக்கு ஆய்வுக்கட்டணம் எதுவும் தற்போது வசூலிக்கப்படுவதில்லை. இந்த விண்ணப்பங்களை ஆய்வு செய்யும்போது கல்லூரி ஆரம்பிக்கும் இடத்தைப் பார்வையிடல் போன்ற பல செலவினங்களை அரசு தற்போது ஏற்றுக்கொள்கிறது. எனவே இந்தச் செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு இந்த இனங்களுக்கும் விண்ணப்ப ஆய்வுக்கட்டணம் வசூலிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கட்டணம் மற்றும்திருத்திய கட்டணம் பின்வருமாறு:

| வகைபாடு | தற்போதுள்ள கட்டணங்கள் ரூபாய் | திருத்திய கட்டண்ங்கள் ரூபாய் |
|---|---|---|
| **கட்டாய முயற்சி முறை :** | | |
| உள்ளுறை பயிற்சி மருத்துவப் படிப்பிற்காக வருகின்ற வெளிநாட்டு மாணவர்கள் | 2,400 | 20,000 |
| பிற மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள் | 1,200 | 10,000 |
| தமிழ்நாட்டிற்குள் உள்ள ஏனைய தனியார் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் | 600 | 7,500 |
| துணை மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்கள் | 600 | 1,000 |
| பல்வேறு மருத்துவத் துறைகளில் சிறப்புப் பயிற்சி | 150 (3 மாதங்களுக்கு) | 500 (3 மாதங்களுக்கு) |
| தேசிய தேர்வு வாரியத்தின் தேர்வுகளில் பட்டயம் படிப்பு | 150 | 5,000 |
| தனியார் நிறுவனங்கள் மூலம் மருந்துகள் மாதிரி | – | திட்டம் செலவில் 5 சதவீதம் |
| திட்டப் பணிக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் வருகின்ற வெளிநாட்டு மாணவர்கள் (ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மாதங்கள்) | – | 5,000 |
| துணை மருத்துவ/பல்மருத்துவ/மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க இன்றியமையாச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கின்ற தனியார் அறக்கட்டளைகளுக்கு சரிபார்ப்புக் க்கட்டணம் | – | துணை மருத்துவக் கல்லூரிக்கு – 10,000<br>பல் மருத்துவக் கல்லூரிக்கு – 15,000<br>மருத்துவக் கல்லூரிக்கு – 25,000 |

# டெங்கு காய்ச்சல்

டாக்டர் **பஞ்சாட்சரம் செல்வராஜன்**

**ச**மீப காலமாகப் பரபரப்புடன் தமிழகத்தில் பேசப்பட்டு வரும் நோய் 'டெங்கு'.

ஆர்போ–வைரஸ்' (ARBOVIRUS) என்னும் ஒரு வகை அதிநுண்ணுயிர் இந்நோயைத் தோற்றுவிக்கும். அது என்ன ARBO-VIRUS? வேறு ஒன்றுமில்லை. ARTHROPOD-BORNE VIRUS என்பதையே சுருக்கமாக ARBO VIRUS என்கிறார்கள். ஒரு பூச்சி – இங்கு கொசு – மீது உப்பு மூட்டை ஏறிக்கொண்டு இந்த வைரஸ் பறந்து வருகிறது. அது அக்கொசுவின் உடலில் பெருகுவதில்லை. மனித ரத்தத்திலேயே பரவுகிறது.

குளிர்ப் பிரதேசங்களில் இந்நோய் காணப்படுவதில்லை. சீனாவில் 992 கி.பி.யில் இந்நோய் முதலில் தாக்கியதாக வரலாறு உள்ளது. 1780–ஆம் ஆண்டு அமெரிக்காவின் 'ஃபிலடெல்ஃபியா' நகரில் எலும்புடைக்கும் நோய் ஒன்று தாக்கியதாகவும், அது இதே 'டெங்கு'தான் என்றும் கருத்து நிலவுகிறது.

ஆனால் டெங்கு காய்ச்சல் உடலில் பல இடங்களில் இரத்தக் கசிவு ஏற்படுத்தத் தொடங்கியதும், அது அச்சம் தரும் நோயாக உருமாறி விட்டது.

## நோய்க்குறிகள் டெங்குவினால் தாக்குற்றால் கீழ்க்கண்ட அறிகுறிகள் தென்படலாம் :

1. திடீரென உயரும் உடல் வெப்பம்
2. தலைவலி
3. உடல் வலி
4. மூட்டுகளில் வலி
5. பசியின்மை
6. வாய்க் கசப்பு
7. மலச்சிக்கல்
8. வயிற்றில் முறுக்குவலி
9. கவட்டுப் பகுதியில் இழுப்பது போன்ற வலி
10. தொண்டைக் கமறல்
11. வாயின் உட்புறத்திலும், ஈறுகளிலும், மூக்கின் உள்ளும் இரத்தக் கசிவு.

மேற்கூறியவற்றில் முதல் நான்கு அறிகுறிகள் பெரும்பாலும் காணப்படும்.

## டெங்கு ரத்தக் கசிவு நோய் (DENGUE HEMORRHAGIC FEVER)

முன் கூறிய டெங்கு காய்ச்சல் அதிகக் கடுமையாகத் தாக்குவதை இவ்வாறு கூறுகிறார்கள். கீழ்க்கண்ட அறிகுறிகள் தென்படலாம் :

1. துவங்கியது முதல் கடுமையான காய்ச்சல்
2. வாந்தி
3. பசியின்மை
4. ஆங்காங்கே ரத்தக்கசிவு
5. வயிற்று வலி
6. உடலின் பல பகுதிகளில் திட்டுத்திட்டாக சிறுகொப்பளங்களுடன் கூடிய அழற்சி
7. நீணநீர் முண்டுகள் பல இடங்களில் பெருத்துப் போதல்
8. கல்லீரல் பெருத்து, தொடும்போது வலி ஏற்படுதல்

## நோய் உறுதி செய்வதற்கான சோதனைகள்

நமக்கு வந்துள்ளது டெங்கு இரத்தக் கசிவு நோய்தானா என்று கண்டறிய மிகவும் எளிதான சோதனை ஒன்று உள்ளது. இது மருத்துவர்கள் எல்லோரும் தங்கள் மருத்துவமனையில் செய்யக் கூடியது:


- இரத்த அழுத்தம் எவ்வளவு என முதலில் சோதிக்க வேண்டும்.
- பிறகு இதயச் சுருங்கழுத்தம் (SYSTOLIC PRESSURE), இதய விரிவழுத்தம் (DIASTOLIC PRESSURE) இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு அளவில் அழுத்தம் காட்டுமாறு, காற்றைச் செலுத்தி, அப்படியே ஐந்து நிமிடங்களுக்கு நிறுத்தி வைக்க வேண்டும்.

  ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, முழங்கையின் முன்புறத்தில் தோலடி இரத்தச் கசிவுகள் (PETECHIAR) எத்தனை உள்ளது என்று கணக்கிட வேண்டும். கசிவுகளின் எண்ணிக்கை ஒரு சதுர அங்குலத்திற்குள் 20க்கும் மேல் எனில், டெங்கு–இரத்தக் கசிவு எனக் கொள்ளலாம்.

## ஆய்வுக் கூட சோதனைகள்

- இரத்தத்தில் வட்டணுக்களின் எண்ணிக்கை 1,00,000/மி.மீ$^3$ க்கும் குறைவாகும் – இது நோய் தாக்கி 3–8 நாட்களுக்குள் நிகழலாம்.
- இரத்தச் சிவப்பணுக்களின் அடர்த்தி கூடலாம் (HEMATOCRIT ↑) இதற்குத் தந்துகிகள் அதிகமாக நீரை வெளியேற்றுவது காரணமாக இருக்கலாம்.

- ஊன்வழிச் சோதனைகள் (SEROLOGICAL TESTS) டெங்கு காய்ச்சலுக்கான பிரத்யேக உடற்காப்பு விளக்கி (ANTIGEN) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை கொண்டு, வந்திருக்கும் காய்ச்சல் டெங்குதானா என்று திட்டவட்டமாகக் கூறமுடியும்.



இதற்கான செலவு ரூ.400 முதல் ரூ.800 வரை தனியார் ஆய்வகங்கள் வசூலிக்கின்றன.

சென்னையில் அரசு கிங் இன்ஸ்டிட்யூட், அரசு மருத்துவமனைகளில் உள்ள பிணியாளர்களுக்கு இச்சேவையை இலவசமாகவே செய்கிறது.

## சிகிச்சை முறைகள் :

அதிநுண்ணுயிர்களை அழிக்கக்கூடிய மருந்துகள் அதிகம் இல்லை. டெங்கு காய்ச்சலைப் பொறுத்தவரை, நாம் செய்ய வேண்டியது என்ன ?

1. பரிபூரண ஓய்வு
2. உடல் வெப்பத்தைத் தணிக்க பாரசிட்டமால் மாத்திரைகள்
3. உடல் சூட்டைக் குறைக்க ஐஸ்கட்டிகளால் ஒத்தடம்
4. வீட்டில் உள்ள காய்ச்சிய நீரில் உப்பு–சர்க்கரைக் கரைசல் செய்து உட்செலுத்துதல்

மேற்கூறிய முறைகள் பெரும்பாலானவர்களுக்குப் போதுமானது.

ஆனால், சிலருக்கு இரத்தக்கசிவினால் ஆபத்து நேரும்போது சிகிச்சையளிக்க மருத்துவமனையில் சேர்ந்திட வேண்டும்.

அங்கு அவர்களது உடலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆய்வுக்கூட சோதனைகள் மேற்கொண்டு, அதன் பிறகே சிகிச்சை துவங்க வேண்டும்.

1. அதிகமான நீர் செலுத்துதல் (டெங்கு இரத்தக் கசிவுக் காய்ச்சலின் போது மார்பு மற்றும் வயிற்று உள்ளுறைகள் (PLEURAL AND PERITONEAL CAVITIES) நீர் மிகுந்து போவதால் இரத்தத்தில் உள்ள ஊநீர் (PLASMA) அளவு குறைகிறது. இதனை ஈடுசெய்ய அதிக நீர் தேவைப்படுகிறது.
2. இரத்தத்திலுள்ள மின் அயனிகளின் அளவைக் கணித்து (ELECTROLYTE BALANCE) சரி செய்தல்.
3. ஊநீர்ப் பெருக்கிகள் (PLASMA EXPANDERS) – தேவைப்படலாம்.
4. சில சமயம் இரத்தம் செலுத்துதல் – இது மிக அரிதாக அவசியப்படுகிறது.

## நுண்ணுயிரிகள் ஏற்படுத்தும் விளைவுகள் (PATHOGENESIS)

டெங்கு காய்ச்சலினால் உடலில் ஏற்படும் விளைவுகள் அனைத்திற்கும் காரணம் இன்னும் கண்டறியப் படவில்லை.

ஆனால் இரண்டு முக்கியமான மாறுதல்கள் காணப்படுகின்றன.

1. இரத்த நாளங்களில் இருந்து இரத்தம் அதிக ஊடுருவும் திறன் பெற்று வெளியாகிறது. இதனால் அதிர்ச்சி (SHOCK) ஏற்படுகிறது.
2. இரத்தத்தின் சமநிலை (HEMOSTASIS) பாதிக்கப்பட்டு, இரத்த நாளங்களில் அழற்சி, வட்டணுக்களின் எண்ணிக்கை மிகக்குறைதல், இரத்த ஒழுக்கு நிறுத்தும் செயல்பாடுகளில் பாதிப்பு ஆகியவை நேரலாம்.

## பரவும் விதம் :

கொசுக்கள் மூலமாகப் பரவும் நோய் இது. இந்தக் கொசுக்கள் – பெண் கொசுக்கள் (மெய்யாகவேதான்) – பகலில்தான் கடிக்கின்றன. கடிபட்டு, 5–வது நாள்தான் நுண்ணுயிர் உடலில் பெருகி, தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில் ஏயிடஸ் ஈஜிப்டை (AEDES EGYPT) என்ற கொசுதான் டெங்குவுக்குக் காரணமாகிறது.

இந்தக் கொசுவின் உடலில் முதுகிலும் கால்களிலும் கருப்பு–வெள்ளை வரிகள் காணப்படும். அதனால் இதனைப் புலிக்கொசு (TIGER MOSQUITO) என்றும் கூறுவர். பெரும்பாலும் இது மழைநீர் போன்ற சுத்தமான நீர்த் தேக்கத்தில்தான் பெருகும். தாய்க் கொசுவிடமிருந்து நுண்ணுயிர் முட்டைகளுக்குப் பரவும்.

## தடுப்பு முறைகள் :

இவற்றில் மிகமிக முக்கியமானது பொதுமக்களது பங்கேற்பு.

1. கொசு ஒழிப்பு மற்றும் தடுப்புப்பணி
2. பெருக வாய்ப்பின்றி, நீர் தேங்குவதைத் தடுத்தல்
3. மருந்து தெளித்தல் – புகை அடித்தல்
4. மக்கள் பாதுகாப்புக்கென –


   கொசு வலைகள்

   திரைகள் மற்றும்

   உடலில் தடவிக் கொள்ளும் களிம்புகள்

பொதுமக்கள் பங்கேற்பு இருந்தால் மட்டுமே – நலத்துறை அலுவலர்களால் முதன்முதலாக ஒரு இடத்தில் டெங்கு தோன்றும்போதே அதனைக் கண்டுக் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க இயலும். பின் டெங்கு பீதி அவசியமற்றதாகப் போய்விடும்.

எனவே டெங்குவைப் பற்றித் தெரிந்து கொண்டு விழிப்புணர்வுடன் இருக்க முயல்வோம். •



எனவே இந்த மாற்றத்தை மனித மனங்களில் ஏற்படுத்திட, டேனிடா நிறுவனம் தங்களது திட்ட அலுவலக அலுவலர்கள் முதற்கொண்டு கிராமங்களில் வாழும் மக்கள் வரை கொண்டு சென்று மாற்றம் மலர விதைகளை இதுகாறும் விதைத்துள்ளது.

**சமத்துவம்: (GENDER EQUALITY)**

பொதுவாக பாலினம் என்பது ஆண், பெண் என இருபாலரையும் குறிக்கும். இருப்பினும் மிகவும் அதிகமாக பேசப்படுவது பெண்களைப் பற்றிதான். எதற்காக அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்

இதுவரை பெண்களுக்கு தகுந்த வாய்ப்புகள் அளிக்கப்படாமல்,அவர்களை வீட்டுப்பாவைகளாக ஒரு வரைமுறை எல்லைக்குள் வைத்து ஆண்களை மட்டுமே தங்களுடைய குடும்ப முன்னேற்றத்திற்கான ஆதாரமாகவும், நம்பிக்கையின் சின்னமாகவும் நினைத்து வந்ததனால் பல குடும்பங்களில் பொருளாதாரப் பின்னடைவும், ஏழ்மை நிலை அதிகரிப்பும், பெண்கள் அடிமைத்தனம் ஓங்கியும் இருந்து வந்தன.

எனவே,பெண்கள்,தாங்களும் வலிவுமிக்கவர்கள் திறன் மிக்கவர்கள் என்பதைத் தாங்களாகவே அறிந்து கொள்ளவும், தங்களுக்குத் தேவையான முடிவுகளை தாங்களே எடுக்க வழி செய்யவும், தங்களைப் பற்றிய சுய மதிப்பீடுகளை நம்பிக்கையோடு வெளிப்படுத்தவும் ஒரு வாய்ப்பை பெண்களுக்கு அளிக்க டேனிடா நிறுவனம் எல்லா விதத்திலும் உறுதுணையாக இருந்து வருகின்றது என்றால் மிகையாகாது.

**திட்டத்தின் செயல்பாடுகளில் பெண்களின் பங்கு:**

திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் கிராம மக்கள் அனைவரும் டேனிடா குடிநீர் மற்றும் சுகாதார திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இருந்தே பங்கு கொண்டு திட்டத்தின் செயல்பாடுகளை கவனித்து, நல்ல தரமான திட்டத்தை பெற வழி வகுக்கும் வகையில், முதலில் பஞ்சாயத்து தோறும் கிராம சபா கூட்டம் கூட்டப்படுகிறது. இதில் ஒவ்வொரு வீட்டில் இருந்தும் ஒரு ஆணும் , ஒரு பெண்ணும் தவறாது

டேனிடா நிறுவனம் பெண், ஆண் – இடையிலான சமூக ரீதியான வேறுபாடுகளை நீக்கவும், பெண்களின் மேம்பாட்டிற்கு வேண்டிய அனைத்து செயல்பாடுகளையும் திட்டம் தீட்டி செயல்படுத்தவும், குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் அனைத்துப் பணிகளிலும் பெண்களை முழுமையாகப் பங்கு பெறச் செய்து ஆண்–பெண் இருபாலருமே சம அளவில் இணையாக பங்கெடுக்கச் செய்யவும் வேண்டும் என்பதை தன்னுடைய முக்கிய குறிக்கோளாக வைத்து அதன்படி இதுகாறும் செயல்பட்டு வருகின்றது. கூட்டங்கள், சமுதாயக் குழுக்கள், குடிநீர் பயனாளிக் குழுக்கள், பயிற்சி மற்றும் திட்ட விளக்க முகாம்கள் ஆகியவற்றிலும் அந்தந்த நிலைக்கு உகந்தவாறு நிர்வாகம் மற்றும் தீர்மானம் செய்தல் போன்ற செயல்பாடுகளில் பெண்களும் முழுமையாக பங்கெடுத்துக் கொள்ள ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதை உடனடி குறிக்கோளாக வைத்து செயல்பட்டு வருகின்றது.

**ஆண்-பெண் இருபாலர் சமநோக்கு**

ஆண்–பெண் என்பதை உடற்கூறுகளால் மட்டுமே நம்மால் வித்தியாசப்படுத்த முடியும். ஆனால் திறமைகள், செயல்கள், உரிமைகள் ஆகியவைகள் தற்போதுள்ள சமூகத்தால் இருவேறு கண்ணோட்டங்களுடன் பார்க்கப்படுகின்றன. ஏன் ? எதனால் ?

ஆண்–பெண் உடல் ரீதியாக அமைந்த வேறுபாடுகள் மனித உயிரணுவின் அடிப்படையில் அமைகின்றது. இவற்றை நம்மால் மாற்ற முடியாது. ஆனால் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கேற்ப, வளரும் சூழ்நிலைக்கு ஏற்ப ஆண்–பெண் சமூக ரீதியிலான வேறுபாடுகள் இடத்துக்கு இடம் வித்தியாசப்படுகின்றது. சமூகமும், கலாச்சாரமும் இதில் முக்கிய இடம் வகிக்கின்றன. இப்படிப்பட்ட வேறுபாடுகள், நம்மால்தான் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான தேவையற்ற கருத்துக்களை, நாம் நினைத்தால்,கண்டிப்பாக மாற்ற முடியும்.


## டேனிடா குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தில்
# 'இருபாலர் சமநோக்கு கண்ணோட்டம்'

கலந்து கொள்ளல் வேண்டும் என்பதை பல முறைகளில் சுட்டிக் காட்டுவதுடன் அவர்கள் பங்கு கொள்ள முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. அடுத்த கட்டமாக 'பங்கேற்பு செயல் திட்டம்' தயாரிக்கும் வேளையில் குடிநீர் பெறுவதில் பெண்கள், ஆண்கள் ஆகிய இருவருக்கும் ஏற்படும்சிரமங்கள், அதைதீர்க்க மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள், பிரச்சனைகளுக்கான தீர்வுகள்– போன்றவற்றை இருபாலரிடமும் கேட்கப்பட்டு அவர்கள் கூறும் ஆலோசனைக்குஏற்ப(மக்களால்/ அலுவலர்களால்) திட்டம் தீட்டப்படுகின்றது.

டேனிடா திட்டத்தின் அனைத்துப் பணிகளிலும், கிராம மக்கள் ஆர்வத்துடன் செயல்பட பல குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவற்றில் முதன்மை வாய்ந்தது குடிநீர் மற்றும் சுகாதாரக் குழு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், ஆண், பெண் இருபாலரும் சம அளவில் இருந்து பஞ்சாயத்துக்கான ஆக்கப்பணிகளை திட்டமிடவும், மேற்பார்வை செய்யவும், தரம் பற்றிய ஆய்வு செய்யவும், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உட்பட அனைத்து செயல்களிலும் இருபாலரும் இணைந்து செயல்படவும் தேவையான பயிற்சி மற்றும் செய்திக்குறிப்புகள் ஆகியவற்றை டேனிடா அளித்து வருகின்றது.

**பெண்களுக்கான ஊக்கப் பயிற்சிகள் :**

டேனிடா நிறுவனம் பல தரப்பட்ட மக்களுக்காக தொழில்நுட்ப– மற்றும் திட்டம் சம்பந்தப்பட்ட பல பயிற்சிகளை அளித்து வந்தாலும், குறிப்பாக பெண்கள் தங்கள் திறமைகளை அறிந்துகொள்ளவும், அவர்கள் ஆண்களுக்கு இணையாக எல்லா தரப்பட்ட வேலைகளையும் தகுந்த பயிற்சிகளின் மூலம் அறிந்து கொண்டு அதன்படி செயல்பட்டு பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையவும் பெண்களுக்கென பல பயிற்சிகளை அளித்து வருகின்றது.



திட்டத்தைப் பற்றிய தெளிவு மற்றும் பஞ்சாயத்து ராஜ் திட்ட விளக்கம் பற்றி பெண் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கு முதற் கட்டமாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரத்தின் அவசியத்தை பெண்கள் உணர்ந்து கொண்டால், அவர்கள் தங்கள் குடும்பத்தில் மாற்றத்தை கொணர்வார்கள் எனும் கோட்பாட்டுக்கு ஏற்ப பெண்களுக்கு சுற்றுப்புற சுகாதாரம், தன் குடும்ப கிராம சுத்தம், வீட்டுக் கழிவறையின் அவசியம் இவற்றை பாடல்கள் மூலமாகவும், நாடகங்கள் மூலமாகவும் பயிற்சியுடன் விளக்கப்பட்டு வருகின்றது. வீட்டுக் கழிவறையின் அவசியத்தை மட்டும் உணர்த்தாமல் பெண்கள் தங்கள் வீட்டுக்கு வேண்டிய கழிவறைகளை பெண்கள் மூலமாகவே கட்டிக் கொள்வதற்காக ஆர்வத்துடன் முன்வரும் பெண்களுக்கு கொத்தனார் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதுவரை இரண்டு மாவட்டங்களிலும் 34 பெண்களுக்கு கொத்தனார் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சுத்தமான குடிநீர் எப்பொழுதும் தேவைக்கு ஏற்ப கிடைக்கவும், குடிநீருக்காக பல மைல் தொலைவு நடந்து வந்த சிரமத்தை குறைத்து வேலைப் பளுவையும் குறைக்கவும் கிராமந்தோறும் கைப்பம்புகள் போடப்பட்டுள்ளன. மக்களின் தேவை கைப்பம்பு போட்டு கொடுத்தவுடன் முடிந்துவிட்டது என்றில்லாமல், சரியான பராமரிப்பு இருந்தால் மட்டுமே இந்த வசதி தொடரும் என்பதனை மக்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு கூட்டங்களின் வாயிலாகவும், வீடியோ படங்களின் மூலமும் உணர்த்தி விழிப்புணர்வு அடைய வழிவகை செய்யப்படுகிறது. அத்தோடு விட்டு விடாமல் அவர்கள் கைப்பம்பை முறையாக உடனுக்குடன் பராமரிக்கும் வண்ணம் பெண்களுக்கு கைப்பம்பு மெக்கானிக் பயிற்சி 5 நாட்களும், மின்விசை மோட்டார் பம்பு பயிற்சி 4 நாட்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 72 பெண்கள் கைப்பம்பு மெக்கானிக்குகளாகவும், 52 பெண்கள் மின்விசை மோட்டார் பம்பு பயிற்சியும் பெற்று தங்களுடைய தேவைகளை தாங்களே நிறைவேற்றும் அளவிற்கு உயர்ந்து கொண்டு வருகின்றார்கள் என்றால் பெண்களுக்கு வாய்ப்பும், உரிய பயிற்சியும் அளித்தால் 'மலைபோல் தெரிவன யாவும் சிறு கல்போல் எளிமையாகிவிடும்' என்பது உண்மையே! கைப்பம்பு பழுதடைந்தால், வீட்டுக் கழிவறை பகுதிகள் உடைந்து காணப்பட்டால் ஆண்களுக்காக காத்திருக்காது உடனடியாக எங்களால் அனைத்து வேலைகளையும் செய்ய முடிகிறது' என்று பெண்களும், 'பெண்கள் அதிகமாக உள்ளூரிலேயே இருப்பதால், குடிநீர் தட்டுப்பாடு இன்றி கிடைக்க வழிசெய்கிறார்கள்' என ஆண்களும் கூறுவதை கேட்க வியப்பாக இருப்பினும், நடைமுறையில் இது சாத்தியப்படும் என நமக்கு உணர்த்தியுள்ளார்கள்.

### பெண் சாதனையாளர்கள்

பலதரப்பட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில், கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளிலும் சட்டத்துக்கு புறம்பாக பெறப்பட்ட குடிநீருக்கான வீட்டு தொடர்புகளை துண்டித்தவர் திருமதி அமிர்தம்மாள், குருவப்பன்பேட்டை பஞ்சாயத்து தலைவி.

இதுவரை 235 வீட்டுக் கழிவறைகளை கட்டி, டேனிடா பயிற்சியினால் பலருக்கு முன் உதாரணமாக இருக்கும் திருமதி கமலம், கீரப்பாளையம் பஞ்சாயத்து, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.


பஞ்சாயத்து வேலையாயினும், டேனிடா பயிற்சியாயினும் சரி எதற்கும் முன் உதாரணமாக நின்று தன்னுடைய மக்கள் பணியின் மூலம் சிறந்து விளங்கும், பஞ்சாயத்து தலைவி திருமதி பாக்கியம், கீழ்மாவிலங்கை, விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்தவர். இவர் கைப்பம்பு மற்றும் மின்விசைப்பம்பு பயிற்சி பெற்று சிறந்த மெக்கானிக் எனும் பெயர் பெற்றவர்.

திருமதி விஜயகுமாரி, பெரியதச்சூர் பஞ்சாயத்து, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த இவர், சிறந்த பெண் கைப்பம்பு மெக்கானிக் என மாவட்ட ஆட்சித் தலைவரால் பாராட்டப்பட்டு தங்கப்பதக்கம் பெற்றவர். திருமதி உஷா ராஜகோபால் கெடார் பஞ்சாயத்தைச் சேர்ந்த இவர் சிறந்த மெக்கானிக்காகவும் இருந்து, பல தரப்பட்ட பெண் மெக்கானிக்குகளை உருவாக்க உறுதுணையாக நின்று ஆசானாகவும் மதிக்கப்பட்டதால் பாராட்டு பதக்கம் பெற்றவர் என பட்டியல்கள் ஏராளம், ஏராளம்.

### பெண்களுக்கான சிறப்பு செயல் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக கடலூர் மாவட்ட பெண் கைப்பம்பு மெக்கானிக்குகள், திருமதி சுதா நாகராஜன் –






கீரப்பாளையம், செல்வி விஜயா–சாக்கான்குடி, பெண் கொத்தனார்கள், திருமதி கமலம்– கீரப்பாளையம், திருமதி கலா ஆகியோர் உத்திரப்பிரதேசத்தில் அகில இந்திய அளவில் நடைபெற்ற பெண்கள் விழாவில் கலந்து கொண்டு தங்களின் திறமையால் பரிசுகளை தமிழகத்துக்கு தட்டித் தந்திருக்கின்றார்கள்.

பெண்களின் திறமைகளை வெளிக் கொணரவும் அவர்களை நன்கு ஊக்குவிக்கவும் ஒரு வாய்ப்பாக சர்வதேச பெண்கள் தின விழாவான மார்ச் 8–ம் தேதியன்று விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டம் மூலமும், பல பெண்கள் குழுக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமும் விழாக்கள் ஏற்பாடு செய்து விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஆண், பெண் இருபாலருடைய சமத்துவத்தை மேம்படுத்தவும் பெண் மெக்கானிக்குகள், பெண் கொத்தனார்கள், விசைப்பம்பு இயக்குநர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், குடிநீர் பயனாளி குழுக்கள், சுகாதார குழுக்களின் திறமைகளை உலகிற்கு வெளிச்சம் காட்டவும் மாவட்ட அளவில் மாநாடு கடலூரில் நடத்தப்பட்டது. திட்டம் நடைபெறும் கிராமங்களிலிருந்து ஆண்கள் மற்றும் பெண்களால் பெண்களுக்காக ஒரு ஜெண்டர் மேளா("நமது விழா") மாவட்ட அளவில் நடத்தப்பட்டது.

மென்மேலும் இத்திட்டத்தைப் பற்றி அறிய விரும்புவோர்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம். நம் பழம்பெரும் கலாச்சாரத்தை விட்டுக்கொடுக்காது, பல இன்னல்களுக்கு மத்தியில் பற்பல பயிற்சிகள் பெற்று தங்களை மெருகேற்றிக் கொண்டிருக்கும் பெண்களை நினைக்கையில் பாரதியின் வரிகள் நம் மனதில் தோன்றி, அகக் கண்ணில் நீரை வரவழைக்கின்றது. ஆம் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்''.



# தமிழ்ப் பணியில்

# தேவநேயப் பாவாணர்

தேவநேயப் பாவாணர் 1902ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 7ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குப் பிறந்தார். அவர் தந்தையார் ஞானமுத்து; தாயார் பரிபூரணத்தம்மையார். பிறந்த இடம் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சங்கர நயினார் கோயில்.

மதுரையில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாட்டில் 1981ஆம் ஆண்டு சனவரி 5இல் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் உரையாற்றும்போது, மாரடைப்பு ஏற்பட்டு 1981ஆம் ஆண்டு சனவரி 15ஆம் நாள், இரவு 12–30க்கு இயற்கை எய்தினார். அவருக்கு நூற்றாண்டு இது.

பாவாணர் தமிழ்ப் பணியை வெளிப்பட எவரும் அறியும் சான்றுகள் எவை ? அவர் வாழ்ந்த நாளையன்றிப் பின்னரும் காலம் காலமாக அறிய இருக்கும் சான்றுகள் எவை ? கூற்றையும் வென்று நிற்கும் ஆற்றல் மிக்க சான்றுகள் எவை ? அவரால் படைக்கப்பட்ட நூல்களே, இறவாச் சான்றுகள்; 'தேவநேயம்' என என்றும் வாழும் சான்றுகள் அவை.

பாவாணர் நூல்கள், அவர்தம் அறிவுக்கூர்மை, ஆராய்ச்சித் திறம், புத்தாக்கம், எண்ணச் சிறப்பு என்பவற்றை மட்டுமோ காட்டுகின்றன ? அவர்தம் தமிழ்ப்பற்று, தமிழினப்பற்று, உலகநேயம் என்பவற்றையும் சேர்த்தே காட்டுகின்றன.

ஒப்பியன் மொழிநூலை 1940இல் பாவாணர் வெளியிட்டார். உலக மொழிகளுக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது அது. திரவிடத்தாய் என்பது,

☐ புலவர் இரா.இளங்குமரன்

திராவிட மொழிகளுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது.

முதல் தாய்மொழி என்னும் அவர் படைப்பு, உலக முதல் மொழி தமிழே என்பதை உறுதிப்படுத்தும் நூல்.

தமிழ்நாட்டு விளையாட்டு, பழந்தமிழாட்சி, தமிழர் திருமணம் பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், இசைத் தமிழ்க் கலம்பகம், தமிழர் மதம், தமிழர் வரலாறு, தமிழ் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள் தமிழ் மரபுரை என்னும் நூற்பெயர்களை அறிந்த அளவிலேயே, பாவாணரின் தமிழ்ப்பணி வெளிப்பட விளங்கும்.

ஆப்பிள் பழம் ஒன்று கீழே விழுந்தது; அதனை ஐசக்கு நியூட்டன் கண்டார். அது ஒன்றும் புதுமையானது இல்லை. அவரும் பன்முறை கண்டதுதான்! மற்றவர்களும் கண்டதுதான்! எனினும், அப்பழம் பக்கங்களிலோ மேலோ செல்லாமல் கீழே வீழ்ந்தது, அப்பொழுதில் அவரை அசைத்தது; ஆராயத் தூண்டியது; புவியீர்ப்பு இயல்பைக் காண வைத்தது; அதன் பயன்பாடு, அவ்வறிதல் அளவில் – கொள்கை அளவில் – நின்றதா ? இன்று, அண்டம் விட்டு அண்டம் சென்று ஆராயும் ஆராய்ச்சிக்கு வித்து ஆயிற்று அல்லவா!

ஒருவருக்கு ஏற்படும் நல்ல தூண்டுதல், உலகப் பயனாகத் துலங்கும் என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டு. இவ்வாறே, ஒவ்வொரு துலங்கலுக்கும் ஒரு தூண்டல் அடிப்படையாக இருந்திருக்கும்.

இவ்வகையில் பாவாணருக்கு ஏற்பட்ட தூண்டல் என்ன ? இதனை அவரே வரைந்துள்ளார்:

"பள்ளியிறுதி, இடைநடுவு, கலை இளைஞர் முதலிய பல்வகைத் தேர்வுகட்கும் உரிய தமிழ்ச் செய்யுட் பாடங்களுக்குத் தொடர்ந்து உரை அச்சிட்டு வரும் சில உரையாசிரியர்கள், தமது வரை இறந்த வடமொழிப்பற்றுக் காரணமாகத் 'தென் சொற்களையெல்லாம் வடசொற்களாகக் காட்டவே இவ்வுரை எழுந்தனவோ' என்று தனித் தமிழர் ஐயுறுமாறு,

| | |
|---|---|
| கலை | – கலா; ஆவிறு ஐயான வடசொல்; |
| கற்பு | – கற்ப என்னும் வடசொல்; |
| சோறு | – ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு; |
| உலகு | – லோகம் என்னும் வடசொல்லின் திரிபு; |
| முனிவன் | – மோனம் என்னும் வடசொல் அடியாய்ப் பிறந்தது; |
| முகம் | – வடசொல் |
| காகம் | – காக என்னும் வடசொல்; |
| விலங்கு | – திரியக்ஸ் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு |

எனப் பல தூய தென் சொற்களையும், வடசொற்களாகத் தமது உரைகளில் காட்டி வருவது பத்தாண்டுகட்குமுன் என் கவனத்தை இழுத்தது. உடனே, அச்சொற்களை ஆராயத் தொடங்கினேன் என்று 1940இல் வெளிவந்த ஒப்பியன்மொழி நூலில் கூறுகின்றார்.

ஆராய்ந்த வகையையும், ஆய்வின் முடிவையும் அந்நூலில் தொடர்ந்து விளக்குகிறார்.

"வடமொழி என உரையாசிரியர்களால் சொல்லப்பட்ட சொற்களின் வேர்களையும், வேர்ப் பொருள்களையும் ஆராய்ந்த போது, அவையாவும் தென் சொல்லென்றே பட்டன. அவற்றை, முதலாவது வடமொழிக்கும் தென்மொழிக்கும் பொதுச்சொற்களாகவும், போலிப் பொதுச் சொற்களாகவும் கொண்டு, இவ்வுண்மையை வேறொரு மொழியினின்றும் ஒரு போகு முறையான் உணர்த்துமாறு ஆங்கிலத்திற்கும் தமிழுக்குமுள்ள பொதுச் சொற்களை ஆராயத் தொடங்கினேன்.

சேம்பர்சு, ஸ்கீற்று என்பவர்களின் ஆங்கிலச் சொல்லியல் அகராதிகளைப் பார்த்தபோது, ஆங்கிலத்திற்கும் தமிழிற்கும் பொதுவான சில ஆங்கிலச் சொற்கள் அகப்பட்டதுடன், அவற்றின் வாயிலாகவே, அவற்றின் மூலமாகவோ இனமாகவோ உள்ள சில இலத்தீன் கிரேக்குச் சொற்களும் அகப்பட்டன. பின்பு, இலத்தீன் கிரேக்கு அகராதிகளைத் துருவினேன்; வேறு சில சொற்களும் எனக்குத் துணையாயின. அவற்றுள், Navis (நாவாய்), Amar (அன்புகூர்) முதலிய இலத்தீன் சொற்களும் Telos (தொலை–தூரம்), Palios (பழைய) முதலிய கிரேக்குச் சொற்களும் எனக்குப் பெரிதும் வியப்பை ஊட்டின.

இவற்றுடன், தமிழ் இந்திய ஐரோப்பிய மூல மொழிக்கு மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியிருப்பதையும், அவரும் குண்டட்டும் வடமொழியிலுள்ள திராவிடச் சொற்கள் சிலவற்றை எடுத்துக் காட்டியிருப்பதையும், பண்டைத் தமிழகம் தென்பெருங்கடலில் அமிழ்ந்துபோன குமரிநாடென்றும், அந்நாட்டிலேயே தமிழர் தலைசிறந்த நாகரிகத்தை அடைந்திருந்தனர் என்றும், தமிழ்த் தொன்னூல்கள் கூறுவதையும், 'மாந்தன் முதன்முதல் தோன்றினது இலெமூரியா (Lemuria) – குமரிநாடு' என்று வியன்புலவர் ஹெக்கேல் கூறியிருப்பதையும், தமிழ், உலக மொழிகள் எல்லாவற்றிலும் எளிய ஒலிகளைக் கொண்டு இயற்கைத் தன்மை உள்ளதாய், அதன் சில பல சொற்கள் பல மொழிகளிலும் கலந்து கிடப்பதையும் சேர நோக்கின போது, தமிழின் தொன்மை, முன்மை, தாய்மை முதலிய தனிப்பண்புகள் புலனாயின. பின்பு, மொழிநூல் துறையில் ஆழ இறங்கினேன் என்கிறார்.

ஆய்வு நெறியில் தனித்தன்மை கொண்ட பாவாணர் தமக்கு முன்னர் ஆராய்ந்த சான்றோர்களைச் சுட்டத் தவறுவது இல்லை, அவர்கள் முடிவுகளை மறைப்பதும் இல்லை. அறிவியல் ஆய்வு முறைமை போலவே, மொழியியல் ஆய்வு முறையும் நிகழவேண்டும் என்பதில் அழுத்தமான கொள்கையுடையவராக இருந்தார்.

"மொழிநூல் என்பது உலகமொழிகள் எல்லாவற்றையும் தழுவும் பொதுக்கலை. உலக மொழிகள் எல்லாவற்றையும் ஆரியம், சேமியம் (செமிட்டிக்), துரேனியம் என்னும் முப்பெருங் குலங்களாகப் பிரித்துள்ளார் மார்க்கசுமுல்லர். அம்மூன்றும், ஒரு மூலத்தினின்றும் கவைத்திருக்க வேண்டும் என்றும் அவரே திட்டமாய்க் கூறிவிட்டார்.

அம்மூலத்திற்குத் திராவிடம் மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியுள்ளார். இக்கூற்றை என்னால் இயன்றவரை முயன்று மெய்ப்பித்திருக்கிறேன் என்கிறார் பாவாணர்.

''தமிழர் தொன்மையை உலகிற்கு அறிவித்தவர் கால்டுவெல் பெருமகனார்; தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமால் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறை தமிழ் மலையாம் மறைமலையடிகள்; நானே மரமாக வளர்த்து வருகிறேன்'' என்கிறார் பாவாணர். மேலும், சொற்பிறப்பியல் பணிக்கென்றே தம்மை இறைவன் படைத்தனன் என்று பல் கால் எழுதியுள்ளார்; அன்பர்களுக்கு அறிவித்துள்ளார். 'பொருளியல் மீட்பர்' கார்ல் மார்க்சு, 'சமயவியல் மீட்பர்' கிறித்து பெருமான் என்று கூறும் பாவாணர், தம்மை 'மொழி மீட்பர்' என்று கொண்டார்; உரையிலும் பாட்டிலும் உரைத்தார்.

''எல்லாக் கிளைகட்கும் மூலமான ஓர் அடிமரம் இருப்பது போல, எல்லா மொழிகட்கும் மூலமான ஒரு தாய்மொழியும் இருத்தல் வேண்டும்; உலகத்திலுள்ள மக்களெல்லாம், ஒரு தாய் வழியினர் ஆதலின், அவர் வழங்கும் மொழிகளும், ஒரு தாய் வயிற்று வழியிலாதல் வேண்டும்'' என்று உவமைப்படுத்துவார்.

பாவாணர் பன்மொழிப்புலமையர்; ஆங்கிலத்தில் அவர் பெற்றிருந்த புலமை, ''ஆக்சுபோர்டுப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியராகச் செல்ல வேண்டும்'' என்னும் பற்றையும், முயற்சியையும் ஊட்டியது. 'ஒரு சொல் கூட வேற்றுச் சொல் கலவாமல், ஆங்கிலம் பேச வேண்டும்' என்று குறிக்கோள் கொண்டு உழைத்தவர் அவர்.

இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு இருந்தபோது, தமிழாசிரியப் பணி வாய்த்தது. அதற்குத் தகுதியாளராகச் சான்று பெறுவதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டிதத் தேர்வை, ஒரு முறையாக எழுதி, ஒருவராகவே தேர்ச்சி பெற்றார்.


''ஆறாம் படிவத்தில் தமிழ் கற்றதனாலும், இசைப்பாட்டும் செய்யுளும் இயற்றி வந்ததனாலும், இசைத் தமிழ்ப்பித்தன் ஆனதனாலும், நான் அறியாவாறு இறைவன் என் மனப்பாங்கை மாற்றியதனாலும், தமிழாசிரியர் பணி மேற்கொண்டேன்'' என்று அவரே தம் நிலையை எழுதுகிறார்.

தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வு பெற்றதன் பயனை ஆழமாகச் சிந்தித்து எழுதுகிறார் பாவாணர்.

''**1924** ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வெழுதித் தேறினேன். அதனால் எழுந்த செருக்கினாலும் தமிழ் வெறியினாலும் ஆங்கிலத்தை அறவே புறக்கணித்து, ''நான் ஆங்கிலம் பேசக்கூடாது என்றும், பிறர்பேசின் செவிமடுக்கக்கூடாது என்றும்'' சூளிட்டுக் கொண்டேன். அம்மயக்குப் பத்தாண்டு தொடர்ந்தது. அதனால், தமிழாராய்ச்சியில் ஆழ முழுகித் தமிழின் அடிமட்டத்தைக் கண்டேனாயினும், ஆங்கிலப் பேச்சாற்றலை இழந்து விட்டதால், ஆங்கிலப் பட்டம் பெறும் வரை, கல்லூரியுள் கால்வைக்க முடியாது போயிற்று. அதனால், பதவியுயர்வும் பொருளியல் முன்னேற்றமும் இல்லாது போயின'' என்கிறார்.

தமிழிலே பெற்ற பண்டிதத் தேர்வுக்குப்பின் நெல்லைத் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டமும், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டமும், இந்தியில் விசாரத்துப்பட்டமும், பி.ஏ.பி.ஓ.எல். பட்டங்களும் தொடர்ந்து பெறுகின்றார். எம்.ஓ.எல். பட்ட ஆய்வுக்கு, மறைந்த குமரிக் கண்டத்தைப் பொருளாகக் கொண்ட ஆய்வை மேற்கொண்டு, இடுநூலும் (தீசிஸ்) வழங்கினார். ஆனால், அது ஏற்கப்படவில்லை. அதனால், ''இனி, இந்தியத் துணைக் கண்டத்தில் யான் பெறும் பட்டம் ஒன்றும் இல்லை'' என்று உறுதி செய்து, பலப்பல மொழிகளையும் பணியில் இருந்து கொண்டே பயின்றார்.

''மொழிகற்கும் கூர்மை அமைந்த ஒருவர், எளிமையாக ஐம்பது மொழிகளைக் கற்கமுடியும்'' என்று எழுதும் பாவாணர், **23** மொழிகளைக் கற்றார்; **58** மொழிகளில் வேர்ச் சொல் கண்டார். தொல் பழமொழிகள் 17ஐத் துருவினார்; இவற்றை, அவரே பட்டியலிட்டும் காட்டினார்.



குடும்பத் தேவைக்கும் குறைந்த வருவாய் உடைய பாவாணர், பெருஞ்செல்வர், தம் நூலகத்திற்கு வாங்கித் தொகுப்பது போல, அரிய நூல்களைத் தேடித் தேடித் தொகுத்தார். உண்டிக்கும் உடைக்கும் பயன்படுத்துவதினும், மிகுதியாகப் புதுப்புது நூல்கள் வாங்குவதற்கே செலவிட்டார். அகராதி, கலைக்களஞ்சியம் ஆகியவை மிகப் பெரிய அரசு நூலகங்களில் கூடக் காண்பது அரிது என்னுமாறு தொகுத்துப் பயன்படுத்தினார்; எட்டு நிலைப் பேழைகளில் வைத்திருந்தார்.

எல்லா மொழிகளுக்கும் அடிப்படையான வழக்குகள் இரண்டு. அவை, நூல் வழக்கு, உலக வழக்கு என்பன. இரு வகை வழக்குகளையும் குறைவில்லாமல் அறிந்து கொண்டவர். படைப்புகளே, நூல்முறையையும், மக்கள் வாழ்வியல் முறையையும் செவ்வையாக வெளிப்படுத்த வல்லன. அவ்வகையில், பாவாணர் நூலறிவுத்திறம் போலவே, உலகியல் வழக்கு வளமும் சிறந்து விளங்கினார்.

பாவாணர் தாம் எடுத்துக் கொண்ட ஒன்றை நிலைநாட்டுவதற்கு, நாட்டு வழக்கைக் காட்டுவார்; நாட்டின் உட்பிரிவாம் மாவட்ட வழக்கைக் காட்டுவார்; வட்டார வழக்கையும் உள்வட்டார வழக்கையும் காட்டுவார். ஊர்வழக்கையும் உலக வழக்கையும் காட்டுவார்.

இவ்வாறு அவர் காட்டுதற்கு அவர் பணி நிலை பேருதவியாக இருந்தது. பாவாணர் பிறந்ததும், உயர்பள்ளிக் கல்வி பெற்றதும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆகும். முகவை மாவட்டத் தென்மேற்குக் கோடியில் உள்ள சீயோன்மலை என்னும் முறம்பில், தொடக்கக்கல்வி கற்றதுடன் அப்பள்ளியிலேயே ஆசிரியப் பணியும் செய்தார்; மதுரை மாவட்டத்தில் அவருக்கு இருந்த தொடர்பும் நெருக்கமும் அவர்க்குப் பட்டம் வழங்கவும், மணிவிழாக் காணவும் வாய்த்தன; தஞ்சாவூர் மாவட்டத்து மன்னார்குடிப் பிண்ட்லே பள்ளிப்பணி, இசைப்பயிற்சி, இலக்கணப்பயிற்சி, நூலாக்கம் என்பவற்றைச் சிறக்கச் செய்தன; திருச்சிராப்பள்ளி பிசப்பு ஈபர் உயர்நிலைப் பள்ளிப் பணி, பாவாணரை மொழித்தொண்டில் முனைப்புறத் தூண்டியது; சேலம் நகராட்சிக் கல்லூரி வாழ்க்கை, பாவாணர்க்குப் பசுஞ்சோலையாக அமைந்தது. கோவை, ஈரோட்டுத் தொடர்பும் பாவாணர்க்கு உண்டு. சொல் தொகுக்கவென்றே, நீலமலைக்குப் பாவாணர் சென்றார்.

வடார்க்காட்டு ஆம்பூரில் பணியாற்றியதும், வேலூர் காட்டுப்பாடியில் வாழ்ந்ததும் பாவாணர்க்கு உண்டு; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராக இருந்தார்; அது, தென்னார்க்காடு மாவட்டம்; சென்னையில் சில உயர்நிலைப் பள்ளிகளில் தொடக்க நாளில் பணி செய்த பாவாணர், நிறைவாகச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககப் பணியும் புரிந்தார். இவ்வாறு, அலை அலையாய் அலைந்த வாழ்வு, அவ்வவ்வட்டார, அவ்வம்மக்கள் வழக்கைப் பெரிதாக அறிந்து கொள்ளத் தக்க கொடையாக அமைந்தது.

இதனால், தமிழ்நாட்டில் வழங்கும் ''பழமொழிகள் பதின்மூவாயிரம்'' தொகுத்தார். தமிழ்நாட்டு விளையாட்டுகள் இவையெனத் தொகுத்து அழியாமல் காத்தார். தமிழர் திருமணத்தையும் பல்வேறு சடங்குகளையும் எழுத்தில் வடித்தார். கடல்கோளுக்கு மேற்பட்ட குமரிக் கண்டச் சொற்கள், அவற்றின் மூலச் சொற்கள், வேருக்கு முன்னான வித்து நிலைச் சொற்கள் என்பனவற்றையெல்லாம் ஆராய்ந்தார். இணைச்சொல், மரபுச்சொல், வழக்குச்சொல் எனப்பட்டியலிட்டார்.

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே'

என்றும்,

'மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா'

என்றும் தொல்காப்பியர் சுட்டிக்காட்டிய ஆணை வழியில், ஆய்ந்து தெளிந்தார். தம் மூளையையே அரிய ஆய்வுச் சாலையாகக் கொண்டு, அவர் ஆய்ந்த வகையையும், அதனைப் பொறித்துவைத்த நிலையையும் பல்கால் நேரில் காணும் பேற்றைப் பெற்றுள்ளேன். அந்நிலை ஒரு பெரும் தவநிலையாகும்.

பாவாணர் நாற்காலியில் அமர்ந்திருப்பார்; மேசைமேல் கைகள் ஊன்றியிருக்கும்; ஊன்றிய அக்கைகள், கன்னத்தைத் தாங்கியிருக்கும்; கைவிரல்கள், நிமிர்ந்து விரிந்து கன்னப்படலத்தில் படிந்திருக்கும்; கண்களோ மூடி இருக்கும்; இப்படி இருப்பது கால்மணி அரைமணி நேரமா? ஒரு மணி ஒன்றரை மணி என்று கூட இருக்கும்; இடை இடையே, கால்கள் மெல்லென அசையும்; நெற்றிச் சுருக்கம் ஏறி இறங்கும்; ஒரொருகால் வலக்கைப் பெருவிரல் வலக்கண்ணின் மேலும் நடுவிரல் இடக்கண்ணின் மேலும் சுட்டுவிரல் நெற்றிப் பொட்டின் மேலும் முச்சுட்டாய் நிற்கும். அத்தவநிலை நிறைவு பெற்றதா? கிடுகிடு என ஒரு பேராராய்ச்சிக் கட்டுரை எழுத்து வடிவம் பெற்றுவிடும். பகலா, இரவா? அந்தியா சந்தியா? எந்த வேளையிலும் இத்தவம் கூடிவிடும்! பாவாணரின் ஆழ்ந்து அகன்ற ஆய்வின் வழியாக வெளிப்பட்டு நிறுவப்பட்ட கருத்துகள் நான்கு. அவை:

1. மாந்தன் பிறந்தகம் மறைந்த குமரிக்கண்டமே
2. குமரிக்கண்ட மாந்தன் பேசிய மொழி தமிழே
3. தமிழ் திராவிட மொழிகளுக்குத் தாய்
4. தமிழே ஆரியத்திற்கு மூலம்

என்பவை.

**1931**இல் செந்தமிழ்ச் செல்வி மாத இதழில், 'மொழியாராய்ச்சி–ஒப்பியன் மொழிநூல்' என்னும் கட்டுரை வெளிவந்தது. அதில், ஆங்கிலத்தில் வழங்கும் **500**க்கு மேற்பட்ட சொற்களைத் தமிழ்ச் சொற்களோடு ஒப்பிட்டுக் காட்டினார்.


Abba - அப்பா
Alum - அளம்
Axle - அச்சு
Back - பிறக்கு

Kid - குட்டி
Maid - மாது
Meal - மெல்வது
Nerve - நரம்பு
Arch - அரசு
Baby - பாப்பு, பாப்பா
Bar - பாறை
Calf - களபம்
Man - மன்
Mud - மண்
Nut - நெற்று
Price - பரிசு
Value - விலை
War - போர்

Bottle - புட்டில்
Can - கெண்டி
Clay - களி
Ginger - இஞ்சி

Path - பாதை
Speech - பேச்சு
Want - வேண்டு
Add - அடு, அடை
Cash - காசு
Daddy - தாதை
Hang - தூங்கு
Kill - கொல்

என்பவை இவற்றில் சில.



இவ்வாய்வுக்குப்பின்னர், மேலும் ஐம்பது ஆண்டுகள் இத்துறையில் அயரா ஆய்வு மேற்கொண்டவர் பாவாணர். அவ்வாய்வுப்படைப்புகளே, அவர்தம் ஆய்வுப் பணியில் தலையிடம் பெற்றன. அவர் கருத்துகளை வெளியிடும் முரசமாகத் 'தென்மொழி' என்னும் மாத இதழைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தொடங்கினார். தனித்தமிழ் ஆர்வலர்கள் ஒன்றுபட்டுத் திரண்டனர். பாவாணரைத் தலைவராகவும், பாவலரேறு பெருஞ்சித்திரனாரைப் பொதுச் செயலாளராகவும், செங்கை செந்தமிழ்க்கிழாரைப் பொருளாளராகவும் கொண்ட உலகத் தமிழ்க் கழகம் திருச்சிராப்பள்ளியில் உருக்கொண்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைகளையும், பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களையும் கொண்டு தமிழின் மறுமலர்ச்சி எனத் திகழ்ந்தது. பாவாணர் கருத்துகளை வரவேற்றதுடன், அவர்தம் நூல் வெளியீட்டுக்கும் ஆர்வலர்கள் முன்னின்று, தனிப்பட்டும் குழு அமைத்தும் உதவினர். அவ்வழியால் பாவாணர் தமிழ்ப்பணி விரிவடையலாயிற்று. அதற்குப் பின்னர், அமைப்புகள் ஆர்வலர்கள் பெரியவர்கள் தூண்டலால் பாவாணர் மொழியாய்வு தமிழ் உலகுக்குக் கிட்ட வேண்டும் என்னும் திட்டத்தில், 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி இயக்ககம்' என்னும் நிறுவனத்தை 1974இல் நிறுவியது அரசு. பாவாணரை அதன் இயக்குநர் ஆக்கியது. அவர் தொடர்ந்த பணி இதுவரை நடைபெறுகின்றது.

பாவாணர் ஆய்வு இயற்கை, எளிமை, தொடர்ச்சி, வழக்கு, அறிவியல் என்பவை தழுவியது.

**கூலி** என்றும் சம்பளம் என்றும் வழங்கும் வழக்கம் எவரும் அறிந்தது. ஏன் அப்பெயர் பெற்றன.

**கூலம்** என்பது தவசம் அல்லது தானியம். அதனைத் தந்து வேலை வாங்குவது கூலி எனப்பட்டது. 'கூலக்கடை' என்பதும் 'கூல வாணிகம்' என்பதும் பல நாள் வழக்குகள்.

**சம்பளம்** என்பது, இருசொல், ஒரு சொல்; சம்பு அளம் என்னும் இரண்டு சொற்களும் இணைந்து சம்பளம் ஆனது. வேலைக்கு நெல்லும் உப்பும் தருதல் வழக்கமாதலால் இப்பெயர் பெற்றது. சம்பு – நெல்; சம்பா; அளம்–உப்பு; உப்பளம். இதன் மொழியாக்கம் 'சாலரி'; சால்ட்–உப்பு; அரி–அரிசி, ரைஸ். இப்படிப் பாவாணர் சொல்லும்போது நாம் வழங்கும் சொற்கள் தாமே இவை. இவற்றின் விளக்கம் அறிந்தோமில்லையே எனத்தோன்றும்.

**கட்டாயம்** என ஒரு சொல்லை வழங்குகிறோம். பாவாணர் சொல்வார். ஆயம் என்பது வரி; கட்டுகின்ற ஆயம் கட்டாயம். நிலவரியைத் தவறாமல் கட்டவேண்டும்; வணிகவரி, தொழில்வரி, வருமானவரி, மின்வரி இன்னவாறு இவை அரசுக்குக் கட்டவேண்டிய ஆயங்கள். இவற்றை எப்படிக் கட்டத் தவறலாகாதோ அதுபோல் செய்ய வேண்டியது, 'கட்டாயம்' என்பார்.

**பூனையைக்** காண்கிறோம்; உற்றுப்பார்க்க வேண்டும்; ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஓர் உணவைத் தின்றதும் முன்னங்கால்களால் வாயை நன்றாகத் தடவும்; வாயையும் முகத்தையும் கழுவித் துடைப்பதை வாய்பூசுதல், முகம் பூசுதல் என்பது வழக்கம். களிம்பு ஏறாமல் இருக்கக்

கலங்களில் ஈயம் பூசுதல் இன்றும் வழக்கமே. அதனால், பூசும் உயிரியாகிய பூனைக்குப் பூசை என்ற பெயர் ஏற்பட்டது. புச்ச, பூச என்றும் வழங்கியது என்று விளக்குவார் பாவாணர். அவ்வளவோடு நில்லாமல், கோயிலில் செய்யும் பூசை என்பது, இறையின் திருவுருவத்திற்கு நீராட்டித் துடைப்பதே பண்டு பூசையாக இருந்து இப்பொழுது அதன் பொருள் அறியாமல் பூவைக்கொண்டு செய்வது பூசை எனத் தவறாக வழங்குகிறது என்பார்.

**கரும்பு** என்பது எவரும் அறிந்தது. பண்டு கருநிறமாக மட்டுமே இருந்ததால், கரும்பு எனப்பெயர் உண்டாக்கப்பட்டது. பின்னர் வெள்ளை, இராமம் என்பவை உண்டாகியமையால் அல்லது கண்டமையால், கரும்புப் பெயரொடு, வெள்ளைக்கரும்பு, இராமக்கரும்பு என்று வழங்கப்படுகின்றன என்பார். மேலும், இராமன் பெயரால் இடப்படும் நெற்றிக்குறி 'இராமம்', அது நாமம் என வழங்குகின்றது. கோபாலன் பெயரால் இடுவது 'கோபலம்'; அது கோப்பாளம் என வழங்குகிறது எனத் தெளிவு செய்வார்.

'**எலி**' என்றதும், 'எல்' என்பதில் இருந்து வந்தது என்பார் பாவாணர். எல் என்பது ஒளி, வெள்ளை கதிரோன். வெண்ணிறமான ஊரும் உயிரி, 'எலி' எனப்பட்டது என்பார். ''எலி, சுண்டெலியா, பேரெலியா எல்லாம் கருநிறமாக அல்லவோ உள்ளன ?'' என வினவினால், பழைய நாளில் அது வெண்மையாக இருந்ததால் எலி எனப்பட்டது. பின்னர்க் கருநிறமும் உண்டாகியமையால் அது 'காரெலி', 'பேரெலி' என வண்ணத்தாலும் வடிவத்தாலும் பெயர் கொண்டன என்பார். எல் வெண்ணிறம் என்பதை எலும்பைக் கொண்டு உணரச் செய்வார். இவை சொல்லாய்வு எனினும், வரலாற்று ஆய்வு என்பதை நிலைப்படுத்துவார்.

பாவாணர் சொல்லாக்கம் எளிமையும் இனிமையும் அதேபொழுதில் அருமையும் உடையது. மூன்று கால் உடையது முக்காலி; நான்கு கால் உடையது நாற்காலி. 'பெஞ்ச்' என்பதற்கு என்ன பெயர் வைப்பது என்றால், ஆறுகால் இருப்பதால் 'அறுகாலி' என்பார்! வியவாமல் முடியாது.

சரி, 'ஸ்டூல்' என்பதற்கு என்ன பெயர் வைப்பது என்றால், அதற்குக் கை இல்லை; சாய்மானம் இல்லை; மொட்டையாக உள்ளது, ஆதலால், 'மொட்டான்' என்பார்.

'**பாஸ்போர்ட்**', '**விசா**' என்பவற்றை எப்படி வழங்கலாம் எனின், கடந்து போக அமைந்த வழி 'கடவு' தானே. நாட்டை விட்டுக் கடக்க உரிய ஆணை, 'கடவுச்சீட்டு'; அந்த நாட்டில் புக வழங்கும் ஆணை, 'புகவுச்சீட்டு' இல்லையா ? என்பார்.

**தியேரி, பிராக்டிகல்** என்பவற்றை எப்படி மொழியாக்கம் செய்யலாம். எனின், சிக்கலே இல்லாமல் தெரிவியல், புரிவியல் என்பார். தெரிவியல் தியேரி; புரிவியல் பிராக்டிகல். '**பிளஷ் அவுட்**' எனப்படுகிறதே. அதற்குத் தமிழ் எனின், 'எடுப்பு' என இருக்கிறது. இது 'அடிப்பு' ஏனெனில், நீரால் அடித்துத் தள்ளப்படுவது தானே அது என்பார்.

'காபி' என்பதைப் பாவாணர் 'குளம்பி' என்பார். புரியாமலே பலர் குழம்பை நினைத்துக்கொண்டு குழம்புவர்; ஆனால், அவர் வேர்வழியாக விளக்கும்போது வியவாமல் முடியாது. 'காஃப்' என்பது கன்றுக்குட்டி. அதன் கால் குளம்பு என்ன வடிவில் உள்ளது ? அதே வடிவில் உள்ள விதைக்குக் காபி என்று பெயராயிற்று. காபி, இலத்தீனச் சொல்; அது, பிரெஞ்சு மொழிக்கு வந்து, பின் ஆங்கிலமாக வழங்குகிறது. குளம்பு வடிவில் இருக்கும் கொட்டையின் வடிநீர் 'குளம்பி' என்பது, பாவாணரின் மூலமும் முறையும் அமைந்த மொழிபெயர்ப்புச் சிறப்பை உணர்த்தும்.

ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் உள்ளனவே! இவற்றை எப்படி வரன்முறைப்படுத்துவது எனின் பாவாணர் சொல்வார்:

"தோகை என்பது ஒரு சொல்; அது மயில்தோகை, கரும்பு நெல் முதலியவற்றின் தோகை; மகளிர் கூந்தல், மகளிர் எனப் பொருள் தருகிறது. இப்பொருள்கள் எவ்வரிசையில் தோன்றின எனின், ஒரு நெறிமுறையை அறிந்துகொள்ள வேண்டும். நிலைத் திணையில் இருந்து இயங்கு திணைக்கும் காட்சிப் பொருளில் இருந்து கருத்துப் பொருளுக்கும் விரிவுறும். அவ்வகையில், ''நெல் கரும்பு முதலியவற்றின் தோகைப் பெயர், அவ்வகையில் அமைந்த மயில்தோகைக்கு ஆகி, அத்தோகை போன்ற கூந்தலுக்கும், அக்கூந்தலையுடைய மகளிருக்கும் பொருளாகி வளர்ந்தன'' என்பார்.

சொல்லாய்வாளி கண்ணில் இலக்கியமும் இலக்கணமும் தனிப்பொலிவு பெறும்.

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்''

என்னும் குறளை அறிவோம். பாவாணர் பார்வையில், அக்குறள் அரிய உவமையாய்ப் பொருள் விளக்கம் புரிகிறது. 'தமிழ்நாட்டு விளையாட்டுகள்' என்னும் நூலில் காட்சியளிக்கிறது அது.

இடுக்கண் என்பது ஒரு காளை; அது முட்டி மோத வருகிறது; சல்லி கட்டு அல்லது மஞ்சுவிரட்டு வீரன் வாலெடுத்து, கால்தூக்கி, கொம்பு சாய்த்து – குத்தவரும் காளையைக் கண்டு அஞ்சாமல், 'என்னையா மோதப் பார்க்கிறாய்' என நகைத்து, அதன் கொம்பைப் பற்றித் திமிலைப் பிடித்து முதுகில் ஏறி ஊர்வது போல, இடுக்கண் என்னும் காளையைக் கண்டு அஞ்சாமல் நகைத்து, அதன் மேல் ஏறி ஊர்ந்து வீறு காட்டுக என்பார். இப்பொருள் காண உதவியது எது ? 'ஊர்வது' என்னும் சொல். ''ஊர்தி வால்வெள் ஏறே'' என்பது புறநானூறு.

கதிரில் இருந்து ஒளியையும், மதியில் இருந்து தண்மையையும் மலரில் இருந்து மணத்தையும் பிரிக்க முடியாமை போலத் தமிழில் இருந்து பாவாணரையோ, பாவாணரிலிருந்து தமிழையோ பிரிக்க முடியாத தற்கிழமை உடையது என்பது இவற்றால் தெளிவாம்.

• • •

# வாக்காளர் பட்டியல் கணக்கெடுப்பு


இந்திய தேர்தல் ஆணையம் 1–1–2002 நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு முறை திருத்தத்திற்கான ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக கீழ்க்கண்ட கால அட்டவணையை அறிவித்துள்ளது.

1. வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலில் தற்போதுள்ள விவரங்களைச் சரிபார்க்கும் பணி 5–11–2001 முதல் 4–12–2001 வரை நடைபெறவுள்ளது.

2. வரைவு வாக்காளர் பட்டியல் 16–1–2002 நாளன்று வெளியிடப்படும்.

3. வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்களைப் புதிதாக சேர்க்க / நீக்க / சரி செய்ய 16–1–2002 முதல் 31–1–2002 வரை மனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

4. இறுதி வாக்காளர் பட்டியல் 25–3–2002 நாளன்று வெளியிடப்படும்.



**கணக்கெடுப்பாளர்கள் ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட பட்டியல்களைக் கொண்டு வருவார்கள்**

1. தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்களைச் சரிபார்ப்பதற்கான தொடக்கப் பட்டியலை கொண்டு வருவர். இத்தொடக்கப் பட்டியல் பிரிவு ஏ, பிரிவு பி, பிரிவு சி என்ற 3 பிரிவுகளை உள்ளடக்கியிருக்கும்.

- வாக்காளர் பட்டியலில் ஒவ்வொரு பாகத்திலுள்ள வாக்கு சாவடியின் விவரங்கள் பிரிவு ஏ–ல் குறிக்கப்பட்டிருக்கும்.
- பிரிவு பி–ல் தற்போதைய வாக்காளர்களின் விவரங்களோடு, இரண்டு பெயர்களுக்கு நடுவில் ஒரு காலியிடம் ஒதுக்கப்பட்டிருக்கும். இந்த இடத்தில் குடும்பத் தலைவரிடமிருந்து பெறப்படும் விவரங்கள் பதியப்படும்.
- பிரிவு சி–ல் புதிதாக சேர்க்கப்பட உள்ள வாக்காளர்களின் விவரங்கள் பதியப்படும்.

**வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலுள்ள விவரங்களைச் சரிபார்ப்பதற்கான பட்டியல்**

ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டையிலுள்ள குறைபாடுகளைக் கணக்கெடுப்பாளரிடம் தெரிவிக்கலாம்.

**கணக்கெடுப்பு பதிவுரு**

- ஒவ்வொரு குடும்பத்திலும் சரிபார்க்கப்பட்ட / சேர்க்கப்பட / நீக்கப்படவுள்ள வாக்காளர்களின் பெயர் மற்றும் தொடர் எண் இந்த பதிவுருவில் குறிக்கப்படும். கணக்கெடுப்பாளர் மற்றும் குடும்பத் தலைவர் (அ) மூத்த குடும்ப உறுப்பினர் ஆகியோர் கையொப்பமிட்ட பின் இந்த பதிவுருவின் நகல் குடும்பத் தலைவரிடம் (அ) மூத்த குடும்ப உறுப்பினரிடம் கொடுக்கப்படும்.

குடும்பத் தலைவரிடம் (அ) மூத்த குடும்ப உறுப்பினரிடமிருந்து கீழ்க்கண்ட தகவல்கள் சேகரிக்கப்படும்.

- உள்ளாட்சி மன்றங்களால் சமீபத்தில் வழங்கப்பட்ட புதிய கதவிலக்கம்.
- குடும்பத்தில் தற்போதுள்ள வாக்காளர்களின் சரியான பெயர் மற்றும் பிற விவரங்கள்;
- 1–1–2002 நாளன்று 18 வயது பூர்த்தியாகக்கூடிய குடும்பத்தைச் சார்ந்த நபர்களின் பெயர்கள், மற்ற விவரங்கள்;
- வாக்காளர் பட்டியலில் இருந்து ஏதேனும் ஒரு காரணத்தினால் விடுபட்டுபோன நபர்களின் பெயர்கள்;
- ஒரு வாக்காளரோ (அ) ஒரு குடும்பமோ அந்த பகுதிக்கு புதிதாக குடிபெயர்ந்து வந்திருப்பின் அவர்கள் எந்த பகுதியிலிருந்து குடி பெயர்ந்துள்ளனர் என்ற விவரங்கள்;
- தற்செயலாக வீட்டுக்கு வரும் நபர் (அ) விருந்தினர் (ஆ) வெளிநாட்டிலிருக்கும் குடும்ப நபர்களின் பெயரைச் சேர்ப்பதற்கு அந்த குடும்பத் தலைவர் (அ)

மூத்த குடும்ப உறுப்பினர் விவரங்களைக் கொடுக்கக்கூடாது.

- ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டையிலுள்ள வாக்காளரின் விவரங்கள்;

- தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள இறந்த நபர்கள் பற்றிய விவரங்கள்.

- வீடு வீடாக சென்று சரிபார்க்கும் பணி நடைபெறும் போது வீடு பூட்டப்பட்டு இருந்தால் கணக்கெடுப்பாளர் மீண்டும் அந்த வீட்டிற்கு வருகை தருவார். அவ்வாறு மூன்று முறை சென்ற பின்பும் வீடு பூட்டப்பட்டிருப்பின் படிவம் 4–ஐ கணக்கெடுப்பாளர் அந்த வீட்டினுள் போடுவார்.

- அந்த குடும்ப தலைவர் (அ) மூத்த குடும்ப உறுப்பினர் அந்த படிவத்தை பூர்த்தி செய்து கணக்கெடுப்பாளரிடமோ (அ) மேற்பார்வையாளரிடமோ (அ) தாலுகா அலுவலகத்திலோ (அ) வருவாய் கோட்ட அலுவலகத்திலோ ஒப்படைக்க வேண்டும். சென்னை மாநகரை பொறுத்தவரை மாநகராட்சியின் 1 முதல் 10 வரையிலான மண்டல அலுவலகங்களில் கொடுக்க வேண்டும்.

**வாக்காளர் பட்டியல் வெளியீடு**

- தொடக்கப் பட்டியலில் சேகரிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் வரைவு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு 16–1–2002 நாளன்று அந்தந்த தொகுதியிலுள்ள வாக்குச்சாவடி / பஞ்சாயத்து அலுவலகம் / தாலுகா அலுவலகம் / வருவாய் கோட்ட அலுவலகம் / நகராட்சி அலுவலகம் மற்றும் சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகம் (1 முதல் 10) ஆகிய இடங்களில் வெளியிடப்படும். அந்த வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாத வாக்காளர்கள் படிவம் 6–ல் விண்ணப்பிக்கலாம்.

- வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் பெயர்களை நீக்குவதற்கு படிவம் 7–ல் விண்ணப்பிக்கலாம்.

- வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விவரங்களைத் திருத்துவதற்கு படிவம் 8–ல் விண்ணப்பிக்கலாம்.


தோராயமாக 1000 வாக்காளர்களுக்கு ஒரு கணக்கெடுப்பாளர் என்றும், 4/5 கணக்கெடுப்பாளர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் என்றும் சுமார் 62,000 பேர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

✧ ✧ ✧

## அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஓய்வுபெற்ற அரசு ஊழியர் ரூபாய் பத்து இலட்சம் நன்கொடை

தமிழக கருவூல கணக்குத் துறையில் கணக்கு அலுவலராக 36 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் திரு. தி. நெ. முத்துக்குமாரசாமி. இவர் தமது ஓய்வூதிய பயன்களாகிய பணிக்கொடை, சேமநல நிதி ஆகியவைகளை சேர்த்து ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையை காஞ்சிபுரம் மாவட்டம், குரோம்பேட்டை - இலட்சுமிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி.வளர்மதி அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு.தம்பிதுரை அவர்களிடம் காசோலையை வழங்கினார். பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பாக மேற்படி காசோலையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து தலைமை ஆசிரியை திருமதி ஆர்.விஜயலட்சுமி பெற்றுக் கொண்டார். கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாற்றில் இவ்வாறு ஓர் அரசு ஊழியர் ஓய்வூதியப் பயன்களை நன்கொடையாக வழங்குவது இது முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியின்போது தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு.ஜானகிராமன், பல்லவபுரம் நகர மன்றத் தலைவர் திரு.ப.தன்சிங் மற்றும் வழக்கறிஞர் திரு.நாகேஸ்வரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

✧ ✧ ✧




பான் மசாலாவைச் சுவைப்பது காரணமாக அவ்வாறு சுவைப்போருக்கு பண்பு மாற்றம் (Mutagenic) ஏற்பட்டு, அது மரபுக் கூறில் ஊனங்களை (Genetic deformitics) ஏற்படுத்துகிறது என்று திருவனந்தபுரத்தில் உள்ள புற்றுநோய் வட்டார மையம் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவருகிறது. இந்திய மருத்துவ பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட செய்தியின்படி பான் மசாலா மற்றும் குட்காவைச் சுவைக்கத் தொடங்கி இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் வாய்ப் புற்றுநோய்க்கான அறிகுறிகள் தென்படும்.

# பான் மசாலா - குட்கா விற்க தடை

– மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு.**எஸ். செம்மலை**

புகையிலையை வாயில் இட்டு சுவைப்பதால் மற்றும் பயன்படுத்துதலால் வாயில் புற்றுநோய் ஏற்படுவதோடு உடலின் ஏனைய உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன. வாயில் மென் சவ்வு இழைமப் பெருக்கம் (Fibrosis) ஏற்பட்டு, அது வாயில் புற்றுநோய் ஏற்பட வழி வகுக்கிறது. புகையிலையை வாயில் இட்டுச் சுவைத்தால் அல்லது புகையிலை சேர்க்கப்பட்ட பான் மசாலா மற்றும் குட்காவைத் துய்க்கும் பழக்கம் முந்தைய நிலைக்கு மாற்ற முடியாத, உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய உடல்நலச் சிக்கல்களுக்கு வழி வகுக்கிறது.

தற்போது வயது வித்தியாசமின்றி இளைய தலைமுறையினர் பான்மசாலாவைச் சுவைக்கும் தீயபழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர். சுவைக்கும் புகையிலை சேர்க்கப்பட்ட பான் மசாலாவை தொடர்ந்து ஐந்து முதல் ஏழாண்டுகள் வரையில் சுவைத்து வந்தால் அது சீதப்படலத்தின் கீழ் (Sub-Muscosfibrosis) இழைமப்பெருக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும் இது வாயைத் திறக்க இயலாத நிலைக்கு படிப்படியாக இட்டுச் செல்லும் என்றும் ஐதராபாத் தேசிய ஊட்டச் சத்து நிறுவனம் ஒரு ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளது. புகையிலையுடன்

இந்நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் மூன்றில் ஒரு பங்கினர் பான் மசாலாவைப் பயன்படுத்தியதால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். இந்தியாவில் வாயில் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுவதற்கு புகையிலை சுவைக்கும் பழக்கம் தான் காரணமாகும். வாயில் புற்றுநோய் ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 1967 ஆம் ஆண்டில் 10,000 பேருக்கு 16 பேர் என்றிருந்த நிலை மாறி 1994 ஆம் ஆண்டில் 10,000 பேருக்கு 320 பேர் என்று அதிகரித்தது. இவர்களில் 80% (எண்பது) சதவீதத்தினர் 35 வயதிற்குக் குறைவானவர்கள் ஆவர்.

இத்தீய பழக்கத்திற்கு இளைய தலைமுறையினர் அடிமையாகி வருவதால், இதில் தலையிட்டு பொதுமக்களின் உடல்நலத்தை அதிலும் குறிப்பாக இந்த நாட்டில் எதிர்காலமாகத் திகழும் இளைய தலைமுறையினரின் உடல்நலத்தைப் பாதுகாக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

எனவே மக்களின் உடல்நலத்தைப் பேணிக்காப்பதற்காக இந்த அரசு, சுவைக்கும் புகையிலை மற்றும் புகையிலை சேர்க்கப்பட்ட அல்லது உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கும் வேறு எந்தவொரு பொருளும் எந்தவொரு வடிவிலும் சேர்க்கப்பட்ட பான் மசாலா, குட்கா எந்த பெயரில் விநியோகிக்கப்பட்டாலும் அவற்றை விற்பனைக்காகத் தயாரித்தல், சேமித்து வைத்தல், விற்பனை செய்தல், விநியோகித்தல் ஆகியவற்றை 19–11–2001இல் இருந்து ஐந்தாண்டு காலத்திற்கு தடை செய்கிறது.

பொதுமக்கள் உடல்நலம் பேணுதலுக்காக பொது சுகாதாரப் பிரிவில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை பொதுமக்களின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பைப் பெறும் என உறுதியாக நம்புகிறேன். •

# ஜவகர்லால் நேரு

இந்திய வரலாற்றுடன் பண்டித நேருவின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ளது. மகாத்மா காந்தியை அடுத்து, இந்திய மக்களின் மனம் கவர்ந்தவர்; 'மனிதருள் மாணிக்கம்' என்றும், 'நவ இந்தியாவின் சிற்பி' என்றும் போற்றப்படுபவர்.

நேருவின் முன்னோர்கள், காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். 18ஆம் நூற்றாண்டில் டெல்லியில் குடியேறினார்கள்.

நேருவின் தாத்தா பெயர் கங்காதர் நேரு. அவர் தனது 24—வது வயதில் காலமானார். அவர் இறந்தபோது அவர் மனைவி கர்ப்பிணி. மூன்று மாதத்துக்குப்பின் பிறந்த குழந்தை தான், நேருவின் தந்தை மோதிலால் நேரு.

மோதிலாலுக்கு 2 அண்ணன்கள் இருந்தார்கள். மூத்தவரான பன்சிதார், நீதிபதியானார். அடுத்தவர் வக்கீலானார்.

மோதிலாலும் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். தொழிலில் மகத்தான வெற்றி பெற்றார். பணம் கொட்டியது. அலகாபாத்தில் "ஆனந்த பவனம்'' என்ற பெயரில் அரண்மனை போன்ற மாளிகையைக் கட்டி, அங்கு வசிக்கலானார்.

### நேரு பிறந்தார்

மோதிலால் நேருவின் மனைவி பெயர் சொரூபராணி, அழகும், அமைதியும் மிக்கவர்.

இந்தத் தம்பதிகளின் ஒரே மகனாக, ஜவகர்லால் நேரு 1889 நவம்பர் மாதம் 14—ந் தேதி பிறந்தார். இவருக்கு 2 தங்கைகள். முதல் தங்கை விஜயலட்சுமி 1900ம் ஆண்டும், அடுத்த தங்கை கிருஷ்ணா 1907—லும் பிறந்தார்கள்.

ஆரம்பத்தில் மோதிலால் நேருவுக்கு *ஆங்கிலத்தில் ஆர்வம் அதிகம். கோட்டும், சூட்டும் தான் அணிவார். பேசுவது பெரும்பாலும் ஆங்கிலத்தில் தான்.*


தன் மகன் மேல் நாட்டிற்கு சென்று படிக்க வேண்டும் என்று மோதிலால் விரும்பினார். அதன்படி நேரு லண்டன் சென்று படித்தார். பார்—அட்—லா பட்டம் பெற்றார்.


தந்தையைப் போலவே அவரும் வக்கீல் தொழில் தொடங்கினார்.

முதன் முதலாக, 1912—ல் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் நேரு கலந்து கொண்டார். பேச்சாளர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் பேசினார்கள். அதனால், காங்கிரஸ் மீது நேருவுக்கு ஈடுபாடு ஏற்படவில்லை.

1915—ல் மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்து திரும்பியதும், சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். 1916 டிசம்பர் 25—ந் தேதி கிறிஸ்துமஸ் தினத்தில் காந்தியை முதன்முதலாக நேரு சந்தித்தார். காந்தியின் காந்தசக்தி நேருவைக் கவர்ந்தது.

ஆங்கில மோகம் கொண்டிருந்த தன் தந்தையின் மனதை நேரு





மாற்றினார். தந்தையும், மகனும் காங்கிரசில் சேர்ந்தார்கள்.

## திருமணம்

1916 பிப்ரவரி மாதத்தில் நேருவுக்கும், கமலாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் மனமொத்த தம்பதிகளாக வாழ்ந்தனர்.

இவர்களின் மகளாக 1917 நவம்பர் 19–ந் தேதி இந்திராகாந்தி பிறந்தார்.

இந்திராவுக்கு பிறகு, 1924–ல் கமலாவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தை இரண்டு நாட்களில் இறந்துவிட்டது.

ஒரே குழந்தையான இந்திராவை நேருவும், கமலாவும் செல்லமாக வளர்த்தனர்.

கமலாவும், காங்கிரசில் சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் கணவருடன் பலமுறை சிறை சென்றார்.

1913 டிசம்பர் மாதத்துக்கும், 1935 செப்டம்பர் மாதத்துக்கும் இடையே மட்டும் நேரு 1,170 நாட்களைச் சிறையில் கழித்தார்.

## கமலா மரணம்

கமலா அடிக்கடி நோய் வாய்ப்பட்டார். சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்தும் பலன் இல்லை. 1936 பிப்ரவரி 28–ந் தேதி சுவிட்சர்லாந்து நாட்டிலேயே அவர் மரணம் அடைந்தார். அவர் உடல் அங்கேயே தகனம் செய்யப்பட்டு, அஸ்தி இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது.

மனைவியை இழந்தபோது நேருவுக்கு வயது 47. அன்பு மனைவியின் மரணம் அவரை வெகுவாகப் பாதித்தது. காந்தி அவருக்கு ஆறுதல் கூறினார்.

சுதந்திரப் போராட்டம் வரவரத் தீவிரம் அடைந்தது. நேரு அதில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். சிறைவாசம் தொடர்ந்தது.

## காந்தியின் வாரிசு

மகாத்மா காந்தியைத் தன் வழிகாட்டியாகவும், குருவாகவும் நேரு கருதினார் என்றாலும், பலமுறை கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறார். காந்தியுடன் பலமுறை விவாதங்கள் நடத்தியதுண்டு. என்றாலும் கடைசியில் காந்தி காட்டிய வழியிலேயே செல்வது வழக்கம்.

"காந்தியின் வாரிசு யார் ?'' என்ற கேள்வி காங்கிரஸ் தலைவர்களிடமும், மக்கள் மனதிலும் எழுந்தபோது, ''நேருவே என் வாரிசு'' என்று திட்டவட்டமாக மகாத்மா காந்தி அறிவித்தார்.

1942 ஜனவரி 25–ந் தேதி 'ஹரிஜன்' பத்திரிக்கையில் காந்தி பின்கண்டவாறு எழுதினார்:

"என்னையும், நேருவையும் கருத்து வேற்றுமைகளால் பிரிக்க முடியாது. அறிமுகம் ஆன நாளில் இருந்தே, எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. எனினும் சில ஆண்டுகளாக நான் கூறி வருவதை, இப்போதும் கூறுகிறேன். என்னுடைய வாரிசு ஜவகர்லால் நேரு தான்''.

என்னுடைய சில கருத்துக்களும், போக்குகளும் தனக்குப் புரியவில்லை என்றும், அவர் பேச்சும், போக்கும் எனக்குப் புரியவில்லை என்றும் நேரு கூறுகிறார். இது சரியாக இருக்கலாம்; சரி இல்லாமலும் இருக்கலாம். ஆனால், இதயங்களின் சங்கமத்திற்கு, இந்தப் பேச்செல்லாம் தடையாக இருக்க முடியாது.

"இப்போது மாறுபட்ட கருத்துக் களைக் கொண்டிருந்தாலும், நான் கண்மூடிய பிறகு என் கருத்துக் களையே நேரு கூறுவார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்!''

இவ்வாறு எழுதிய காந்தி, பின்னொரு சமயம் சொன்னார்,

"துணிவில் யாரும் நேருவை மிஞ்ச முடியாது. நாட்டுப் பற்றிலும் அவரை மிஞ்சுவதற்கு யார் இருக்கிறார்கள் ?

அவரிடம் துடிப்பு இருக்கிறது. வீரன் போல அவர் பாய்ந்தாலும், ராஜதந்திரத்துக்குரிய விவேகம் அவரிடம் உண்டு.

பளிங்கு போல் தூய்மையானவர், அவர். தர்மம் தவறாதவர். நாடு அவரிடம் பத்திரமாக இருக்கும்.

காந்தி அன்று கூறியது சத்தியவாக்கு ஆயிற்று.

செல்வக் குடும்பத்தில் பிறந்தாலும், நாட்டுக்காக 10½ ஆண்டுகள் சிறையில் இருந்தார் நேரு.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின், முதல் பிரதமராக நேரு பொறுப்பேற்றார்.

## நவ இந்தியாவின் சிற்பி

மேல் நாடுகளுக்கு இணையாக, இந்தியாவை முன்னேறச் செய்ய வேண்டுமென்று நேரு விரும்பினார். அதற்காக ஐந்தாண்டு திட்டங்களை வகுத்தார். பெரிய தொழிற்சாலைகளை நிறுவினார்.

அமெரிக்கா, ரஷியா உள்பட அனைத்து நாடுகளும் நேருவிடம் அன்பும் மரியாதையும் காட்டின. நேரு எந்த வல்லரசு நாடுகள் பக்கமும் சாயாமல், நடுநிலைமை வகித்தார். நடுநிலை நாடுகளுக்குத் தலைவராக விளங்கினார்.

1963 ஜனவரியில் ஒரிசா மாநிலம் புவனேசுவரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்ட போது, அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. எனினும், சிகிச்சைக்குப் பின் குணம் அடைந்தார்.

அவருக்கு ஓய்வு தேவை என்று டாக்டர்கள் கூறினார்கள். ஒரு சில நாட்கள் மட்டுமே ஓய்வு எடுத்தார். பின்னர் வழக்கம்போல் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு, விவாதங்களில் பங்கெடுத்துக் கொண்டார்.

## கடைசி நாட்கள்

1964 மே மாதம், அவர் டேராடூன் நகருக்குச் சென்று, சில நாட்கள் ஓய்வு எடுத்தார். அப்போதும் அவர் அரசாங்க "பைல்"களைப் பார்த்துக் கையெழுத் திட்டார். புத்தகங்கள் படித்தார்; எழுதினார்; பழைய நண்பர்களைச் சந்தித்து அளவளாவினார்.

மே 26–ந் தேதி அவர் டெல்லி திரும்பினார். அவர் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் காணப்பட்டார்.

நள்ளிரவு வரை அரசாங்க அலுவல்களைக் கவனித்தார். இரவு 12 மணி அளவில் தூங்கச் சென்றார்.

மே 27–ந் தேதி காலையில் எழுந்தபோது, சோர்ந்து காணப்பட்டார். ஒரு புத்தகத்தைப் படிக்கலானார். ஆனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. மீண்டும் கட்டிலில் படுத்தார்.

டாக்டர்களுக்குத் தகவல் பறந்தது. பெரிய டாக்டர்கள் விரைந்து வந்து, தீவிர சிகிச்சைகள் அளித்தனர்.

நேரு கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக, டெல்லியில் காட்டுத் தீ போல செய்தி பரவியது. அவர் வீட்டு முன் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிவிட்டனர்.

## இருள் சூழ்ந்தது

டாக்டர்கள் எவ்வளவோ முயன்றும், நேருவின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. பிற்பகல் 2 மணிக்கு நேரு மறைந்தார்.

உயிர் பிரியும்போது, இந்திரா காந்தி, தந்தையின் அருகே இருந்தார்.

நேருவின் மரணம், அகில உலகத்தையும் அதிர்ச்சி அடையச் செய்தது. இந்தியா அனாதையாகி விட்டது போலத் தோன்றியது.

மே 28–ந் தேதி ராணுவ மரியாதையுடன் இறுதி ஊர்வலம் நடந்தது. இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். உலகத் தலைவர்கள் பலர் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் யமுனை நதிக்கரையில் நேருவின் உடல் தகனம் செய்யப்பட்டது.

நேருவின் உயிலின்படி, அவருடைய அஸ்தி (சாம்பல்) விமானத்தில் இருந்து, இமய மலைச்சாரலிலும், வயல்வெளிகளிலும் தூவப்பட்டது.

## எழுத்தாளர்

நேரு சிறந்த எழுத்தாளர்; பேச்சாளர்.

நேரு சிறையில் இருந்தபோது, 1930 மார்ச் 26–க்கும் 1933 ஆகஸ்ட் 9–க்கும் இடையே தன் மகள் இந்திராவுக்கு உலக வரலாற்றை விவரிக்கும் 176 கடிதங்களை எழுதினார்.

இந்தக் கடிதங்கள் தொகுக்கப்பட்டு "உலக சரித்திரம்" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது. சுமார் 1,000 பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகம், உலகின் மிகச் சிறந்த இலக்கியங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

இதுதவிர, "நான் கண்ட இந்தியா" என்ற புத்தகத்தையும், தன் சுயசரிதையையும் நேரு எழுதியிருக்கிறார். இந்த நூல்களும், அவர் சிறையிலிருந்தபோது எழுதப்பட்டவைதான்.

டெல்லியில் நேரு வசித்த வீடு. ("தீன் மூர்த்தி") நினைவு இல்லமாக விளங்குகிறது. அவர் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் சமாதி அமைக்கப்பட்டு, "சாந்திவனம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்தியாவின் நலனுக்காகவே வாழ்ந்த நேருவின் வரலாறு, இந்தியச் சரித்திர ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட்டுள்ளன என்றால், அது மிகை அல்ல.

நன்றி: *"ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு"*

• • •

மாநிலங்களைப் பாதிக்கின்ற பிரச்சனைகள் பற்றியும் சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், அரசியல் சட்டத்தின் செயல்பாட்டில் மாற்றங்களைப் பரிசீலிக்கவும், இந்திய அரசியலமைப்பில் உண்மையான கூட்டாட்சியை உருவாக்கும் பொருட்டு வரைமுறைகளையும் நெறிமுறைகளையும் உருவாக்குவது பற்றி பரிசீலிக்கவும் கூட்டப்பட்டுள்ள மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.



இந்திய அரசியலமைப்பு சட்டத்தை வல்லுநர்கள் பகுபடாத அரசு முறைக்கு ஆதரவான அரை கூட்டமைப்பு அமைப்பாகவே கருதுகின்றனர். மத்திய அரசுக்கு ஆதரவாக அரசியல் சட்டத்தின் ஒருதலைப்பட்சமான போக்கை கட்டுப்படுத்துவதில் சில வரையறைகள் இருக்கின்றன. கடந்த கால வரலாற்றின் அனுபவத்தில் இத்தகைய ஒருதலைப்பட்சமான அச்சம் வலிமையான மாநிலங்கள் ஒன்றுபட்டு வலிமையான தேசிய ஒற்றுமைக்கு எதிராக அமையும் என்ற அச்சத்தில் உருவாகியிருக்கலாம். விடுதலை பெற்று 50 ஆண்டுகளுக்கு மேல் ஆன நம் அனுபவத்தில் இத்தகைய அச்சத்திற்கு இனிமேலும் உண்மையான அடிப்படை கிடையாது. உண்மையில், பல்வேறு மாநிலங்கள் மற்றும் பகுதிகளில் நிலவும் கலாச்சார மற்றும் இதர வேற்றுமைகளைப் புரிந்து கொள்ளாததுதான் தேச ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிப்பதாக அமையும். மாநிலங்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்க வேண்டிய உணர்வு ஏற்பட வேண்டும். மத்திய அரசின் அணுகுமுறை மாநிலங்களில் ஆட்சியில் உள்ள கட்சிகளைப் பொறுத்து அமையக்கூடாது.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் 1963ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய உரையின் பகுதிகளை இந்நிலையில் எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

> *"நமக்கு கூட்டமைப்பு இருக்கிறது. அதனால்தான் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் கூட்டமைப்பை விரும்பினார்களே ஒழிய பகுபடாத (Unitary) அமைப்பை விரும்பவில்லை. உண்மையில் பல்வேறு அரசியல் தத்துவஞானிகள் கூறியபடி இந்தியா மிகப் பரவலானது – இன்னும் சொல்லப்போனால் இந்தியா ஒரு துணைக்கண்டம் என்றே வர்ணிக்கப்படுகிறது. இங்கே மனநிலை மிகவும் மாறுபடுகிறது. பாரம்பரியங்கள் பல்வேறு விதமானவை; வரலாறு பல்வேறு விதமானவை; ஆகவே உருக்குப் போன்ற பகுபடாத ஒரு அமைப்பு இங்கே இருக்க முடியாது"*

நான் என்ன கூற விரும்புகிறேன் என்றால், இங்கே கூட்டமைப்பின் செயல்பாடு மாநிலங்களை மென்மேலும் ஏமாற்றத்திற்கு ஆளாக்குகின்றது. அரசியல் சட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றதொரு சிந்தனை மத்திய அரசுக்கு வரவேண்டும் என்று மாநிலங்கள் கோருகின்றன.

மத்தியிலும், மாநிலங்களிலும் ஒரே கட்சி ஆட்சியில் இருக்கும்போது மத்திய மாநில உறவுகள் சுமுகமாக இருப்பதை நாம் கண்டு வருகிறோம். மத்தியில் ஒரு கட்சியும், மாநிலங்களில் பிராந்தியக் கட்சியும் ஆட்சியில் இருக்கும் போதெல்லாம் மத்திய அரசின் அணுகுமுறையும், கொள்கையும் அரசியல் கண்ணோட்டத்தில் தான் இருந்து வருவதையும் கண்டு வருகிறோம். மேற்கூறிய நிலையில், சர்க்காரியா கமிஷன் அறிக்கையும் இத்தகைய கூட்டங்களில் அது சம்பந்தப்பட்ட விவாதங்களும் அதி முக்கியத்துவம் பெறுகின்றன. நமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்ட விவாதப் பொருளில் உள்ள முக்கியமான அம்சங்கள் குறித்து எங்கள் கருத்துக்களை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். மாறுபட்ட சூழ்நிலையில் சில முக்கியமான பிரச்சினைகளில் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்துள்ளோம், ஓரளவிற்கு எங்கள் நிலைப்பாட்டை மாற்றி அமைத்துள்ளோம்.

நாம் மத்திய அரசு அதிகாரப் பட்டியலில் இருந்தும், மத்திய மாநில அரசுகளின் பொதுப் பட்டியலில் இருந்தும் மாநில அரசு அதிகாரப் பட்டியலுக்கு சில அதிகாரங்களை மாற்றினால் (மாநிலப் பட்டியலிலிருந்து மாற்றுவது அல்ல) நமது அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள்

> மாநிலங்கள் சுயசார்பு அடையவும், நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு பாதுகாத்து பேணப்படவும் அரசியல் சட்டத்தில் மாநிலங்களின் பங்கு படிப்படியாக விரிவடையச் செய்யப்பட வேண்டும்.

விரும்பிய கூட்டமைப்பை பேணிப் பாதுகாத்து வலுப்படுத்த முடியும்.

குறிப்பாக மாநிலங்கள் சுயசார்பு அடையவும், நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு பாதுகாத்து பேணப்படவும் அரசியல் சட்டத்தில் மாநிலங்களின் பங்கு படிப்படியாக விரிவடையச் செய்யப்பட வேண்டும்.

வரிவிதித்தல் உட்பட மிகுந்திருக்கிற பிரச்சினைகளில் சட்டம் இயற்றுகின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தான் இருக்க வேண்டுமே தவிர மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது என்பது எங்கள் கருத்தாகும். மிகுந்திருக்கிற சட்டம் இயற்றும் அதிகாரங்களை மத்திய – மாநில அரசுகளின் அதிகார பொதுப் பட்டியலில் சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்துள்ளபடி மாற்றுவது தற்போதைய நிலைமையை விட முன்னேற்றமுள்ளதாகவே இருக்கலாம். ஆனால், இது எந்த விதத்திலும் மாநிலங்களின் நலன்களுக்கு உதவாது.

மத்திய – மாநில அரசுகளின் கூட்டு அதிகாரப் பட்டியல் சம்பந்தப்பட்ட மத்திய அரசின் சட்டமியற்றும் அதிகாரங்களைப் பொறுத்தமட்டில் சர்க்காரியா கமிஷன் மாநிலங்களுடன் தனித்தனியாகவும் அனைத்து மாநில கவுன்சில் மூலமாகவும் முன்ஆலோசனை நடத்த பரிந்துரைத்துள்ளது. தற்போது உள்ள மத்திய அரசின் சட்டங்களை அமுல்படுத்துவதைப் பொறுத்தமட்டில் இந்த ஆலோசனை முறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் போதே, மத்திய அரசு உத்தேசித்துள்ள சட்டங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் மாறுபடுகிறோம்.

இந்த ஆலோசனை முறை இறுதியில் வெறும் சம்பிரதாயமாக அமையுமே தவிர, மாநிலங்களின் கருத்துக்கள் மத்திய அரசால் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்றும் நினைக்கிறோம்.

மத்திய–மாநில அரசு பொதுப்பட்டியலில் மாநில அரசின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதுதான் மாநில அரசுகளின் உரிமைகளைப் பெறுவதற்கான சரியான முறையாக அமையும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே மத்திய–மாநில அரசுகளின் அதிகாரப் பட்டியலில் உள்ள எந்தப் பொருள் சம்பந்தப்பட்ட சட்டத்தைப் பற்றியும் மாநில சட்டமன்றங்களின் ஒப்புதலின்றி நாடாளுமன்றம் நிறைவேற்றக்கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். இதற்காக அரசியல் சட்டத்தின் 246(2) பிரிவு தகுந்த முறையில் திருத்தப்பட வேண்டும். அரசியல் சட்டம் 252(2) பிரிவைப் பொறுத்த மட்டிலும்கூட 252வது பிரிவே நீக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இதற்கு மாற்றாக நாடாளுமன்றமும், சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றமும் சட்டத்தை நீக்கவோ, மாற்றவோ வலியுறுத்தும் வகையிலும் 252(2) பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று எங்கள் ஆலோசனையை முன் வைக்கிறோம். இந்தப் பிரச்சினைகளில் தமிழக அரசின் முந்தைய கருத்துக்கள் இந்த அளவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக கருதப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

‘கல்வி’ என்பது மாநில அரசின் அதிகாரப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கவே கூடாது என்று தமிழ்நாடு அரசு உறுதியாக கருதுகிறது. தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி மற்றும் பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வி, மத்திய அரசு அதிகாரப்பட்டியல் 63,64,65 ஆகிய பிரிவுகளுக்கு உட்பட்டும், தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி ஆகியவை மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மீண்டும் மாற்றப்பட வேண்டும். எனவே, இவை சம்பந்தப்பட்ட சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகள் எங்களுக்கு ஏற்புடையதல்ல.

மாநில அமைச்சர்களை விசாரணைக் கமிஷன் முன்பு நிறுத்துவது சம்பந்தமாக நாங்கள் சர்க்காரியா கமிஷன் முன்பு எங்கள் நிலைமையை தெளிவுபடுத்தியிருக்கிறோம். மத்திய–மாநில அதிகாரப் பட்டியலில் உள்ள 45–வது பிரிவு நீக்கப்பட்டு மாநில அமைச்சர் ஒருவர் மீது விசாரணையை உத்தரவிடும் அதிகாரம் மாநிலங்களுக்குத்தான் இருக்கவேண்டுமே தவிர, மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். தற்போது அந்த கருத்தையே மீண்டும் வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாடு 1986–ம் ஆண்டிலேயே சட்டமன்ற மேலவையை கலைத்துவிட்டது. அரசியல் சட்டத்தின் 169(1) பிரிவு மாநிலங்கள் 2வது அவையை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குகிறது என்றும், நாடாளுமன்றம்

மாநிலங்களின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவதாக நாங்கள் கருதுகிறோம். எனவே ஒரு மாநிலத்தில் சட்டமன்ற மேலவையை ஒழிப்பது அல்லது உருவாக்குவதற்கான சட்டம் இயற்ற நாடாளுமன்றத்துக்கு 169–வது பிரிவு வழங்கியுள்ளது. அந்த அதிகாரத்தை சம்பந்தப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை எடுக்கும் முடிவை அமுலாக்குவதற்கான பிரிவாகவே கருதவேண்டும். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்துக்கு எந்தவித தனி அதிகாரமும் கிடையாது என்றும் மாநில சட்டப்பேரவையின் தீர்மானத்தை நிராகரிக்கும் கேள்வியே எழவில்லை என்றும் நாங்கள் கருதுகிறோம். மாநில சட்டமன்றப் பேரவையின் தீர்மானம் முடிந்த அளவு விரைவாக நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் வைக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட வேண்டும். தேவைப்பட்டால் இந்த நிலைமையை தெளிவுபடுத்துவதற்கு 169–வது பிரிவு திருத்தப்பட வேண்டும். கடந்த 50 ஆண்டுகளில் நமது அனுபவத்தின் அடிப்படையில் நாட்டில் உண்மையான கூட்டாட்சியை அடைய வேண்டிய நமது குறிக்கோளுக்காகவும் பிரிட்டிஷ் அரசிடமிருந்து நாம் பாரம்பரியமாக கொண்டுள்ள ஆளுநர் என்ற பதவியை தொடரும் தேவை குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கருதுகிறோம்.

ஆளுநர் என்ற பதவி தொடர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டால், அரசியல் சட்டப்படி மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் சுமுகமாக செயல்பட உதவும் வகையிலும் மத்திய அரசின் ஏஜெண்டாக மட்டும் இல்லாத நிலையிலும் ஆளுநர் அலுவலகம் செயல்படும் வகையில் அமைப்பை நாம் உருவாக்க வேண்டும். எனவே முதலமைச்சரின் ஒப்புதலுடன் தயாரிக்கப்படும் பெயர்ப் பட்டியலில் இருந்து ஆளுநரை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என்று எங்கள் அரசு கருதுகிறது. ஆளுநர்கள் என்போர் அரசியல்வாதிகள் அல்லது ஓய்வு பெற்ற சிவில்/பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் இருந்து மட்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று எங்கள் அரசு கருதுகிறது. ஆளுநராக நியமிக்கப்படுபவர் உயர்ந்த பண்பாளராகவும், முழுமையான நம்பிக்கைக்கு உரியவராகவும் இருக்க வேண்டும். அவர் ஒருதலைப்பட்சமான அரசியலில் ஈடுபடுபவராக இருக்கக்கூடாது. ஆளுநரின் பதவி குறிப்பிட்ட காலம் வரையில் இருக்கவேண்டும். மாநில சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றினால் மட்டுமே குடியரசுத் தலைவர் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். ஆளுநர் பல்கலைக் கழகத்தின் வேந்தர் பதவியை வகிக்கும்போது அமைச்சரவையின் ஆலோசனைப்படித்தான் செயல்படவேண்டும். ஆளுநருக்கு இப்பிரச் சினையில் எந்தத் தனி அதிகாரத்தையும் அரசியல் சட்டம் குறிப்பிடவில்லை. ஆளுநர், முதலமைச்சரைத் தேர்ந்தெடுப்பது மற்றும் அவரை அரசமைக்க அழைப்பது, பெரும்பான்மையை நிரூபிக்க சட்டப் பேரவையைக் கூட்டும் முறை போன்ற இதரப் பிரச்சினைகள் குறித்து எங்கள் அரசின் கருத்துக்கள் ஏற்கெனவே தெரிவிக்கப் பட்டுள்ளன. ஆளுநர் பதவியைத் தொடருவது பற்றி ஒரு முடிவு எடுக்கப்படும் வரை 74(1), 153, 155, 158(3A), 163(1), 163(2) ஆகிய பிரிவுகளுக்கு தேவைப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

மத்திய அரசு சில சமயங்களில் இந்திய ஆட்சிப் பணியாளர்களை நடத்தும் முறை குறித்து எங்கள் அரசுக்கு அழுத்தமான கருத்து வேறுபாடுகள் உண்டு. சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளுக்கு பதிலளிக்கும்போது, நாங்கள் இரண்டே இரண்டு பணிகள் தான் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். அதாவது மாநில அரசுக்கு, மாநில சிவில் சேவை மற்றும் கூட்டாட்சி அரசின் தேவைக்கு மத்திய சேவைப் பணி ஆகியவையாகும்.

> ஆளுநர் என்ற பதவி தொடர வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டால், அரசியல் சட்டப்படி மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் சுமுகமாக செயல்பட உதவும் வகையிலும் மத்திய அரசின் ஏஜெண்டாக மட்டும் இல்லாத நிலையிலும் ஆளுநர் அலுவலகம் செயல்படும் வகையில் அமைப்பை நாம் உருவாக்க வேண்டும். எனவே முதலமைச்சரின் ஒப்புதலுடன் தயாரிக்கப்படும் பெயர்ப் பட்டியலில் இருந்து ஆளுநரை குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும் என்று எங்கள் அரசு கருதுகிறது.

இருப்பினும் இந்திய ஆட்சிப் பணிகள் உருவாக்கப்பட்டு விட்ட நிலையில், இந்திய ஆட்சிப் பணிகளின் உறுப்பினர்கள் மத்திய அரசால் மட்டும் கட்டுப்படுத்தப்படக்கூடாது. இந்திய ஆட்சிப் பணிகள் முழுவதுமாக மத்திய அரசு சேவைப் பணிகளாக மாற்றப்படும் நிலையில் மாநிலங்கள் தங்களுக்கென்று தனியான சேவைப் பணிகளை உருவாக்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறோம். இந்திய ஆட்சிப் பணிகளில் பணிபுரியும் அலுவலர்களை மத்திய அரசுக்கு பணியிட மாற்றம் செய்யும் பிரச்சினையில் சர்க்காரியா கமிஷன் பரிந்துரையில் உள்ள கட்டாயத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இத்தகைய பணிகளில் பணிபுரிபவர்கள் சர்தார் வல்லபாய் பட்டேல் கூறியபடி, “அரசியல் பிடியிலிருந்து விலகி இருக்க வேண்டும், மனநிறைவும், பாதுகாப்பும் இருக்க வேண்டும்'' இருந்தாலும் எங்கள் மாநிலத்திலிருந்து சில காவல்துறை அதிகாரிகளை மத்திய அரசு பணியிட மாற்றம் செய்த பிரச்சினையில் எடுத்த நிலைபாடு எங்களுக்கு மாநிலத்தில் பணிபுரியும் இந்திய ஆட்சிப் பணியாளர்களை மத்திய அரசு தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்புவதாக ஐயம் ஏற்பட வழிவகுத்துள்ளது. எங்களுக்குத் தெரிந்தவரை சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் எப்போதும் மாநில அரசு சார்ந்த அதிகாரிகளை சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலின்றி மத்திய அரசு வலுக்கட்டாயமாக இடமாற்றிய நிகழ்ச்சி இதற்கு முன்பு நடந்ததில்லை. மத்திய அரசின் இத்தகைய நடவடிக்கை இந்திய ஆட்சிப் பணிகளின் சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்கும். எனவே மாநிலங்களின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் இந்திய ஆட்சிப் பணி விதிகள் உட்பட அனைத்துப் பிரிவுகளும் நீக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

அனைத்து அரசு கவுன்சிலைப் பொறுத்த மட்டில், மத்திய-மாநில அரசுகளின் அதிகார கூட்டுப் பட்டியலில் உள்ள பொருட்கள் சம்பந்தமாக மசோதாக்கள் அறிமுகப்படுத்துவது உட்பட நாட்டு நலன் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களும் மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இது மாநிலங்களிடை மன்றக் கடமைகளில் ஒன்றாக மாற்றப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைக்கிறோம்.

சுரங்கங்கள் மற்றும் தாதுப் பொருட்களைப் பொறுத்தமட்டில் சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்த படி ராயல்டி தொகை இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். பழுப்பு நிலக்கரி (லிக்னைட்)க்கான ராயல்டி 5-வது பிரிவு நிலக்கரிக்கு ஈடாக திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று

அனைத்து அரசு கவுன்சிலைப் பொறுத்தமட்டில், மத்திய-மாநில அரசுகளின் அதிகார கூட்டுப் பட்டியலில் உள்ள பொருட்கள் சம்பந்தமாக மசோதாக்கள் அறிமுகப்படுத்துவது உட்பட நாட்டு நலன் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களும் மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இது மாநிலங்களிடை மன்றக் கடமைகளில் ஒன்றாக மாற்றப்பட வேண்டும்.

நாங்கள் கோரி வருகிறோம். தாதுப்பொருட்களின் விலைகளில் அடிக்கடி ஏற்பட்டு வரும் மாறுதல்களால் ஒட்டுமொத்த அளவு அடிப்படையில் ராயல்டி வசூலிப்பது மிகவும் சிரமமானது என்று எங்கள் அரசு கருதுகிறது. எனவே ஒட்டுமொத்த அளவு அடிப்படையில் அல்லாமல் டன் அடிப்படையில் ராயல்டி தொகையை நிர்ணயிக்கும் முறையை கொண்டு வரவேண்டும்.

1984ஆம் ஆண்டு சர்க்காரியா கமிஷன் எழுப்பிய பிரச்சினைகளுக்கு பதிலளிக்கையில், அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையில் ஆங்கிலம் இணைக்கப்பட வேண்டும் என்றும் 8-வது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் எங்கள் கருத்தை வலியுறுத்தியிருக்கிறோம். அத்தகைய முடிவு எடுக்கப்படும் வரை ஆங்கிலம் மத்திய அரசின் ஆட்சிமொழியாக தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். ஆங்கிலம் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையிலும், மாநிலங்களுக்கு இடையில் தகவல் பரிமாற்றத்திற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு தொடர்ந்து உறுதியாக மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதை எதிர்த்து வந்துள்ளது. தமிழ்நாடு நடைமுறைப் படுத்தும் இருமொழிக் கொள்கை நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. எனவே மும்மொழிக் கொள்கை பற்றிய சர்க்காரியா கமிஷன் பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை.

மக்கள் தொடர்பு சாதனங்கள் சம்பந்தப்பட்ட விவாதப் பொருளைப் பொறுத்தமட்டில், நாங்கள்

சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை பொதுவாக ஏற்றுக் கொள்கிறோம். இருப்பினும் தனியார் துறைக்குச் சொந்தமான செயற்கைக்கோள் தொலைக்காட்சி நிறுவனங்கள் சமுதாயத்தின் மீதும், மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள அரசாங்கங்களின் செயல்பாடுகளின் மீதும் ஏற்படுத்தும் பாதிப்பை பற்றியும் எடுத்துக்கூற விரும்புகிறோம். 1980ஆம் ஆண்டுகளில் சர்க்காரியா கமிஷன் மற்றும் மாநில அரசுகள் இத்தகைய நிலைமையை முன்கூட்டியே உணர முடியாததால் இப்பிரச்சினையில் எந்தப் பரிந்துரையும் செய்யப்படவில்லை. தனியார் துறையின் கைகளில் உள்ள மக்கள் தொடர்பு சாதனங்கள் என்ற அந்த புதிய வடிவத்தை கட்டுப்படுத்த தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவையாக இல்லை. எனவே, இப்பொருள் குறித்து தற்போதுள்ள சட்டங்களை மறுபரிசீலனை செய்து நமது சமூக, கலாச்சார தன்மைகளைப் பாதுகாக்கும் பொருட்டு தேவைப்பட்ட நடவடிக்கைகளை ஆலோசனை கூற ஒரு தனி அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, கடந்த பத்தாண்டுகளில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்கின் அனுபவத்தில் மக்கள் தொடர்பு சாதனங்கள் குறித்த விவாதப் பொருள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைக்கிறோம்.

மாநிலங்களிடை மன்றக்கூட்டத்தில் எடுக்கும் முடிவுகளை மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலிப்பதும் அவை அமலாக்கப்படுவதை மேற்பார்வையிடுவதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் பிரச்சினைகளை பொறுத்தமட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் சம்பந்தமாக, நீர்வள ஆதார அமைச்சகம் மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டம் 1956 சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவர உத்தேசித்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. மத்திய அரசு 9A(1) என்ற உத்தேசித்துள்ள புதிய பிரிவின் கீழ் விவரங்களை பராமரிக்க இருப்பது மட்டும் போதுமானது. ஏனென்றால் இது சர்க்காரியா கமிஷன் பரிந்துரைக்கு ஏற்பவிருக்கிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள 9A(2) பிரிவு சர்க்காரியா கமிஷனால் பரிந்துரைக்கப்படவில்லை. இதைச் செயல்படுத்த முடியாது என்றும், தேவையற்றது என்றும் நீக்கப்படவிருக்கிறது. இது சம்பந்தமாக, உத்தேசிக்கப்பட்டுள்ள மசோதாவில் 7-வது பிரிவில் உள்ள 9A பிரிவின் 2-வது துணைப் பிரிவை நீக்குவதற்காக எங்களது அரசு மத்திய அரசுக்கு அதிகாரப்பூர்வமான திருத்தம் ஒன்றை அளித்துள்ளது.

அரசியல் சட்டம் 293-வது பிரிவு 4-வது துணைப் பிரிவின் கீழ் மாநில அரசுகள் வங்கிகளிடமிருந்தும், நிதி நிறுவனங்களிடமிருந்தும் ஓராண்டிற்கும் குறைவாக கடன்களை பெறுவதற்கு மத்திய அரசு சுதந்திரமான ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைத்துள்ளது. இருப்பினும் ஓராண்டிற்கும் குறைவான குறுகிய கால கடன்களைப் பெறுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்குவதில்லை. பெரும்பாலான மாநில அரசுகள் தற்போது மிக நெருக்கடியான நிதிநிலைமையை சந்தித்து வருகின்றன. மத்திய அரசால் கருவூலப் பட்டியல்கள் மூலமாக கருவூல நிதி திரட்ட வகை இருக்கிறது. ஆனால் மாநில அரசுகள் இந்தியச் சேம வங்கியின் (ரிசர்வ் வங்கி) மிகைப்பற்று (ஓவர் டிராப்ட்) வசதியை மட்டுமே நம்பி உள்ளன. எனவே இந்த மன்றம் இப்பிரச்சினையை மறுபரிசீலனை செய்யலாம்.

விவாதப் பொருள்கள் மீது எங்களுடைய விரிவான கருத்துகள், ஆலோசனைகள் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு விவாதப் பொருள் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளன. சில விவாதப் பொருட்களில் எங்களுடைய திருத்தப்பட்ட கருத்துகள் இன்று தனியாக பார்வைக்கு சுற்றுனுப்பப்பட்டுள்ளன. இந்த ஆலோசனைகளை இம்மன்றம் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் இக்கூட்டத்தைக் கூட்டியதற்காக பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலங்களிலும், மத்தியிலும் ஆட்சியில் உள்ள பல்வேறு கட்சிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், மாநிலங்களிடை மன்றக் கூட்டங்கள் தாம் உண்மையான கூட்டாட்சி அமைப்பை நோக்கி செல்லவும், அதன் மூலம் தற்போதுள்ளதைவிட சிறந்த முறையில் நாடு சந்தித்து வரும் பிரச்சினைகளைச் சமாளிக்க நமக்கு இயலும் என்றும் நம்புகிறேன்.

புதுடெல்லியில் 16-11-2001 அன்று நடைபெற்ற
முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்
ஆற்றிய உரை.



ஊட்டிக்கு பொட்டானிக்கல், திண்டுக்கல்லுக்கு கொடைக்கானல், சேலத்திற்கு ஏற்காடு போல திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ளது முக்கொம்பு. வசதி படைத்தவர்கள் செல்லுமிடம் ஊட்டியாகவும், ஏழைகளின் ஊட்டியாக ஏற்காடும் இருக்கிறது. ஏழை, பணக்காரன் என்கிற வித்தியாசம் இல்லாமல் அனைவருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய இடம் முக்கொம்பு.

வயதானவர்கள் அமைதியாக ஓய்வெடுக்கக் கூடிய இடமாகவும், நடுத்தர வயதினர் மனம் விட்டுப் பேசக்கூடிய இடமாகவும், இளம் தம்பதியினர் இழைந்து விளையாட இனிய பூச்சோலையாகவும், அறிமுகக் காதலர்கள் அளவோடு கலந்து பேசவும், சிறுவர்கள், சிறுமியர்கள் குதூகலத்துடன் ஒன்றுக்கொன்று போட்டிப் போட்டுக் கொண்டு ஊஞ்சல் ஆடவும், சருக்கு மரத்தில் சருக்கி ஆடவும், வாலிபர்கள் தங்கள் ஆரோக்கியம் பேண உடற்பயிற்சிகள் செய்வதற்கான அமைப்புகள் உள்ள இடமாகவும் உள்ளது முக்கொம்பு. பள்ளிக் கூடங்கள் விடுமுறை நாட்களில் தங்கள் பிள்ளைகளை எங்கே அழைத்துச் செல்வது என்று தடுமாறும் பெற்றோர்களுக்கு மனதில் படும் இடம் முக்கொம்பு.

# எழில்மிகு முக்கொம்பு



திருச்சிராப்பள்ளிலிருந்து கரூர் செல்லும் பாதையில் 15 கி.மீ. தூரத்தில் காவேரிக் கரையில் மிகவும் செழுமையான இயற்கை அழகுடன் அமையப்பெற்றுள்ளது முக்கொம்பு. நுழைவு வாயிலின் அருகே சென்றவுடன், நமக்கு ஏதோ ஒரு புதுமையான பூஞ்சோலையில் உள்ளே செல்லுகின்ற புத்துணர்வு ஏற்படுகிறது. நுழைவு வாயிலை தாண்டி உள்ளே சென்றவுடன் இடப்புறம் திரும்பி படிக்கட்டில் இறங்கிப் பார்த்தால் நம்மை வரவேற்பது அழகிய சிறிய குளம். நடுவே மரம், புல் வளர்ந்த மண்மேடு, படகு சவாரி செய்வதற்கென்று அமைக்கப் பெற்றுள்ளது. தங்கள் குழந்தைகளுடன் ஒரு குடும்பம் படகு சவாரி செய்தது மிகவும் அருமையாக இருந்தது. இதை பார்க்கும்போது ஏற்காட்டில் உள்ள படகு குழாம் போல இது ஒரு சிறிய படகு குழாமாக இருக்கிறது. இளம் தம்பதியினர் இனிமையாக பேசிக் கொண்டு படகு சவாரி செய்ய மிகவும் ஏற்ற இடமாக உள்ளது. படகு சவாரியை சுற்றி செல்கிறது சிறுவர் ரெயில். பெரும்பாலும் நகரத்தில் பேருந்தில் ஒருவருக்கொருவர் நெருங்கி, நசுக்கி, கசங்கி பயணம் செய்தே பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு, சிறுவர் ரெயில் பயணம் மிகவும் குதூகலம் கொடுக்கும் வகையில் உள்ளது. குடும்பம், குடும்பமாக தங்கள் குழந்தைகளுடன் சிறுவர் ரெயிலில் பயணம் செய்வது, சிறியவர்கள், பெரியவர்கள் என வயது வித்தியாசம் பாராமல் மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்கிறது. சிறுவர் ரெயிலில் படகுக் குழாமை சுற்றி வரும்போது ஓர் புதுமையான இடத்தில் பயணம் செய்வது போல இருக்கும்.

சிறுவர் ரெயிலில் இருந்து திரும்பினால் சருக்கு மரம், ஊஞ்சல், குழந்தைகள் ஒருவருக்கொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு சருக்கு மரப்படிகளில் ஏறி சருக்கி விளையாடும் அழகைப் பார்க்கும் பெற்றோர்களுக்கு தாங்களே சருக்கு மரம் விளையாடுவது போன்ற மகிழ்ச்சி அடைகின்றனர். கன்னிப் பெண்களும், காளையர்களும் போட்டிப் போட்டுக் கொண்டு ஊஞ்சலாடும் அழகு தனி அழகுதான். வாய்ப்பிருந்தால் ஊஞ்சலாலேயே வானத்தை தொட்டுவிடும் வேகத்தில் ஊஞ்சலாட்டம். விண்ணுக்கும், மண்ணுக்கும் இடையே ஆடும் ஊஞ்சலின் வேகத்தைப் பார்ப்பவர்கள் நெஞ்சம் படபடப்பு அடையும் வகையில் ஊஞ்சலின் வேகம்.

மேலே நடந்தால் மேலணை. மேட்டூர் அணையிலிருந்து அகன்ற காவேரி பள்ளிபாளையம் கரூர் வழியாக திருச்சிராப்பள்ளிக்கு வந்து மூன்று பிரிவாக பிரிந்து செல்கிறது. மூன்று பிரிவாகப் பிரியும் இந்த இடம் முக்கொம்பு என்று கூறப்படுகிறது. மேலணை ரூ.425 இலட்சம் மதிப்பீட்டில் 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1977ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 41 வளைவுகளைக் கொண்ட இந்த அணையின் நீளம் 594.30 மீட்டர்.

அணையின் மேல் செல்லும் போது காவேரியின் இருபக்க அழகையும் ரசித்துக் கொண்டே நடக்கலாம். கண்ணுக்கெட்டும் தூரம் வரை பார்க்கும் போது அது ஒரு முடிவில்லாத அழகாகத் தெரியும். ஒருபுறம் தூரத்தில், விண்ணுடன் ஒட்டிய மலை முகடுகளின் தோற்றமும், மறுபுறம் நீண்ட பயணம் செய்யும் காவேரியின் நீர்பரப்பில், ஆங்காங்கே தெரியும் திட்டான மணற்பரப்பில் காற்றின் போக்கிற் கேற்ப அசைந்தாடும் நாணலின் அழகும் மிளரும்.





மேலணையைக் கடந்து சென்றால் பசுமையான காட்டை நிறைவுறுத்தும் சோலை, படகு சவாரி, ஊஞ்சல், சறுக்கு விளையாட்டு, மேலணையின் இயற்கை அழகு இவைகளை நடந்து ரசித்து வந்தவர்கள், களைப் பையும், பசியையும் போக்கிக் கொள்ள, ஓய்வெடுக்க, ஆங்காங்கே கட்டப் பட்டுள்ள அழகான சிமெண்ட் மேடைகள், அருகே அங்கிங் கெனாதபடி தனது முழு சுதந்திரத்துடன், ஓடி, ஆடி சற்றே அசந்தவர்களிடமிருந்து உணவை உரிமையுடன் தட்டிப் பறிக்கும் வானரங்கள், குரங்கு கூட்டங்கள் மரத்திற்கு மரம் தாவுவதை பார்க்கும் போதும், தாய்க் குரங்குகள் தங்கள் குட்டிகளை அரவணைத்து விளையாடுவதை பார்க்கும்போதும் உண்மையான காட்டுப் பகுதிக்கு வந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. ஓய்வுக்குப் பிறகு மீண்டும் மேலணை வழியே திரும்பி வந்தால் மேலணை துவக்கத்தில் இடதுபுறத்தில் மன்னர் ஒருவர் யானைமீது அமர்ந்து எழில் கொஞ்சும் முக்கொம்பு பூங்காவை பார்வையிடுதல் போன்று உன்னதமான சிலையமைப்பு, இயற்கையுடன் போட்டிப் போடும் அந்த யானை சிலையழகின் தரம்தான் என்ன விந்தை, பூங்காவினுள் நீர் ஊற்று. பலவித வடிவமைப்பில் நீர் தெளிக்கும் எழில்மிக்க நீர் ஊற்றில் குழந்தைகளின் கும்மாளம். அருகில் காவேரித் தாயின் அழகிய சிலை. சிலையின் கரங்களில் உள்ள கலையத்திலிருந்து வற்றாத நீர் ஊற்றுபோல, நீர் ஊற்றிக் கொண்டி ருக்கிறது. இந்த சூழ்நிலைகளை நாம் அனுபவிக்கும் போதும், மற்றவர்கள் அனுபவிப்பதை நாம் பார்த்து ரசிக்கும் போதும் "முக்கொம்பு'' என்ற பெயரில் இவ்வளவு குதூகலங்கள் அடங்கியுள்ளதா! என்று வியக்கத் தோன்றுகிறது. திருச்சிராப்பள்ளியில் மலைக்கோட்டை, திருவாணைக் கோவில், ஸ்ரீரங்கம் கோவில் ஆகிய சுற்றுலா இடங்களைப் போல முக்கொம்பும் இயற்கையழகு பொருந்திய சிறந்த சுற்றுலா இடமாக இருக்கிறது.

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி




ஏப்ரலில் நகரத்து விடுதியின் சொந்தக்காரர் திருவாளர் ஷிகோ. அவர், தான் ஓட்டி வந்த குதிரை வண்டியை மக்லுவார் கிழவியின் பண்ணை வீட்டிற்கு முன் நிறுத்தினார். அவர் ஒரு உல்லாசப் பேர்வழி. வயது நாற்பதிருக்கும். சிவந்த நிறம். தொப்பை தள்ளிய உருவம். பொல்லாதவன் என்று பெயரெடுத்தவர்.

வேலிக்கொம்பில் குதிரையைக் கட்டிவிட்டு வீட்டினுள் நுழைந்தார். கிழவியின் வயல்களுக்குப் பக்கத்தில் அவருடைய சொந்த நிலமிருந்தது. கிழவியின் நிலத்தை அபகரிக்கும் எண்ணம் அவருக்கு நீண்ட நாட்களாகவே இருந்தது. அதை வாங்கிப்போட இருபது முறை முயன்றும் பயனில்லை. மக்லுவார் கிழவி கிஞ்சித்தும் மசியவில்லை "இந்த மண்ணில் பொறந்தேன் இங்கதான் சாவேன்", என்று சபதம் செய்தாள் கிழவி. உருளைக் கிழங்கின் தோலை உரித்துப் போடுவதில் அவள் மும்முரமாய் ஈடுபட்டிருந்ததைக் கவனித்தார் ஷிகோ. அருகில் ஒரு ஸ்டுலில் அமர்ந்தார்.

"என்னா கிழவி எப்படியிருக்க?"

"ஏதோ இருக்கேன். நீ எப்படி இருக்க, புரோஸ்பேர்?"

"...ம்...ம்...கொஞ்சம் பிரச்சனைகள். மற்றபடி எல்லாம் நல்லாத்தான் இருக்கு"

"நல்லாயிருந்தா சரி"

அவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. ஷிகோ அவள் வேலை செய்து கொண்டிருப்பதைக் கவனித்தார். நண்டின் கால்களைப் போல வளைந்திருந்த கை விரல்கள் ஒரு இடுக்கியைப் போல் இயங்கின. மண்ணின் நிறத்தைக் கொண்ட அந்த வேர்க்கிழங்குகளை ஒரு கையால் கிடுக்கிப் பிடித்து லாவகமாய்த் திருப்பி, இன்னொரு கையால் கத்தியைப் பிடித்து, அதன் தோலை நீள் சுருள்களாக உரித்துக் கொண்டிருந்தாள். உருளைக் கிழங்கு மஞ்சள் நிறமானதும் பக்கத்தில் வைத்திருந்த தண்ணீர் நிறைந்த வாளியில் போட்டாள். சீவிப்போட்ட தோலைப் பொறுக்க மூன்று கோழிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தைரியமாய் அவளருகில் வந்து கொத்திக் கொண்டு தப்பியோடின.

ஷிகோவுக்குப் போரடித்தது. தயக்கத்தோடும், கவலையோடும், வாயில் எதையோ வைத்து துப்ப முடியாதவன் போல் தவித்தார். முடிவில், ஒருவழியாய் வாயைத் திறந்தார்.

"வேறே என்ன சேதி மக்லுவார்..."

"ஒனக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டுமா?"

"அந்த நெலங்கள எனக்கு விக்கறதுக்கு ஒனக்கு விருப்பமே யில்லையா?"

"இல்லை. அது முடியாத காரியம். அதை மறந்துவிடு. சொன்னா சொன்னதுதான். மேற்கொண்டு அதப்பத்தி பேசாத".

"நம் ரெண்டு பேருக்குமே சாதகமான ஒரு திட்டம் வச்சிருக்கேன்".

"என்ன அது?"

"அதாவது...நீ எனக்கு அதை வித்திடுற. ஆனா, நீயே வச்சிக்கிற, ஆண்டு அனுபவிக்கிற. புரிஞ்சுதா இல்லையா? நான் சொல்றதைக் கொஞ்சம் கவனமாகக் கேளு"


கிழவி தோலுரிப்பதை நிறுத்தி விட்டு விடுதிக்காரரையே உற்றுப் பார்த்தாள் - புருவத்தை நெரித்துக் கொண்டு அவர் தொடர்ந்தார்.

"வெளக்கமாச் சொல்றேன். ஒவ்வொரு மாசமும் ஒனக்கு 150 பிராங்குகள் கொடுக்கறேன்... புரியுதா. ஒவ்வொரு மாசமும் நான் இங்கு வந்து ஒனக்கு சொளையா மூன்று ஐம்பது பிராங்க் நோட்டை எண்ணி வக்கிறேன். அப்புறம் ஒண்ணுமில்லை. நீ பாட்டுக்கு ஒம்பூமியில இருக்கலாம். நீ என்னைப் பத்தி எந்தவித பயமும் கொள்ளத் தேவையே இல்ல. நீ எனக்குக் கொடுக்க வேண்டியதும் ஒண்ணுமில்ல. நீ செய்யிற ஒரே காரியம் பணத்தை வாங்கிக்கிறது தான். என்ன, சரியா?"

அவர் ஒருவித சந்தோஷத் தோடும், உறுதியோடும் அவளைப் பார்த்தார். கிழவி அவரை ஒருவித சந்தேகத்தோடு நோட்டம் விட்டாள், இதில் ஏதாவது சூது இருக்கிறதா என்று ஆராய்பவளைப் போல. பிறகு கேட்டாள், "எனக்குப் பணம் சரி. ஆனா, ஒனக்கு இந்தப் பண்ணை வீடா? அது ஒனக்கு வேண்டாமா?"

அவர் தொடர்ந்தார், "அதப்பத்தி நீ கவலப்படவேணாம். கடவுள் ஒன்ன எத்தன காலம் வச்சிருக்காரோ, அத்தன காலமும் நீ இங்கேயே

பிரஞ்சு மூலம் : **மோபசான்**
தமிழில் : **ஜெயராஜ் தனியேல்**



முடியவில்லை. ஆயிரத்தெட்டு சந்தேகங்கள் அவள் மனதில் முளைத்தன. இதில் ஏதாவது விஷமம் இருக்குமோ என்று நினைத்தாள். கேள்விமேல் கேள்வி கேட்டு அலுவலரைத் துளைத் தெடுத்தாள். கடைசியில், பத்திரம் எழுதும்படி கேட்டுக்கொண்டாள். நான்கு மொந்தை பழைய கள்ளைக் குடித்து விட்டவள் போல கிறக்கத்துடன் வீடு திரும்பினாள் மக்லுவார் கிழவி!

மறுநாள், ஷிகோ வந்தபொழுது ரொம்பவும் பிகு பண்ணிக் கொண்டாள். அவரை நீண்ட நேரம் மன்றாட வைத்தாள். பிறகு, எங்கே மனிதன் அந்த 500 பிராங்குகளுக்குச் சம்மதிக்காமல் போய்விடுவானோ என்று பயந்து தன் நிலையை எடுத்துரைத்தாள். ஏமாற்றத்தால் திடுக்கிட்ட ஷிகோ முதலில் மறுத்தார். அவரைச் சம்மதிக்க வைப்பதற்காக, தான் வாழப்போகும் காலக்கணக்கை விவரமாகச் சொல்ல ஆரம்பித்தாள் கிழவி, "நான் இன்னும் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் தான் உயிருடன் இருப்பேன். இப்பொழுதே எனக்கு 73 வயசாகிறது. ஒரு வேலையையும் செய்ய முடிவதில்லை. நேற்று ராத்திரி செத்துப் பிழைத்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். என் உடம்பில் உள்ள பலமனைத்தையும் யாரோ உருவிப் போட்டதுபோல் இருந்தது. படுக்கையில் கிடப்பதைத் தவிர வேறெதுவும் முடிவதில்லை'' இதற்கெல்லாம் ஷிகோ மசிவதாக இல்லை ''அட, போ கிழவி அம்மிக்கல்லு மாதிரி இருக்கிற உனக்கு என்ன கேடு? சொல்லப்போனால், 110 வயது வரை இருப்ப. போற போக்க பாத்தா என்ன அனுப்பிவிட்டுத்தான் நீ போவ போலிருக்கு!"

இருவரும் நாள் முழுவதும் இப்படிப் பேசியேக் கழித்தார்கள். கடைசியில், கிழவியின் பிடிவாதமான நிலையைக் கண்ட ஷிகோ மாதந்தோறும் 500 பிராங்குகள் தர சம்மதித்தார்.

வாழலாம் - ஒன்னோட பூமியில்! ஒரு சின்ன தாளில் பதிவாளர் முன்னிலையில், ஒனக்குப் பொறவு இது எனக்குச் சொந்தம்னு எழுதித்தரணும். அவ்ளோதான். ஒனக்கென்ன புள்ளையா, குட்டியா? என்னா சொல்ற? சம்மதமா? ஒன்னோட நெலத்த நீ வச்சிகினு வாழப்போற. பதிலுக்கு, நான் ஒனக்கு 150 பிராங்குகள் ஒவ்வொரு மாசமும் கொடுக்கிறேன். ஒனக்குத்தான் இதில் நல்ல லாபம்'' ஆசைகளால் அலைகழிக்கப்பட்ட கிழவி ஆச்சரியத்தோடு கலக்கமும் அடைந்தாள். ''வேண்டான்னு சொல்லல....ஆனால் எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு. இதப்பத்தி அடுத்த வாரம் பேசுவோம். அப்ப என்னோட முடிவ ஒனக்குச் சொல்றேன்'' என்று சொன்னாள் கிழவி. திருவாளர் ஷிகோ மனநிறைவுடன் வீடு திரும்பினார் - பேரரசைக் கைப்பற்றிய அரசனின் குதூகலத்தோடு! கிழவி மக்லுவார் கனவுலகில் ஆழ்ந்தாள். அன்று இரவு அவள் தூங்கவேயில்லை. தொடர்ந்து நாலு நாள் பிரமை பிடித்தவள் போல் இருந்தாள். இந்த விவகாரத்தில் ஏதோ நஷ்டம் இருப்பது போல் பட்டது.

ஆனால் சுளையாக மாதாமாதம், எந்த வித கஷ்டமும் படாமல், அவளைத் தேடி வரும் பணம், அவளுடைய மனதில் ஆசைக் கனலை மூட்டி அலை கழித்தது.

பிறகு, அவள் சான்று அலுவலரைத் தேடிச் சென்று அவரிடம் தன் நிலையை விளக்கமாகக் கூறினாள். அவரும் ஷிகோவின் யோசனைக்குச் சம்மதம் தெரிவிக்கலாம் என்றார். ஆனால் 150 பிராங்குகளுக்குப் பதிலாக 500 பிராங்குகள் கேட்கும்படி சொன்னார்.

"ஒவ்வொரு மாதமும் அவர் 500 பிராங்குகள் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் இன்னும் பதினைந்து வருடங்கள் வாழ்வதாக இருந்தாலும், உங்களுக்கு அவர் 90,000 பிரர்ங்குகள் தான் கொடுத்திருப்பார். ஆனால், உங்கள் சொத்தின் மதிப்பு சுமார் 1,00,000 பிராங்குகளுக்கு மேல் இருக்கும்'' என்று விவரமாய் கணக்குப்போட்டுச் சொன்னார்.


கிழவியின் நடுக்கம் அதிகரித்தது. அவளால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும்

மறுநாள், இருவரும் பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள். மக்லுவார் கிழவி ஒயின்குடிக்கும் செலவுக்கென பத்து பிராங்குகள் பிடுங்கிக்கொண்டாள்.

மூன்று வருடங்கள் கழிந்தன. கிழவி மண்டையைப் போட்ட பாடில்லை. அவளுடைய வயதில் ஒன்று குறைந்தது போலல்லவா இருக்கிறது! ஷிகோ கலக்க மடைந்தார். ஏதோ அரை நூற்றாண்டு காலமாகத் தான் கிழவிக்குக் கப்பம் கட்டுவதாக அவருக்குத் தோன்றியது. ஏமாற்றப்பட்டதைப் போலவும் வஞ்சிக்கப்பட்டதைப் போலவும் ஓர் உணர்வு அவருள் தலை தூக்கியது. அடிக்கடி கிழவியைப் போய் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கதிர் விட்ட கோதுமையின் மணிகள் அறுவடைக்குத் தயாரா என்று சோதிப்பதைப் போல. கிழவியும் அவரை ஒருவித வஞ்சகப் பார்வையுடன் வரவேற்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். அவரை ஏமாற்றி விட்டதை நினைத்துப் பெருமைப்படுபவள் போலிருந்தது அவள் செய்கை. அவளைச் சபித்த வேகத்தில் தன் குதிரை வண்டியில் ஏறிப் போனார் ஷிகோ. "சவம் இப்போதைக்குத் தொலையாது போலிருக்கு" அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பார்த்தவுடன் அவள் கழுத்தை நெறித்துக் கொன்று விடலாம் போலிருந்தது. அப்படி யொரு துவேஷம் அவருள் - களவு கொடுத்த விவசாயியைப் போல, பலமாகச் சிந்தித்தார் ஷிகோ.

ஒரு நாள், கிழவியைப் பார்க்கச் சென்றவர் கைகளைத் தேய்த்துக் கொண்டே - முதன்முதலில் பத்திரம் எழுதிக் கொடுப்பது சம்பந்தமாக அவளைச் சென்று பார்த்ததைப் போல - சிறிது நேரம் கழித்து, "ஏன் கிழவி, ஏப்ர்வீலுக்கு வரும்பொழுது ஏன் என் விடுதிக்கு வரக்கூடாது. வந்து ஒரு வாய் சாப்பிட்டுப் போகலாமே? உன்னிடம் நான் பணமா கேட்கப் போகிறேன்? நீயும் நானும் விரோதிகள் என்றல்லவா பேசிக் கொள்கிறார்கள். எனக்கு மனசு சங்கடமாயிருக்கு, உனக்கு ஒரு வேளை சாப்பாடு போடுவதால் நான் ஒன்றும் குறைந்துவிட மாட்டேன் உனக்கு எப்பப்பிடிக்குதோ, அப்ப வந்து சாப்டுட்டுப்போ. எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கும்'' என்று சொன்னார்.

கிழவி மக்லுவாக்கும் சம்மதம்தான். அடுத்த இரண்டாவது நாள், சந்தைக்குச் சென்று திரும்பும் வழியில் ஷிகோவின் விடுதிக்குச் சென்றாள். வேலைக்காரன்



செலஸ்தேன் குதிரை வண்டியை விடுதிக்கு முன் நிறுத்தி, குதிரைகளை அவிழ்த்துத் தொழுவத்தில் கட்டினான். சொன்னபடி விருந்து கொடுக்கும்படி ஷிகோவிடம் கேட்டாள்.

ஷிகோவும் அவளை மகிழ்ச்சி யோடு, தடபுடலாக வரவேற்று ஒரு சீமாட்டியை உபசரிப்பது போல உபசரித்தார். கோழிக்கறி, பன்றிக்கறி, தொடைக்கறி, பன்றியின் கொழுப்பும் கோசும் கலந்த பண்டம் அனைத்தையும் அவளுக்குச் சாப்பிடக் கொடுத்தார். சிறுவயதிலிருந்தே நொறுக்குத் தீனி தின்று பழக்கப்பட்ட கிழவி ஒன்றையும் தொடவில்லை. ஷிகோ எவ்வளவு வற்புறுத்தியும் பயனில்லை. ஏமாற்றம் தான் மிச்சம். கிழவி எதுவும் குடிக்கவுமில்லை. காப்பிகூட சாப்பிடவில்லை. அவர் கேட்டார், "சரி, ஒரு டம்ளர் சாராயத்தையாவது குடி"

"உம் சரி கொடு. அதை வேணான்னு சொல்ல மாட்டேன்". உடனே, ஷிகோ உரத்த குரலில் தொண்டை கிழிய கத்தினார், "ரோசாலி! அந்த உயர்ந்த ரக சாராயத்தை எடுத்து வா"! வேலைக்காரி ஒரு நீண்ட புட்டியை எடுத்து வந்தாள். அதில் காகிதத்தில் செய்த திராட்சை இலையொன்று ஒட்டியிருந்தது. ஷிகோ இரண்டு டம்ளர்களை நிரப்பினார். "இதைக் குடித்துப்பார், கிழவி, ரொம்பவும் புகழ் வாய்ந்தது". கிழவி மிகவும் பொறுமையுடன், ரசித்து, ருசித்து, அனுபவித்துக் கொண்டே பருகினாள். டம்ளரைக் காலி செய்துவிட்டு ஒரு ஏப்பம் விட்ட பிறகு சொன்னாள், "உண்மையிலேயே இது உயர்ந்த சரக்குதான்". அவள்

பேசி முடிக்கவில்லை. அதற்குள் ஷிகோ டம்ளரை நிரப்பினார். அவள் மறுப்பதற்கு நேரமேயில்லை. அதனால் முதலில் குடித்தது போலவே இதையும் நீண்ட நேரம் கொஞ்சம் கொஞ்சமாக குடித்தாள். மூன்றாவது டம்ளர் குடிக்கும்படி வற்புறுத்தினார் ஷிகோ, ஆனால் கிழவி மறுத்துவிட்டாள், பிடிகொடுக்கவில்லை. ஷிகோவும் தொடர்ந்தார், "சும்மா பால் குடிப்பது போலத்தான். நான் பத்து அல்லது பனிரெண்டு டம்ளர் குடிப்பேன். எந்தவிதத் தடங்கலும் இல்லாமல், சர்க்கரைப்பாகு உள்ளே இறங்குவதுபோல வயித்துக்கும் போகாமல் மண்டைக்கும் ஏறாமல், நாக்கிலேயே ஆவியாகிவிடும். உடல் நலத்திற்கு இதை விட உயர்ந்தது ஒன்றுமேயில்லை"

ஆவல் மிகுதியினால் கிழவியும் சம்மதித்தாள். ஆனால் பாதி டம்ளர் மட்டுமே குடித்தாள். "சரி, சரி, இது உனக்கு மிகவும் பிடித்திருப்பதால், உனக்காக ஒரு சின்ன பீப்பாய் கொடுக்கிறேன். அது நம்முடைய நட்பிற்கு அடையாளமாக இருக்கட்டும்'' கிழவி வேண்டாம் என்று சொல்லவில்லை. கொஞ்சம் தள்ளாடிக் கொண்டே வீடு திரும்பினாள்.

அடுத்த நாள், விடுதிக்காரர் மக்லுவார் கிழவியின் வீட்டுக்கு வந்தார். ஒரு சின்ன பீப்பாயைத் தன் வண்டியிலிருந்து இறக்கி வைத்தார். பிறகு, முதல் நாள் குடித்த அதே உயர்ந்த ரக சாராயம் தான் அது என்று காண்பிப்பதற்காக, அதிலிருந்து சிறிது ஊற்றிக் கிழவியிடம் கொடுத்தார். இருவரும் ஆளுக்கு மூன்று டம்ளர் குடித்து முடித்தவுடன், அவர் உளறினார். "இது...இது...தீர்ந்து போச்னா கெவலப்படாத கெய்வி, நா...அதெல்லாம் தப்பா நென்ச்சுக்கமாட்டேன். எவ்ளோ சீக்ரம் இத முடிக்றயோ அவ்ளோக்கு எனக்கு சந்தோசந்தேன். என்ன புழியுதா?'' பிறகு தள்ளாடியபடியே வண்டியில் ஏறி வீடு திரும்பினார்.

நான்கு நாள் கழித்து மறுபடியும் வருகிறார். கிழவி வாசலில் உட்கார்ந்திருக்கிறாள், ரொட்டி வெட்டிக் கொண்டு. அருகில் வந்து வணக்கம் சொல்லிவிட்டு அவள் முகத்தருகே பேசினார் - கிழவியின் மூச்சை மோப்பம் பிடித்துக் கொண்டு, சாராய வாடை மூக்கை வருடியது.



உடனே அவர் முகம் பிரகாசமடைந்தது. "எனக்கு ஒரு டம்ளர் சாராயம் தா, கிழவி" என்று கேட்டார். பிறகு இருவரும் சேர்ந்து, இரண்டு மூன்று தடவை குடித்தார்கள்.

வெகுவேகமாக செய்தி பரவியது, மக்லுவார் கிழவி குடிகாரியாகிவிட்டாள் என்று. பல சமயங்களில் அவள் வீட்டின் முற்றத்திலோ அடுக்களையிலோ, பக்கத்து தெருவோரங்களிலோ கிடந்தாள்! மரக்கட்டையைத் தூக்குவது போல் தூக்கிவந்து அவளை வீட்டில் சேர்த்தார்கள்.

இப்பொழுதெல்லாம் ஷிகோ கிழவியைப் பார்க்க வருவதில்லை. அக்கம்பக்கம் யாராவது கிழவியைப் பற்றிப் பேசினால், "இந்த வயசில் அவளுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டது துரதிர்ஷ்டம் தான் இல்லையா? பார்த்தீர்களா! வயதான காலத்தில் எவரிடமும் பணமிருப்பதில்லை. இப்படியே போனால் ஏதாவது விபரீதம் தான் ஏற்படும்!"

முடிவாக அந்த விபரீதம் நேர்ந்தது. அடுத்து வந்த குளிர்காலத்தில் - கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன் கிழவி குடியில் மயங்கி பனிபடர்ந்த பூமியின் மேல் விழுந்து இறந்தாள்!

கிழவியின் நிலமெல்லாம் ஷிகோவுக்குச் சொந்தமானது. ஷிகோ சொன்னார், "இந்தக் கிழவி கடைசி காலத்தில் இப்படி குடிச்சிட்டு அழியலனா இன்னுமொரு பத்து வருடங்கள் வாழ்ந்திருப்பாள்".

*– தமிழரசு இலக்கிய மலரிலிருந்து.*

# சமுதாயம் விழிப்படைய...



சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கணும் - தம்பி
சுகாதாரம் கெடாவண்ணம் காக்கணும்

கற்றகல்வி பயனுள்ளதாய் ஆக்கணும் - இதையே
கடமைகளில் முதன்மையாக சேர்க்கணும்

வீட்டருகில் குப்பைகூளம் விலக்கினால் - உன்
வீதியாவும் பளிங்குபோல காணுவாய்
ஊட்டமான உடலமைய வேண்டுமா? - உன்
உள்ளும்புறம் சுத்தமாகப் பேணுவாய்!

வீடுதோறும் மரம்வளர்த்துப் பழகணும் - நமக்கு
வேண்டுமட்டும் உயிர்க்காற்றை வழங்குமே
காடுமலை மரங்களாலே செழிக்கணும் - அந்தக்
காலம்போல மூன்றுமழை பொழியுமே!


காற்றுகூட மாசடைந்து போகுதே - இன்று
ககனங்கூட தூசில்மிதக்க லானதே
ஆற்றுநீரும் சுவையில்மாற்ற மானதே - இந்த
அவனியாவும் நோய்க்கடலில் மூழ்குதே!

விதவிதமாய் நோய்விளைவ தெதாலே - மிக
வீறுகொண்டு ஆளைமாய்ப்ப தெதாலே
எதிலெதிலே பாதுகாப்பு இல்லையோ - அவை
இருப்பிடமாம் கிருமிகளுக்கு அல்லவோ!

மனிதகுலம் உயர்வடைய வேண்டுமா? - மாந்தர்
மகிழ்ச்சியான வாழ்வில்நீந்த வேண்டுமா
தனிமனிதப் பொறுப்புவளரத் தூண்டுவாய்-அதில்
சமுதாயம் விழிப்படையும் காணுவாய்!

□ வலசை ப. கணேசன்

# தமிழகத்திலிருந்து வெளிநாடு செல்வோர் கவனத்திற்கு



நம் நாட்டில் ஏராளமான செல்வங்கள் இருந்தாலும் பலர் வெளிநாடுகளுக்கு குறிப்பாக வளைகுடா நாடுகள், மலேசியா, சிங்கப்பூர் சென்று சம்பாதிக்கவே ஆசைப்படுகின்றனர். பெரும்பாலோனோர் வீட்டு வேலைகளுக்காகவும், தொழிலாளர்களாகவும் (டிரைவர், கட்டட வேலை) செல்கின்றனர். அங்கு சென்று பலர் சித்ரவதைகளுக்கு உள்ளாகின்றனர். சிலர் நம் நாட்டிலேயே போலி பாஸ்போர்ட், போலி விசாக்களுக்காக தனியார் ஏஜென்ஸிகளிடம் அதிக அளவில் பணம் கொடுத்து ஏமாறுகின்றனர். இது போன்ற இன்னல்களைத் தடுக்க ''வெளிநாடு செல்வோர் கவனத்திற்கு'' என்ற தலைப்பில் இந்த புத்தகத்தின் மூலம் அமைதி அறக்கட்டளை சில முக்கிய வாசகங்களை வெளியிட்டுள்ளது. வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் இதன் மூலம் சில அடிப்படை விஷயங்களைத் தெரிந்துகொண்டு பயன்பெற வாழ்த்துகிறோம்.

வெளிநாடு செல்ல விரும்புபவர்கள் தகவல்களை சேகரிக்க தெரிந்துகொள்ள வேண்டிய இடங்கள் :

- தொழிலாளர் நலத்துறை அமைச்சகம்
- சென்னை அசோக் நகரில் குடியேறுவோர் பாதுகாப்பு அலுவலர்
- வெளியுறவுத்துறை அமைச்சகம்
- வெளிநாடு செல்பவர்களுக்காக உதவி செய்யும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்
- தூதரகங்கள் (எந்த நாடு செல்ல விரும்புகிறீர்களோ அந்நாட்டின் தூதரகம்).

வெளிநாடுகளுக்கு செல்பவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

★ சட்டப்படி வெளிநாடு செல்பவர்கள்

★ சட்டத்திற்கு புறம்பாக வெளிநாடு செல்பவர்கள்

- சட்டப்படி வெளிநாடு செல்பவர்களுக்கு தொழிலாளர் சட்டப்படி பாதுகாப்பு, கல்வி, ஊதியம் மற்றும் மருத்துவ கவனம் ஆகியவை அரசாங்கத்தின் மூலம் கிடைக்கின்றது.
- சட்டத்திற்கு புறம்பாக வெளிநாடு செல்பவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் பாதுகாப்பு, கல்வி, மருத்துவ கவனம் கிடைப்பதில்லை. மேலும் அடிமைத் தொழிலாளர்களாகவும், குற்றவாளிகளாகவும் மாற வாய்ப்பு இருக்கிறது.

வெளிநாடுகளுக்கு செல்ல விரும்புபவர்களுக்கு பாஸ்போர்ட், விசா, டிக்கெட் ஆகியவை எடுப்பதற்கும் மருத்துவ பரிசோதனைகளுக்காகவும் தனியார் ஏஜென்ஸிகளுக்கு கொடுப்பதற்கும் அதிக அளவில் பணம் தேவைப்படுகிறது. சிலர் இதற்கு தேவையான பணத்தை சொந்தமாகவும் சிலர் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் கடன் பெற்றும் கொடுக்கின்றனர். சிலருக்கு வேலைக்கு ஏற்பாடு செய்யும் நிறுவனங்களே கொடுத்து பின்னர் அவர்கள் சம்பளத்தில் தவணை முறையில் எடுத்துக் கொள்கின்றனர். சிலர் அரசாங்கத்தின் மூலம் குறைந்த வட்டியில் வங்கிகள் வாயிலாக பணம் பெறுகின்றனர்.

**வெளிநாடு செல்ல அவசியம் தேவையானவைகள்**

**பாஸ்போர்ட்**

பாஸ்போர்ட் என்பது வெளிநாடு செல்பவர்களுக்கு நமது நாட்டில் கொடுக்கக்கூடிய அடையாள அட்டையாகும். இது இல்லாமல் யாரும் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாது.

பாஸ்போர்ட் என்பது தமிழ்நாட்டில் திருச்சி மற்றும் சென்னையில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படுகிறது. பாஸ்போர்ட் வேண்டுபவர்கள் ரேஷன்கார்டு, படித்த் சான்றிதழ்கள், போட்டோக்கள் ஆகியவற்றுடன் ரூ.300 செலுத்த வேண்டும். தற்போது பாஸ்போர்ட் விண்ணப்பித்த் 30 முதல் 45 நாட்களுக்குள் கிடைக்கின்றது. கிரிமினல் குற்றம் புரிந்து தண்டனை பெற்றதாக ஆவணங்கள் உள்ள நபர்களுக்கு பாஸ்போர்ட் கிடைக்காது. தனியார் ஏஜென்ஸிகள் மூலம் பெற்ற பாஸ்போர்ட்டை உண்மையானதா என்பதை பாஸ்போர்ட் அலுவலகங்களுக்கு சென்று சோதித்துக் கொள்ள வேண்டும். பாஸ்போர்ட் பெற்றவுடன் அதில் உங்கள் பெயர், தாய் தந்தை பெயர், முகவரி, பிறந்ததேதி, உங்களுடைய போட்டோ, பாஸ்போர்ட் அலுவலரின்கையெழுத்து ஆகியவை சரியாக உள்ளதா என சோதித்து பார்க்க வேண்டும். போலியான பாஸ்போர்ட்டை வைத்துக் கொண்டு வெளிநாடு செல்ல முயற்சிக்க கூடாது. அவ்வாறு செல்பவர்களை நம் நாட்டு விமான நிலையங்களிலேயே சோதனை அலுவலர் கண்டுபிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்து விடுவார்கள். உங்களுடைய பாஸ்போர்ட் காணாமல் போனால் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்தில் தெரிவித்து பிறகு புதிய பாஸ்போர்ட் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

## விசா

விசா என்பது நீங்கள் எந்த நாடு செல்ல விரும்புகிறீர்களோ அந்த நாட்டின் தூதரகங்கள் உங்களுக்கு கொடுக்கக்கூடிய ஒரு வகை தஸ்தாவேஜ் ஆகும். ஒவ்வொரு நாடும் அந்நாட்டிற்குள் நுழைபவர்களுக்கு சட்டங்கள் வகுத்துள்ளது. இது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபடும். சுற்றுலா விசா, மாணவர் விசா, வேலைக்கான விசா, நிரந்தரமாக தங்குவதற்கான விசா என பலவகை விசாக்கள் உள்ளது.

சுற்றுலா விசா எடுத்துச் செல்பவர்கள் 15 முதல் 45 நாட்களுக்கு (நாட்டிற்கு நாடு வேறுபடலாம்) மட்டுமே அந்நாட்டில் இருக்க முடியும். இந்த விசாவில் செல்பவர்கள் அங்கு வேலை செய்ய முடியாது.

நீங்கள் வெளிநாட்டில் சென்று வேலை செய்ய நினைத்தால் வேலை செய்வதற்கான விசா எடுக்க வேண்டும்.

வெளிநாட்டில் வேலைசெய்ய சுற்றுலா விசாவில் ஏதாவது தனியார் ஏஜெண்டுகள் அழைத்துச் சென்றால் விழிப்புடன் செயல்பட வேண்டும். அங்கு நீங்கள் சட்டத்திற்கு புறம்பாக வேலை செய்ய வாய்ப்பு அளிக்க வேண்டாம்.

விசா பெறுவதற்கு தேவையானவை

1. அங்கீகரிக்கப்பட்ட பாஸ்போர்ட்
2. உங்களுடைய போட்டோக்கள்
3. வேலைக்கு அழைத்துச் செல்பவர்களின் நிதி நிலைமை
4. உடல்நலக் காப்பீடு
5. உங்கள் கையொப்பத்துடன் கூடிய விசா விண்ணப்பப் படிவம்

## மருத்துவ பரிசோதனைகள்

சில நாடுகள் அந்தந்த நாடுகளில் நோய்கள் பரவி விடக்கூடாது என்பதற்காக மருத்துவச் சான்றிதழ் கேட்கின்றன. அனைத்து நாடுகளுக்கும் பொதுவாக எய்ட்ஸ் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் பெண்கள் கர்ப்பமாக உள்ளனரா என்பது பற்றி பரிசோதனை செய்யப்படுகிறது.

## வெளிநாடுகளில் நுழையுமிடம்

நீங்கள் வெளிநாடுகளுக்கு விமானத்தில் செல்லும் போதே ஒரு விண்ணப்பம் கொடுக்கப்படும். அந்த விண்ணப்பத்தில் உங்கள் பெயர், முகவரி, பாஸ்போர்ட் எண், நீங்கள் எந்த நாட்டுக்கு செல்கிறீர்களோ அந்நாட்டில் நீங்கள் தங்கும் இடத்தின் முகவரி, அந்நாட்டிற்கு செல்வதற்கான காரணம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

அங்குள்ள சோதனை அதிகாரிகள் நீங்கள் எழுதிக் கொடுக்கும் விண்ணப்பம், பாஸ்போர்ட், விசா ஆகியவற்றை சோதனை செய்வார்கள். இவற்றில் ஏதேனும் தவறு இருந்தால் அந்நாட்டிற்குள் நுழைய விடாமல் திருப்பி அனுப்பிவிடுவார்கள்.


## அனுமதிச்சீட்டு

வேலைக்கான அனுமதிச்சீட்டு என்பது வெளிநாடுகளில் வேலை செய்ய தொழிலாளர் அமைச்சகத்தின் மூலம் சட்டப்படி தரப்படுவதாகும். இதற்கான விண்ணப்பங்கள் நீங்கள் அங்கு செல்வதற்கு முன் தூதரகங்களில் நிரப்ப வேண்டும். இதற்கு, நீங்கள் வேலைகிடைத்ததற்கானசான்று அளிக்க வேண்டும்.

தங்குவதற்கான அனுமதிச்சீட்டு என்பது அந்நாட்டில் குறிப்பிட்ட காலம் தங்குவதற்கு அனுமதி அளிக்கிறது. தற்காலிகமாக தங்குவதற்காக அனுமதிச்சீட்டு ஒரு குறிப்பிட்ட காலம் வரை தங்க அனுமதி அளிக்கிறது. அதற்கு பிறகு கால நீட்டிப்பு செய்யலாம். நிரந்தரமாக அந்நாட்டிலேயே தங்குவதற்கு அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது. இது அனைவருக்கும் வழங்கப்படுவதில்லை. இதற்கு சில விதிமுறைகள் உண்டு.

## வெளிநாடுகளில் இருந்து துரத்தப்படுதல்

நீங்கள் வெளிநாடுகளில் சட்டத்திற்கு புறம்பாக போலி ஆவணங்கள் மூலம் சென்று இருந்தாலோ விசாக்காலம் முடிந்தபின்பும் தங்கி இருந்தாலோ ஏதேனும் கிரிமினல் வழக்குகளில் ஈடுபட்டாலோ நீங்கள் அந்நாட்டில் இருந்து வெளியேற்றப்படுவீர்கள் அல்லது சிறையில்



அடைக்கப்படுவீர்கள்.

**கான்ட்ராக்ட்**

கான்ட்ராக்ட் என்பது வேலை செய்பவர்க்கும் வேலை கொடுப்பவர்க்கும் இடையே உள்ள ஒப்பந்தம் ஆகும். இதில் வேலையைப் பற்றியும், வேலையின் தன்மை பற்றியும், வேலை நேரம், ஓய்வு நேரம், சம்பளம், சம்பளம் கொடுக்கும் முறை, போனஸ், ஓவர்டைம், மருத்துவம்/விபத்து/ ஆயுள் காப்பீடு, வருடவிடுமுறை, மருத்துவ விடுப்பு, பேறுகால விடுமுறை (பெண்களுக்கு மட்டும்) சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்கள் ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கும்.

**வெளிநாடுகளுக்கு புறப்படும் முன் கவனிக்கப்பட வேண்டியவை**

★ உங்களுடைய பயணத்திற்கான ஆவணங்களின் நகல்கள், பாஸ்போர்ட் நகல், அடையாள அட்டை மற்றும் உங்களுடைய போட்டோ ஆகியவற்றை உங்கள் வீட்டில் கொடுத்து செல்லுங்கள்.

★ நீங்கள் வேலைசெய்ய போகும் கம்பெனியின் முகவரி, தொலைபேசி எண், தொலைநகல் எண் ஆகியவற்றை உங்கள் வீட்டில் கொடுத்து செல்லுங்கள்.

★ எந்த நாட்டிற்கு செல்லுகிறீர்களோ அந்நாட்டின் மொழியை ஓரளவு கற்றுக்கொள்ளுங்கள்.

★ அந்நாட்டின் தூதரகங்களின் முகவரிகள், வெளிநாட்டு தொழிலாளர்களுக்காக உதவும் தொண்டு நிறுவனங்களின் முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை தெரிந்து கொள்ளுங்கள்.

★ கான்ட்ராக்ட் நகல் ஒன்றை வைத்துக் கொள்ளவும்.

★ டிக்கெட் பற்றி தகவல்களை சரிபார்த்துக் கொள்ளவும்.

★ கையில் சிறிதளவு அமெரிக்க டாலர்களை எடுத்துச் செல்லவும்.

★ நீங்கள் செல்லும் நாடு மற்றும் நகரத்தின் வரைபடங்களை எடுத்துச் செல்லவும்.

★ நீங்கள் செல்லும் நாட்டின் பருவநிலைகளை தெரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல் துணிகளை எடுத்துச் செல்லவும்.

★ நீங்கள் செல்லும் நாட்டில் உங்களது நண்பர்கள் அல்லது உறவினர்கள் இருந்தால் அவர்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்களை தெரிந்துகொண்டு அவர்களுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொள்ளவும்.

**வெளிநாடுகளுக்கு சென்றபின் செய்ய வேண்டியவை**

★ உங்களது வெளிநாட்டில் தங்கி இருக்கும் முகவரியை அந்த நாட்டில் உள்ள இந்திய தூரகத்திடம் தெரிவியுங்கள். உங்கள் வீட்டிற்கு கடிதம் மூலம் உங்களது முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை தெரியப்படுத்துங்கள்.

★ வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்காக சேவை செய்யும் தொண்டு நிறுவனங்களைப்பற்றி தெரிந்து கொள்ளவும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தொண்டு நிறுவனங்களை நாடலாம்.

**வெளிநாடுகளில் உங்களது உரிமைகள்**

★ பாதுகாப்பான, சுதந்திரமான வாழ்க்கை

★ சுயமாக முடிவு எடுப்பது

★ அடிமை இல்லாத வாழ்க்கை

★ சட்டத்தின் முன் அனைவரும் சமம்

★ தங்குமிடம் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் ஆகியவற்றில் சுதந்திரம்.

★ கொடுமைப்படுத்துவது, தண்டனை வழங்குவது ஆகியவற்றில் இருந்து சுதந்திரம்.

★ உங்களது எண்ணங்களுக்கும், மத உரிமைகளுக்கும் சுதந்திரம்.

★ திருமணம் செய்வதற்கான சுதந்திரம்.

★ ஒரு சங்கம் அமைப்பதற்காகவோ அல்லது உறுப்பினராகவோ சுதந்திரம்.

• • •

பூமி எப்போது பிறந்தது? அது எப்படி உண்டாயிற்று?

அதன் பிறப்பை நேரில் கண்டவர்கள் ஒருவரும் இல்லை. ஆகையால், பழங்காலத்திலே, அறிஞர்கள் அதன் பிறப்பைத் தங்களுடைய கற்பனைகள் போனபடி எல்லாம் படைத்தார்கள். இந்த அறிஞர்களைப் பழங்காலத்திலே ரிஷிகள், தீர்க்கதரிசிகள், தத்துவ ஞானிகள் என்று எல்லாம் சொன்னார்கள்.

ஆனால் இவர்கள் சொல்லிய வரலாறுகள் எல்லாம் முக்கால்வாசிக்கு மேல் தவறானவை. அவர்கள் பூமி இன்ன இன்னவாறு படைக்கப்பட்டது என்று கூறியது தவறு. அது அந்தரத்தில் எப்படி நிற்கிறது என்று சொல்லியது தவறு. அது தட்டையானது என்றும், சூரியன் அதைச் சுற்றி வருகிறது என்றும், சூரியன் கிழக்கே உள்ள ஒரு மலையில் உதித்து, மேற்கே உள்ள ஒரு மலையின் பின்னே மறைகிறது என்றும், முற்காலத்தோர் நினைத்தார்கள். அவை எல்லாம் தவறு.

அப்படியானால் எதுதான் சரி? சற்றே பொறுங்கள்.

பழங்காலத்துக்குப் பின்னால், சற்றே பிந்திய காலத்திலும், அதற்குப் பின்னால் இடைக்காலத்திலும் வேறு அறிஞர்கள் தோன்றினார்கள். அவர்களும் பூமியின் பிறப்பைப் பற்றிக் கருத்தோடு எண்ணிப் பார்த்தார்கள். பெரும்பான்மையும் எண்ணங்கள் வேண்டியவை தவறு என்று அவர்களுக்குத் தோன்றிற்று. அப்படியானால் எதுதான் சரி? நாமும்தான் நினைத்துப் பார்ப்போமே என்று அவர்களும் சில கற்பனைகளைச் செய்தார்கள். அவற்றுள் சரியானவை சில, தவறானவை பல.

இந்த நிலையில், ஐரோப்பாவில் புதிய விஞ்ஞானம் பிறந்தது. பரிசோதனைகள் மேன்மேலும் செய்யப்பட்டன. புதிய கருவிகள் மேன்மேலும் படைக்கப்பட்டன. பழைய கருத்துக்கள் சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டன. புதிய கருத்துக்கள் மேன்மேலும் உருவாயின. படிப்படியாக, அறிவு பெருகப் பெருக, அவை திருத்தம் அடைந்து கொண்டே வந்தன.

இப்படித் தோன்றிய கருத்துக்களில் பூமியின் பிறப்பைப் பற்றிய கருத்துக்களும் ஒரு சில.

ஜெர்மானிய நாட்டிலே கான்ட்டு என்னும் புகழ்பெற்ற தத்துவஞானி ஒருவர் இருந்தார். ஆதியில் சூரியன் உருவாயிற்று.

அதைச்சுற்றி வாயு வடிவமான வளையம் ஒன்று இருந்தது. அதை ஒத்த ஒரு வளையம் இப்போது சனி என்னும் கோளைச் சுற்றி இருப்பதை இந்நாளில் காணலாம். புவிஈர்ப்பு என்னும் சக்தியால் அந்த வாயு வளையம், அங்கங்கே கோளங்களாகத் திரண்டது. அப்படித் திரண்ட கோளங்கள் தான் கிரகங்கள். அவற்றுள் நம்முடைய பூமியும் ஒன்று. இதுதான் கான்ட்டு வெளியிட்ட கருத்து.

பிரான்சு நாட்டிலே லாம்பிலாஸ் என்னும் கணித–இயல் அறிஞர் ஒருவர் இருந்தார். அவரும் கான்ட்டைப் போலவே மிகவும் புகழ்பெற்றவர். கான்ட்டு வெளியிட்ட கருத்தைப் பற்றி அவர் கேள்விப்பட்டதே இல்லை. கிரகங்கள் எவ்வாறு தோன்றின என்பதைப் பற்றி அவரும் ஒரு விளக்கம் கூறினார் அவர் கூறியதும் கான்ட்டு கூறியதும் ஒத்திருந்தன.

ஆனால் அவ்விரண்டு விஞ்ஞானிகளும் கணித முறையிலோ, வேறு முறையிலோ, தங்களுடைய கொள்கைகளுக்கு யாதொரு ஆதாரமும் காட்டவில்லை. அவர்களுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்னால், இங்கிலாந்தில், கிலார்க்கு–மாக்ஸ்வெல் என்னும் பௌதிக–இயல் நிபுணர் ஒருவர் இருந்தார். அந்த இரண்டு கொள்கைகளையும் அவர் கணித முறையில் ஆராய்ந்தார். அவர் கூறிய முடிவுகள் மேற்கூறிய கொள்கைகளுக்கு முற்றும் விரோதமாக இருந்தன. ஆகவே, அந்தக் கொள்கையைக் கைவிட வேண்டி வந்துவிட்டது.

கான்ட்டு, லாப்லாஸ் என்னும் இரண்டு புகழ்பெற்ற விஞ்ஞானிகள், ஒரு காலத்தில் சூரியனைச் சுற்றி, மிகப் பெரிய வாயு வளையம் ஒன்று இருந்தது. அவ்வளையத்தின் பகுதிகள் ஒன்று சேர்ந்து இறுகியதால், பூமியும் பிற கோள்களும் தோன்றின என்று அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த கிலார்க்கு–மாக்ஸ்வெல் அந்தக் கொள்கை தவறு என்று காட்டிவிட்டார்.



இந்த நிலையில் வேறு ஒரு கொள்கை வெளியிடப்பட்டது.

இதை வெளியிட்டவர் இங்கிலாந்து நாட்டினரான ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்பவர். மிகப் பழங்காலத்தில் எப்போதோ, அகன்ற வான வெளியிலே, சூரியனும் கிட்டத்தட்ட அதே அளவுள்ள மற்றொரு நட்சத்திரமும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. அவை ஒன்றின்மீது மற்றொன்று முட்டா விட்டாலும்கூட, அவை இரண்டும் ஒன்றை ஒன்று மிக நெருங்கிச் சென்றன. அப்படி அவை சென்றபோது, ஒவ்வொன்றின் ஈர்ப்புச் சக்தியும் மற்றொன்றின் மீது செயல்பட்டது. அப்போது ஒவ்வொன்றின் உடலிலிருந்தும், குடலைப் பிடுங்கி எடுப்பது போல், வாயுப் பொருள்கள் வெளியே இழுக்கப்பட்டன. அவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்தன.

இவ்வாறு இழுக்கப்பட்ட வாயுத் தொகுதிகள் அவ்விரண்டு நட்சத்திரங்களுக்கும் இடையே இட்ட பாலத்தைப் போல இணைந்திருந்தன. பின்பு அந்த இரண்டு நட்சத்திரங்களும் ஒதுங்கிச் சென்றன. அப்போது இந்த வாயுப்பொருள்கள் பல பகுதிகளாக விண்டு, பற்பல கோள்களாக அமைந்தன. இவற்றுள் ஒரு பாதி சூரியனுடைய கோள்களாகவும், இன்னொரு பாதி மற்ற நட்சத்திரத்தின் கோள்களாகவும் அமைந்தன.

இதுதான் ஜீன்ஸ் வெளியிட்ட கொள்கை. ஒருவர் செய்தது மற்றொருவருக்குத் தெரியாமல் கான்ட்டும், லாப்லாஸும், ஒரே கொள்கையை வெளியிட்டார்கள், அல்லவா ? அதைப் போலவே இதிலும் நிகழ்ந்தது.

அமெரிக்க நாட்டிலே எஃப் ஆர்.மோல்ட்டன், டி.ஸி.சேம்பெர்லின் என்னும் சிறந்த விஞ்ஞானிகள் இருவர் இருந்தார்கள். ஜீன்ஸ் இப்படி ஒரு கொள்கையை வெளியிட்டார் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்களும் கிட்டத்தட்ட அதே காலத்தில், அதே விதமான கொள்கையை வெளியிட்டார்கள்.

இப்படி இவர்கள் வெளியிட்ட கொள்கைக்கு 'மோதல் கொள்கை' என்று பெயர்.

இந்தக் கொள்கை வெளியிடப்பட்ட காலத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகள் மிகவும் முன்னேற்றம் பெற்றுவிட்டன. ஆகையால், முன்னால் கொள்கைகள் வெளியிடப்பட்டபோது அவற்றைப் பலரும் ஒப்புக் கொண்டதைப்போல், அப்போது அக்கொள்கையை ஒப்புக்கொள்ள வில்லை. அதற்குப் பலவிதமான மறுப்புகளைக் கூறிவந்தார்கள்.

**காண்ட்டும், லாப்லாஸும், வெளியிட்ட வாயு வளையக் கொள்கையும் தவறு; ஜீன்ஸ், மோல்ட்டன், சேம்பெர்லன் என்பவர்கள் வெளியிட்ட மோதல் கொள்கையும் தவறு என்று ஆகிவிட்டது.**

அவ்வளவு அகன்ற விண் வெளியிலே இரண்டு நட்சத்திரங்கள் மோதிக்கொள்ள வழி இல்லை என்றார்கள். அப்படி அவை மோதியதால் கோள்கள் உண்டாயின என்று வைத்துக்கொண்டால், அப்படித் தோன்றிய கோள்கள் சூரியனைச் சுற்றி ஓடிவரும் பாதைகள் எல்லாம் நல்ல நீள் வட்டப் பாதைகளாக இருக்க வேண்டும். ஆனால் பூமி முதலிய கோள்கள் எல்லாம் சூரியனைச் சுற்றி ஓடிவரும் பாதைகள். சற்றே நீள்வட்டமாக இருந்தாலும், கிட்டத்தட்ட முழு வட்டமாகவே இருக்கின்றன. இது அவர்கள் சொல்லிய மற்றொரு மறுப்பு.

ஆகவே இந்தக் கொள்கையும் சரி இல்லை என்று ஆகிவிட்டது.

அப்படியானால், எதுதான் சரி ?

கான்ட்டும், லாப்லாஸும், வெளியிட்ட வாயு வளையக் கொள்கையும் தவறு; ஜீன்ஸ், மோல்ட்டன், சேம்பெர்லன் என்பவர்கள் வெளியிட்ட மோதல் கொள்கையும் தவறு என்று ஆகிவிட்டது. அப்படியானால் சரியான கொள்கை எது ?

இதைப்பற்றிப் பற்பல நாடுகளில் உள்ள விஞ்ஞானிகள் ஊன்றி ஆராயத் தொடங்கினார்கள். பலர் பலவிதமாகச் சிந்தனை செய்தார்கள்.


ஜெர்மனி நாட்டிலே கார்ல்வான் வைஸ்ஸாக்கெர் என்னும் இளைய பௌதிக – இயல் விஞ்ஞானி ஒருவர் இருந்தார். முன்காலத்தில் கொள்கைகளை வெளியிட்டவர்களைக் காட்டிலும் அவருக்கு வாய்ப்புக்கள் அதிகம் இருந்தன. ஒவ்வோர் ஆண்டிலும் வான – பௌதிக – இயல் ஆராய்ச்சிகளால் மேன்மேலும் செய்திகள் பல கிடைத்துவந்தன.

அந்தச் செய்திகளை எல்லாம் வைஸ்ஸாக்கெர் தொகுத்து, நுட்பமாக ஆராய்ந்துவந்தார். முன்னால் வெளியிடப்பட்டிருந்த கொள்கைகளுக்கு அவை ஆதாரம் அளிக்குமா அல்லது அவற்றுக்கு விரோதமாக இருக்குமா என்று கவனித்தார். பழைய செய்திகளையும் ஒன்றோடு ஒன்று பொருத்திப் பார்த்தார். அவருக்கு ஒன்றுபட்டது.

ஊன்றிக் கவனித்தால், கான்ட்டு– லாப்லாஸின் வாயு வளையக் கொள்கைக்கு விரோதமாகக் கூறப்பட்ட மறுப்புகளுக்கு எல்லாம் சமாதானம் கூறமுடியும் என்றும், சிறிது மாற்றி அமைத்துக் கூறினால் அந்தக் கொள்கை ஒப்புக் கொள்ளத்தக்கதாக ஆகிவிடும் என்றும் கருதினார்.

வான பௌதிக இயல் என்னும் துறையில் அப்போது ஏற்பட்டிருந்த முன்னேற்றம்தான் வைஸ்ஸாக்கெர் தம்முடைய கொள்கையை உருவாக்கப் பேருதவியாக இருந்தது.

பூமியின் அமைப்பை ஆராய்ந்த இரசாயன நிபுணர்கள் பூமியில் ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் போன்ற



தனிமங்கள் சிற்சில விகிதங்களில் இருக்கக் கண்டார்கள். பிரபஞ்சம் முழுவதும், அதில் உள்ள பல பொருள்களும், ஒன்று போலவே அமைந்திருக்க வேண்டும் என்பது அவர்களுடைய நினைப்பு. ஆதலால் அந்தத் தனிமங்கள் பூமியில் என்ன விகிதங்களில் காணப்படு கின்றனவோ, அதே விகிதங்களில் தான் சூரியனிலும் நட்சத்திரங் களிலும் இருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

ஆனால், வைஸ்ஸாக்கெரின் காலத்துக்குச் சற்று இருபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி நடந்துவந்த ஆராய்ச்சிகளிலிருந்து இவ்வாறு அவர்கள் நினைத்தது தவறு என்பது தெரிந்தது. உதாரணமாக, பூமியில் ஆக்ஸிஜனும் அதன் ஆக்ஸைடுகளும் மிக அதிகம்; ஹைட்ரஜன் மிகக் குறைவு, பெருங்கடல்களின் நீரில் ஹைட்ரஜன் இருக்கிறது உண்மைதான். ஆனால், பூமியின் மொத்த அளவோடு ஒப்பிடும் போது, கடல் நீரின் அளவு மிகமிகச் சிறியதாகவே உள்ளது.

சூரியனில் குறைந்தது 35 சதவீதமாவது ஹைட்ரஜனாக இருக்க வேண்டும். பூமியில் சாதாரணமாக நிறையக் காணப்படும் தனிமங்கள் எல்லாம் சூரியனில் காணப்படும் அளவு ஒரு சதவீதத்துக்கு மேல் இல்லை. ஆகவே, சூரியனின் அமைப்பு மிகமிகப் பிரிந்து பரந்த மெல்லிய வாயுக்களால் ஆனது.

விண்வெளியும் இப்பேர்ப்பட்ட மெல்லிய பொருள்களால்தான் நிறைந்துள்ளது. இந்தப் பொருளின் பெரும் பகுதி ஹைட்ரஜன் வாயு.

ஆகவே, இப்படிப்பட்ட மெல்லிய விண்வெளி வாயு இறுகிச் சூரியனாக அமைந்தபோது, அதன் ஒரு பகுதி சூரியனாகவும் மற்றொரு பகுதி அதைச்சுற்றி ஓர் உறையைப் போலவும் அமைந்திருக்க வேண்டும். இந்த உறையும் சுழன்று கொண்டே இருந்திருக்கும்.

அப்போது துகள்கள் சிறிதும் பெரிதுமான கட்டிகளாக இணைந்திருக்கும். இவற்றுள் சம அளவுள்ள இரண்டு சிறு கட்டிகள் மோதினால் இரண்டும் தூள் தூளாகிவிடும். ஆனால் ஒரு சிறிய கட்டி பெரிய கட்டியின் மீது மோதினால், அது பெரிய கட்டியின் உள்ளே புகுந்துவிடும். பெரிய கட்டி இன்னும் பெரிதாகிவிடும்.

இப்படி இரண்டு வகைச் செயல்களும் நடைபெறும் போது சிறுகட்டிகள் எல்லாம் மறைந்துபோகும், பெரிய கட்டிகள் மேன்மேலும் பெரிதாகிக் கொண்டுவரும்.

இப்படித்தான் மெல்லிய வாயுத் தொகுதியிலிருந்து கோள்கள் உண்டாயின. அவற்றுள் நமது பூமியும் ஒன்று. பூமியின் பிறப்பும் இப்படித்தான் ஏற்பட்டது.

இதுதான் வைஸ்ஸாக்கெர் கூறிய கொள்கை.

விஞ்ஞானத் துறையிலே செய்திகள் வந்து திரள, திரள அவற்றுக்கு ஏற்றபடி கருத்துகளையும் மாற்ற வேண்டிவரும். அக்கருத்துகளை ஆராய்ந்த உண்மையை உறுதியாகக் காண, வேறு புதிய ஆராய்ச்சிகளையும் பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதுதான் விஞ்ஞானத்தின் இயல்பு. இவ்வாறு நடந்து வரும் துறைதான் விஞ்ஞானம் என்று விஞ்ஞானிகள் விஞ்ஞானத்துக்குக் கூறும் விவரணம்.

அதுபோலவே, பூமியின் பிறப்பைப் பற்றிய கொள்கைகளை ஒட்டிய துறையிலும் நடந்து வந்திருக்கிறது. முதலில் காண்ட்டு–லாப்லாஸ் என்பவர்களின் வாயுவளையக் கொள்கை தோன்றிற்று. பின்பு மாக்ஸ்வெல்லின் கணித நிரூபணத்தால் அது அழிந்தது. பின்னர் ஜீன்ஸ், மோல்ட்டன், சேம்பர்லன் ஆகியோரின் மோதல் – கொள்கை தோன்றிற்று. பின்பு அது சிற்சில ஆட்சேபனைகளால் தளர்வுற்றது. அதன் பின்பு வைஸ்ஸாக்கெர் மீண்டும் வாயுவளையக் கொள்கையைப் புதிய வடிவில் உயிர்த்தெழுப்பினார். பிறகு இந்த நிலையில் புதிய செய்திகள் கிடைத்து வந்தன. வைஸ்ஸாக்கெரின் கொள்கை அவற்றோடு முற்றும் ஒத்துக் காணவில்லை. ஆகவே அதில் ஒரு சிறிய மாறுதல் ஏற்பட்டது.

அந்த மாறுதலை இயற்றியவர் ஹாலந்து நாட்டிலே பிறந்து, அமெரிக்க நாட்டுப் பிரஜையாகிய 'ஜெரல்ட் க்வீப்பர்' என்பவர். அவர் கூறியது பின்வருமாறு:

''சூரியனைச் சுற்றி ஒரு பெரிய வாயுமண்டல உறை – போர்வை – வளையம் – இருந்தது. சூரியன் இறுகி வந்ததைவிட அந்த வாயுப் பொருள் வேகமாக இறுகிற்று. அந்த வளையத்திலிருந்துதான் கோள்கள் எல்லாம், சூரியன் ஒளியைப் பெறாதிருந்த காலத்தில், நல் இருளில் பிறந்தன.

ஆதலால் அப்போது அந்த வளையத்தில் இருந்த ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற மெல்லிய வாயுக்கள் எல்லாம், அந்த அந்தக் கோள்களைச் சுற்றியே மெல்லிசாகப் போர்த்திருந்தன. அப்படி ஒவ்வொரு கோளைச்சுற்றியும் அமைந்த போர்வையின் எடை அந்தக் கோளில் அடங்கிய பொருளைக் காட்டிலும் அதிகமாக நூற்றுக்கணக்கான மடங்கு அதிகமாக இருந்தது. அந்தப் போர்வையே அக்கோள்களின் வாயுமண்டலம். இப்படி மிகப் பரந்த மிக மெல்லிய போர்வையும் கோளமுமாக அமைந்த கோளை 'முதற்கோள்' என்று சொல்லலாம்.

மெதுவாக மேன்மேலும் இறுகிவரும் சூரியனைச் சுற்றி இந்த முதற்கோள்கள் எல்லாம் வட்டமிட்டு வந்தன. அப்படி வரும்போது, சூரியனின் உட்புறத்தில் அணுக்கருச்

**சூரியனைச் சுற்றி ஒரு பெரிய வாயுமண்டல உறை - போர்வை - வளையம் - இருந்தது. சூரியன் இறுகி வந்ததைவிட அந்த வாயுப் பொருள் வேகமாக இறுகிற்று. அந்த வளையத்திலிருந்துதான் கோள்கள் எல்லாம், சூரியன் ஒளியைப் பெறாதிருந்த காலத்தில், நல் இருளில் பிறந்தன.**

செயற்பாடுகள் நிகழ்ந்தன. ஆதலால், சூரியன் தீவிரமாகக் கதிர்களை வீசத்தொடங்கிற்று. அவை நாலாபக்கமும் சிதறிச் சென்றன.

பின்பு சூரியன் மேலும் சூடுற்று, ஒளிப் பிழம்பாகத் தோன்றத் தொடங்கிற்று. அப்போது ஒளிக் கதிர்கள் சுற்றும் வீசின. அவ்வொளியின் அழுத்தம் சுற்றியோடி வரும் முதற்கோள்களைத் தாக்கிற்று. அதைச் சூழ அமைந்துள்ள மிக மெல்லிய போர்வையை வெளிப்புறமாக ஒதுக்கித் தள்ளிற்று.

இவ்வாறு தள்ளவே அப்போர்வையில் இருந்த மெல்லிய வாயுக்கள் விண்வெளியில் சிதறிப் பாய்ந்தன. அப்போது அந்த ஆதிக்கோள்களைப் பார்த்தால் மிகப்பெரிய வால் நட்சத்திரங்களைப் போல் காட்சியளித்திருக்கும் அவற்றின் வாலில் ஹைட்ரஜன் வாயுவும் ஹீலியம் வாயுவும் நிரம்ப இருந்திருக்கும்.

சூரியனை மிகவும் அடுத்துள்ள புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் என்னும் நான்கு கோள்களின் மீதும் இந்த ஒளி அழுத்தம் நிரம்ப உறைத்து, அவற்றில் இருந்த மெல்லிய வாயுக்களை எல்லாம் விரட்டியிருக்கும். ஆகவே கனமான தனிமங்களே அதிகமாக அவற்றில் மீந்திருக்கும். அக்காரணத் தால் தான் பூமியின் ஓடு முதலியவை திண்மையாக இருக்கின்றன. இப்போது நாம் பூமி என்பது முதல் கோளின் நடு மையம். மற்ற மூன்று கோள்களின் நிலையும் இதுவே.

சூரியனிடமிருந்து எட்ட உள்ள வியாழன், சனி, யூரனஸ், நெப்ட்டியூன் என்பவற்றின் மீதும் சூரியனின் ஒளிக்கதிர்கள் உறைத்தன. ஆயினும் தூரம் காரணத்தால் அவை அத்துணை வலிமை உடையவையாக உறைக்கவில்லை. ஆதலால் அவற்றின் மெல்லிய போர்வையின் ஒரு பகுதி விரட்டியடிக்கப்பட்ட போதும், மற்றொரு பகுதி அவற்றின் ஈர்ப்புத் திறனின் கவர்ச்சியால் அவற்றைச் சுற்றியே இன்னும் அமைந்திருக்கின்றன.

இப்படி அவற்றில் மெல்லிய வாயுப் போர்வை நிரம்ப இருப்பதால் தான், அவற்றின் சராசரி அடர்த்தி நமது பூமியின் சராசரி அடர்த்தியைவிடக் குறைவாக இருக்கிறது. இந்தக் கொள்கையை வைஸ்ஸாக்கெரின் கொள்கையின் விளக்கம் என்றோ, விவரிப்பு என்றோ சொல்லலாம். முந்தியவரின் கொள்கைப்படி ஒளியில் பிறந்தது பூமி. குவீப்பரின் கொள்கைப்படி இருளில் பிறந்தது பூமி, இதுதான் பூமி பிறந்த கதை.

*– பெ.நா.அப்புசாமியின்*
"அறிவியல் கட்டுரைகள்''
நூலிலிருந்து...

*வெளியீடு :*
உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்

• • •

**சூரியனை மிகவும் அடுத்துள்ள புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய் என்னும் நான்கு கோள்களின் மீதும் இந்த ஒளி அழுத்தம் நிரம்ப உறைத்து, அவற்றில் இருந்த மெல்லிய வாயுக்களை எல்லாம் விரட்டியிருக்கும். ஆகவே கனமான தனிமங்களே அதிகமாக அவற்றில் மீந்திருக்கும். அக்காரணத்தால்தான் பூமியின் ஓடு முதலியவை திண்மையாக இருக்கின்றன.**

**பிரச்சினை :**

எங்கள் ஊர் தும்பத்திக்கோட்டை கிராமமாகும். கடைமடை பாசன பகுதியாகும். இன்னும் எங்கள் ஊருக்குத் தண்ணீர் வரவில்லை. இது ஒவ்வொரு ஆண்டும் நிகழும் தொடர்கதையாகவே உள்ளது. கல்யாண ஓடை ஆற்றில் வாண்டையாரிருப்பு கிராமத்தில் பிரிந்து நான்கு கிராமங்கள் தாண்டி எங்கள் ஊருக்குத் தண்ணீர் பாசனத்திற்கு வருகிறது. இதனால் எங்களுக்கு காலத்திலேயே பயிர் செய்ய முடியவில்லை. பாசன வாய்க்காலில் முட்புதர்களும்,செடி,கொடி போன்றவைகள் மூடி கிடக்கின்றது. ஆற்றை குறுக்கே வெட்டியும் கட்டியும், முன் உள்ளவர்கள் பாய்ச்சுகிறார்கள். எங்களுக்கு தண்ணீர் வருவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் எங்கள் ஊர் வாய்க்காலை வெட்டி தூர் வாரி தண்ணீர் கொண்டு செல்கிறார்கள். இப்பொழுது வரும் தண்ணீர் பாசனத்திற்கு பற்றாக்குறையாக உள்ளது. வாய்க்கால் மேற்பார்வையாளரும் விவசாயிகளிடம எதிர்பார்ப்பவராக உள்ளார். எங்கள் குறை அனைவருக்கும் தெரிந்தும் தீர்ந்தபாடு இல்லை. தாங்கள் எங்கள் குறையைத் தீர்க்க வழி செய்யுமாறு உங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*– தி.பாஸ்கரன், தும்பத்திக்கோட்டை,*
*ஒரத்தநாடு வட்டம், தஞ்சாவூர்–614 904*

**தீர்வு:**

*பருத்திக்கோட்டை வாய்க்கால் கல்யாணஓடை கால்வாயில் தொலைகல் 1/6915ல் இடது கரையில் பிரிகின்றது. இந்த வாய்க்கால் மொத்த நீளம் 7.20 கி.மீ.*

*கல்லணையிலிருந்து, கல்லணைக் கால்வாயில் பெறப்படும் தண்ணீர் உள்முறை வைத்து 5 நாட்களுக்கு ஒரு முறை, முறை வைத்து கல்யாண ஓடை கால்வாயில் வழங்கப்படுகிறது. தும்பத்திக் கோட்டை கிராமம், பருத்திக்கோட்டை வாய்க்காலின் கடைமடைப் பகுதியாகும். எனவே, முறை வைத்து தண்ணீர் விடுவதால் கடைமடைக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் உள்ளது.*

*மேலும், ஆற்றின் குறுக்கே வெட்டி தண்ணீர் பாய்ச்சுபவர்கள் மீது காவல்துறையினரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்க்காலில் முளைத்துள்ள செடி,கொடிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*எனினும் மனுதாரரின் கோரிக்கைக்கு இணங்க முறைப்பாசனக்காலத்தில் கடைமடை பகுதிக்கு தண்ணீர் கிடைக்க ஆவன செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*– – செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை,*
*நீர்வள ஆதார அமைப்பு*
*கல்லணைக் கால்வாய் கோட்டம்,*
*தஞ்சாவூர் – 613001.*

**பிரச்சினை :**

எங்கள் ஊரில் சுமார் 500 குடும்பங்கள் கோவில் இடத்தில் இருப்பதால், 250 குடும்பங்களுக்கு மின்இணைப்பு வழங்கியுள்ளது. மீதியுள்ள 250 குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்க இயலாது என்று மின்இணைதுறை அதிகாரிகள் கூறிவிட்டார்கள். எங்களுக்கு படிப்பதற்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. அதிகாரிகள் பரிந்துரை செய்து மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*– கிராம மக்கள், கற்பகநாதர்குளம்*
*திருத்துறைப்பூண்டி தாலுகா,*
*திருவாரூர் மாவட்டம் – 614 703*

**தீர்வு :**

கற்பகநாதர்குளம் கிராமத்தில் திருத்துறைப் பூண்டி புறநகர் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் பெறப்பட்ட அனைத்து மின்இணைப்பு விண்ணப்பங் களுக்கும் மின்இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. புதிய மின் இணைப்பு விண்ணப்பங்கள் நிலுவையில் இல்லை மேலும் மின் இணைப்பு கோரி புதிய விண்ணப்பங்கள் கொடுத்தால் மின்இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

தெற்கு நாணலூர் நட்வண் கோயில்பத்து கிராமத்தில் நிலவும் குறைந்த மின்அழுத்தம் குறைபாட்டை நிவர்த்தி செய்திட மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அனுமதியும் பெறப்பட்டுள்ளது. தளவாட சாமான்கள் பெறப்பட்டு பணி முடிக்கப்பட்டு குறைந்த மின் அழுத்தம் சரி செய்யப்படும்.

*– உதவி செயற்பொறியாளர்*
*(இ & கா) தமிழ்நாடு மின்சார வாரியம்,*
*திருத்துறைப்பூண்டி – 614 713*

• • •

# எங்கள் ஊர்ப் பிரச்சினை

**பிரச்சினை :**

எங்களது ஊர் ஒரு குக்கிராமம். ஊரின் பெயர் மேம்பட்டு, செங்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

எங்களது பிரச்சினை என்னவென்றால், போக்குவரத்து வசதி இல்லை. தார்சாலை அமைக்கப்படவில்லை.



நகரங்களுக்குச் செல்ல வேண்டுமானால் 14 கி.மீ. நடந்து செல்ல வேண்டும். மேற்கூறிய இந்த பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

*– ஊர் பொது மக்கள் சார்பாக*
*ஊர் நாட்டாண்மை, மேம்பட்டு கிராமம்*
*ஜம்னாமரத்தூர் வழி, செங்கம் தாலுகா,*
*திருவண்ணாமலை – 635 703.*

**தீர்வு :**

2001–2002ஆம் ஆண்டு பி.எம்.ஜி.எஸ்.ஒய் தேசிய ஊரக சாலைத் திட்டத்தில் ரூ.60.00 இலட்சத்தில் அத்திப்பட்டு முதல் மேல்பட்டு வழியாக செல்லும் சாலை 5.45 கிலோ மீட்டரில் தார் சாலை அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின்படி மேற்படி வேலையை செய்ய கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன என வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

*– ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்*
*(ஊராட்சிகள்)(பொறுப்பு)*
*திருவண்ணாமலை மாவட்டம்.*

• • •

**பிரச்சினை :**

எங்கள் ஊரில் பொன்விழா கண்ட பழமை வாய்ந்த ஹமீதிலா கல்வி நிறுவனம் ஒன்று உள்ளது. இக்கல்வி நிறுவனத்தை எங்கள் ஊர் இஸ்லாமிய ஷாபி ஜமாத்தார்கள் நடத்தி வருகிறார்கள். வருவாயில் மிகவும் பின்தங்கிய எங்கள் ஜமாத்தார் இப்பகுதி வாழ் குழந்தைகளின் கல்வி நலன் கருதி 1936–ஆம் ஆண்டு ஹமீதியா ஆரம்பப்பள்ளியை உருவாக்கி அதனை ஓராசிரியர் பள்ளியாகச் செயல் படுத்தினர். 1947–ஆம் ஆண்டு முதல் தமிழக அரசின் முறையான அங்கீகாரத்துடன் மாணவர் விகிதாச்சார அடிப்படையில் பணியிடங்கள் அரசால் வழங்கப்பட்டு பள்ளி செயல்படத் தொடங்கியது. வளர்ந்து வரும் கல்வித் தேவையைக் கருத்திற்கொண்டு, 1985–ஆம் ஆண்டு இக்கல்வி நிறுவனம் நடுநிலைப்பள்ளி யாகத் தரம் உயர்த்தப்பட்டது. அரசு மானியத்துடன் அங்கீகாரமும் கிடைத்தது.

பர்தா அணிந்த இஸ்லாமிய பெண் மாணவியர் நீண்ட தூரம் சென்று உயர்நிலைக் கல்வியைப் பெற இயலாத நிலையைக் கருத்திற்கொண்டும் சுற்று வட்டார அனைத்து மத பெண் மாணவிகளின் கல்வி நலன் கருதியும் இக்கல்வி நிறுவனம் 1991–ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளி யாகத் தரம் உயர்த்தப்பட்டது. அரசின் நிதி உதவி இன்றி அங்கீகாரம் கிடைத்தது.

பள்ளி நிர்வாகம் 9,10 வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு எங்கள் ஊர் இனத்தைச் சேர்ந்த வேறு இஸ்லாமிய மக்களிடம் வசூல் செய்து மிகக் குறைந்த ஊதியத்தையே ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு சம்பளமாய் வழங்கி வருகிறது. பல கட்டங்களில் இந்த ஊதியத்தைக் கூட சரியான நேரத்தில் வழங்க இயலாமல் பள்ளி நிர்வாகம் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

இதே நிலை நீடித்தால் பழமை வாய்ந்த இக்கல்வி நிறுவனத்தை மூடுவதைத் தவிர எங்கள் ஜமாத்திற்கு வேறு வழி இல்லை.

எனவே, தங்கள் இதழ் மூலம் எங்கள் பிரச்சினையைத் தமிழக அரசு மற்றும் கல்வித் துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று எங்கள் ஊர் ஹமீதியா உயர் நிலைப்பள்ளியில் 9,10 வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு அரசு மானியம் கிடைத்திட ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*– தலைவர், சாலையூர் நெசவுப் பட்டடை,*
*ஷாபி இமாத் பள்ளிவாசல்,*
*சிவகங்கை மாவட்டம்.*

**தீர்வு :**

சிவகங்கை மாவட்டம், சாலையூர் நெசவுப் பட்டடை ஷாபிஜமாத் பள்ளித் தலைவரின் கடிதத்தில் இப்பள்ளி 1936ம் ஆண்டு ஆரம்பப் பள்ளியாக துவங்கப்பட்டு, 1985ம் ஆண்டு நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு, 1991ம் ஆண்டு

உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டு அரசின் நிதிஉதவி இன்றி அங்கீகாரம் கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

1991–92ம் ஆண்டிலும், அதற்குப் பிறகும், துவக்க அனுமதி அளிக்கப்பட்டும், அங்கீகாரம் அளிக்கப்பட்டும் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் எப்போதும் அரசு நிதிஉதவிவழங்குவது இல்லை எனும் அடிப்படையில்தான் அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் 1991ம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டு 9,10ஆம் வகுப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு அரசு மானியம் வழங்க இயலாது என அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளது என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.*

• • •

**பிரச்சினை :**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, ஏழுமலை சரகம், எருமார்பட்டி கிராமம். இவ்வூரில் கிளை அஞ்சலகம் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக எருமார்பட்டி கிளை அஞ்சலகம், உசிலம்பட்டி தலைமை அஞ்சலகத்துடன் இணைந்து இருந்தது. அப்போது உரிய நேரத்தில் தபால் சேவை பெற்று வந்தோம். காலை 9 மணி முதல் 12 மணிக்கு மேலே, ஊர் பொதுமக்கள் தபால்கள் துரிதமாக பெற்று வந்தோம்.

ஆனால் கடந்த 1997 முதல் சேடபட்டி தலைமை அஞ்சலகத்தில் எருமார்பட்டி கிளை அஞ்சலகம் இணைக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை எங்கள் ஊர் பொதுமக்களுக்கு காலை 9 மணிக்கு கிடைக்க வேண்டிய தபால்கள் மதியம் 12 மணிக்கும், 3 மணிக்கும் கிடைக்கிறது.

வேலைவாய்ப்புக்கான தபால்கள் நீதிமன்ற தபால்கள் அன்றைய தேதிக்கு வரசொல்கிறார்கள். ஆனால் மாலையில்தான் கிடைக்கிறது. நாங்கள் எப்படி ஆஜராக முடியும். இதனால் வேலைவாய்ப்பு இழக்கின்றோம்.

இதுபற்றி உயர்திரு அஞ்சலக கண்காணிப்பாளர் தேனி அவர்களுக்கு பல மனுகொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் எருமார்பட்டி கிளை அஞ்சலகத்தை உசிலம்பட்டியில் இணைக்குமாறு மிகவும் பணிவுடன் ஊர் பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

*– ஊர் பொதுமக்கள் சார்பாக, முருகன், எருமார்பட்டி, மதுரை மாவட்டம்.*

• • •

**தீர்வு :**

எருமார்பட்டி கிளை அஞ்சலகம் தற்போது உசிலம்பட்டி தலைமை அஞ்சலகத்துடன் இணைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இக்கிளை அஞ்சலகத்தை மனுவில் குறிப்பிட்டது போல சேடபட்டி தலைமை அஞ்சலகத்திற்கு மாற்றிச் செயல்படுத்துவதால் பல நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படும் நிலை உள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் தபால் சேவையை காலதாமதமின்றி துரிதமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

*– அஞ்சல்துறை கண்காணிப்பாளர், தேனி வட்டம், தேனி மாவட்டம்.*

**பிரச்சினை :**

தெள்ளார் ஊராட்சி குடிநீருக்காக ஓ.பி.ஆர்.காலனி, 261 குடும்பங்களுக்கு மேல்நிலை நீர்த்தொட்டி அமைக்கவும், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி காலனி சுமார் 60 குடும்பங்களுக்கு குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியும், இது தவிர சுமார் 15 கைப்பம்புகள் தண்ணீருக்காக தெருக்களுக்குத் தேவை. கிளை நூலகம், துணை சுகாதார நிலையம் ஆகியவை கட்ட இடமளித்து இதுவரை அரசு



கட்டப்படவில்லை. பொதுநலன் கருதி இந்த அடிப்படை வசதிகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*– தலைவர், தெள்ளார் ஊராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.*

**தீர்வு :**

1. ஓ.பி.ஆர். காலனி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி காலனி, மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கோரிக்கை தொடர்பாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை உரிய நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது.
2. கைப்பம்புகள் ஒன்றிய பொதுநிதியில் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3. கிளை நூலகம், துணை சுகாதார நிலையம் தொடர்பாக சம்மந்தப்பட்ட தனி அலுவலர்களை நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிமன்றத் தலைவர் என்பவர் ஊராட்சி செயல் அலுவலர் என்ற முறையில் ஊராட்சி நிதி ஆதாரங்களை பெருக்கி, அரசின் நிதி ஆதாரங்களை எதிர்பாராமல் செயல்படத்தக்க அறிவுரைகள் ஊராட்சி மன்றத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளன என்ற தகவலும் கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

*– மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம்.*

• • •

# நீரில் மூழ்குவதால் ஏற்படும் மரணம்

- டாக்டர் மு.குமரேசன்

மரணம் ஏற்பட முழு உடம்பும் தண்ணீரினுள் மூழ்க வேண்டும் என்பது கிடையாது. முகம் மட்டும் மூழ்கினால்கூடப் போதும். தண்ணீரினுள் குதிக்கும்போது ஒருவன் எவ்வளவு வேகமாக குதிக்கிறானோ அவ்வளவு அளவு ஆழம் தண்ணீருக்குள் சென்று பின் கைகால்களின் அசைவுகளால் சிரமப்பட்டுதான் அவன் மேலே வர வேண்டும். இருப்பினும் உடம்பின் 'ஸ்பெசிபிக் கிராவிட்டி' தண்ணீரை விட அதிகம்.

ஒருவருக்கு நீச்சல் தெரியவில்லையென்றால் அவர் தண்ணீரின் உள்ளேயே கத்துகிறார். கத்துவது முடிந்தவுடன் காற்று நுரையீரலுக்குள் செல்வதற்கு பதிலாக தண்ணீர் நுரையீரலுக்குள் சென்று விடுகிறது. இதனால் உடம்பின் எடை அதிகரிக்கிறது. உடம்பு எடை அதிகரிக்க, அதிகரிக்க உடம்பு கீழ்நோக்கிச் செல்லும். இருப்பினும் கை, கால்களை உதைத்துக் கொண்டு ஒரு முறையோ, இரு முறையோ உடம்பு தண்ணீர் மட்டத்துக்கு வரலாம். நுரையீரலில் உள்ள காற்றறைகள் அத்தனையும் தண்ணீரால் நிரப்பப்பட்ட உடன் தண்ணீரில் மூழ்கிய மனிதனால் மேல் மட்டத்திற்கு வரவே முடியாது. இதனால் மனிதன் தண்ணீரில் சாகிறான். சில பேருக்கு தண்ணீரின் உள்ளே இருக்கும்போது வலிப்பும் ஏற்படும்.

தண்ணீரில் மூழ்கும்போது காதடைப்பும், கண் முன்னால் ஏதோ வெளிச்சம் தோன்றுவது போலவும் இருக்கும்.

நீரில் மூழ்கிய மனிதன் இறப்பதற்கு காரணங்கள்:

1. மூச்சடைப்பு
2. நுரையீரல் நுண்ணறைக்குள் தண்ணீர் சென்று அடைத்துக் கொள்கிறது. அதனால் இறப்பு ஏற்படுகிறது. சிலருக்கு மூச்சுக் குழாயில் தண்ணீர் சென்றவுடனே அயல் பொருள் செயலால் மூச்சுக் குழாயில் சுருக்கம் ஏற்படுகிறது. இதனால் மூச்சடைப்பு ஏற்பட்டு மனிதன் இறக்கிறான்.

**அதிர்ச்சி**

சிலருக்கு பயத்தினால் கூட இறப்பு ஏற்படலாம். தண்ணீரினுள் விழும்போது பலத்த அடி வயிற்றிலோ மார்பிலோ படலாம். இதனால் அதிர்ச்சி ஏற்படுகிறது. தண்ணீர் அதிக குளிர்ச்சியாக இருந்தால்கூட தோல் நரம்புகளின் மூலம் உணர்ச்சிகள் மூளைக்குச் சென்று அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

சிலருக்கு தண்ணீரினுள் விழும் போது தலையில் அடிபட்டு இறந்தாலும் உண்டு.

**இறத்தல் நேரம்**

தண்ணீரினுள் மூழ்கியதும் மூச்சுத் திணறல் 2 நிமிட நேரத்தில் ஏற்படுகிறது. ஆனால், இதயத்தின் நிறுத்தம் 5 நிமிடம் கழித்துதான் நடைபெறுகிறது. ஆகவே, அந்த 5 பொன்னான நிமிடங்கள் உண்டு என்பதை யாவரும் தெரிந்து கொண்டு தண்ணீரினுள் மூழ்கியவனைக் காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

தண்ணீர் நுரையீரலுக்குள் செல்லாமல் இருக்குமேயானால் 10-20 நிமிடங்கள் வரைகூட உயிரோடு இருக்கவும் வாய்ப்புண்டு.

**மருத்துவம்**

ஒரு நிமிடம் கூடத் தாமதிக்காமல் தண்ணீரினுள் விழுந்தவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். இறக்கவில்லை என்று தெரிந்தால் ஒரு மணிநேரம் கூட உயிர் காக்கும் முயற்சிகளைச் செய்து கொண்டே இருக்கலாம். அந்த மனிதனின் மேலாடைகளைக் கழற்றிவிட்டு வாய், மூக்கில் இருக்கும் மண், சகதி, நுரை போன்றவற்றை அகற்ற வேண்டும். மூழ்கியவரைத் தரையில் தலைகீழாகப் போட்டுவிட்டு ஒரு கையை நேராக நீட்டியும் இன்னொரு



கையை தலைக்கு அணையும் கொடுத்துத் தலையை ஒரு பக்கம் சரித்துக் கிடத்த வேண்டும்.

மார்பின் கீழ்ப்பாகம் சிறிது உயர்ந்து இருக்க வேண்டும். அப்போதுதான் நுரையீரலிலிருந்து தண்ணீர் இலகுவாக வாய் வழியாக வழியும். பின்னர் நம் கையை மூழ்கியவரின் பின் விலா எலும்பில் வைத்து நன்றாக அழுத்த வேண்டும். இதனால் நுரையீரலில் தங்கியிருக்கும் தண்ணீர் வெளியாகிறது. இதே போல் விட்டுவிட்டு ஒரு நிமிடத்திற்கு 15 தடவை செய்யவும். இவ்வாறு ஒரு மணி நேரம் செய்ய வேண்டும். அப்போதுதான் முழுமையான சாதாரண மூச்சு துவங்கும். இவ்வேளைகளில் பிராண வாயு இருந்தால் கொடுக்க வேண்டும். மார்பிலும், முகத்திலும் குளிர்ந்த நீரையும், சுடுதண்ணீரையும் மாறிமாறித் தெளிக்க வேண்டும். உடம்பை சூடேற்ற உடம்பு முழுவதையும் தேய்த்துக் கொடுக்க வேண்டும். நல்ல மூச்சு வந்துவிட்டதென்றால் உடம்பை சூடாக வைத்திருக்க துணியினால் உடலை நன்றாக மூட வேண்டும்.

இன்னும் சூடேற்ற சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுக்கலாம். வெந்நீர் நிறைந்த புட்டிகளை உடம்பின் பக்கத்தில் வைக்க வேண்டும். சூடான பால் கொடுக்க வேண்டும்.

**நீரில் மூழ்கி இறந்துபோன உடலைத் தண்ணீரில் மூழ்கியதால் தான் மரணம் ஏற்பட்டதா என அறிந்து கொள்ளும் விதம்**

தண்ணீரில் மூழ்கி இறந்தவரின் உடலை பரிசோதிக்கும்போது அவரது ஆடைகள் நனைந்து காணப்படும். அல்லது நனைந்ததற்கான அடையாளங்கள் காணப்படும். முகம் வெளுத்துக் காணப்படும். கண் சிறிது திறந்து சிவந்து காணப்படும். கண்மணி விரிந்து காணப்படும். நாக்கு தடித்தும் சில சமயத்தில் வெளியே தள்ளியும் காணப்படும். வாயிலும், மூக்கிலும் வெண்மையான நுரை காணப்படும். சில நேரங்களில் ரத்தம் கலந்தும் காணப்படும். வாயிலும் மூக்கிலும் நுரை தெரியவில்லை என்றால் மார்பை அழுத்தினாலே நுரை வெளிவரும். இதுதான் தண்ணீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என அறியும் முக்கியமான அறிகுறியாகும்.

இருப்பினும் ஓபியம் கொடுத்து சாகடித்தாலும் வாய், மூக்கில் நுரை ஏற்படலாம். அதிக நேரம் ஆகி உள் உறுப்புக்கள் கெடும் நிலை ஏற்பட்டாலும் நெஞ்சை அழுத்தும் போது மூக்கில் நுரை வரலாம். ஆனால், இப்படி நுரை ஏற்படும் போது நுரை சிறிதளவாகவும், அதிக நேரம் நிலைத்த தன்மை இல்லாதவையாகவும், அதில் ஏற்படும் கொப்பளங்கள் சிறிதாகவும் தோன்றும்.

இறந்தவரின் தோலைப் பார்க்கும் போது பல மடிப்புக்கள் தெரியும். கை, கால் சதைகள் எல்லாம் விரைத்து சுருங்கிப் போகும். இதை வைத்துக்கூட தண்ணீரினால் தான் இறத்தல் ஏற்பட்டிருக்கிறது என தெரிந்து கொள்ளலாம். ஆண் உறுப்பும், விந்துப்பையும் சுருங்கி சிறுத்துப் போகும். சிலருக்கு ஆணுறுப்பு பாதியளவு விரைத்துக் காணப்படும். சிலருக்கு கைவிரைத்துப் போவதால் கையினுள் குளத்தின் பாசி, செடி, கொடிகள் உள்ளங்கையின் உள்ளே இருப்பதைக் காணலாம். இதை வைத்தே கொன்றபின் தண்ணீரினுள் தூக்கி போட்டுள்ளார்களா என்பதையும் கண்டுபிடித்து விடலாம்.

**உள்தோற்றம்**

நுரையீரல் பலூன் போன்று பருத்துக் காணப்படும். நுரையீரலை வெட்டிப் பார்த்தால் ரத்தம் கலந்த நுரை வெளியேறும். மூச்சுக் குழாயினுள் மண், சகதி தென்படும். வயிற்றினுள் கூட தண்ணீர் சென்றிருக்கும்.

இதேபோல, சிறுகுடலில்கூட தண்ணீரும் மண்ணும் காணப்படும். இவையெல்லாம் மூழ்கடிக்கப்பட்டுதான் மரணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உறுதி செய்யும் சோதனைகளாகும். மூச்சு முட்டுதலினால் வாயில் சென்ற தண்ணீர் காது-மூக்குக் குழாயின் வழியாக நடுக்காதினுள் செல்ல ஏதுவாகிறது.

இறந்தபின் மூழ்கடிக்கப்பட்டால் இந்நிகழ்ச்சி ஏற்படுவதில்லை.

சில நேரங்களில் தற்கொலைக்காகத் தண்ணீரினுள் குதிக்க வேண்டும் என எண்ணுவோர்கள் தன் காலையும், கையையும் கட்டிக் கொண்டு ஒரு கனமான பொருளை வயிற்றில் கட்டிக்கொண்டு தண்ணீரினுள் குதித்துவிடுவார்கள். இந்நேரங்களில் அந்த முடிச்சுக்களை ஆராயும் போது தற்கொலை செய்து கொள்ளத்தான் அம்முடிச்சுக்கள் போட்டுக் கொண்டாரா அல்லது மற்றொருவரின் பலாத்காரத்தால் போடப்பட்டதா என்பதையும் கண்டுபிடித்துவிடலாம். இம்மாதிரியே தற்கொலை செய்து கொள்பவர்கூட தண்ணீரில் மூழ்குமுன் தன் உடம்பிலே பல காயங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

சிலர் தற்செயலாகவும் தண்ணீரினுள் மூழ்கி இறந்துவிடுவதுண்டு. சிறு குழந்தைகளுக்கு இந்த நிலை ஏற்படலாம். விளையாடும்போது தண்ணீரினுள் விழுந்து விடுவதுண்டு.

• • •

# முருங்கையின் பயன்கள்

- டாக்டர் தனபாலன்

**சோர்வு நீங்க**

சர்க்கரையுடன் முருங்கை இலைச்சாறு 30 மில்லியை தினமும் காலை சாப்பிட நீண்ட நாள் சோர்வு நீங்கும்.

**நோய் எதிர்ப்பு சக்திக்கு**

முருங்கைக் காயும், கீரையும் அடிக்கடி உணவில் சேர்க்க, முக்குற்றம் நீங்கும். நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

**பருமன் குறைய**

முருங்கைக் கீரையை தொடர்ந்து உபயோகித்து வர உடல் பருமன் குறையும்.

**கண் எரிச்சல்**

முருங்கைக் கீரையை பயத்தம் பருப்புடன் பொரித்து சாப்பிட கண்ணெரிச்சல் நீங்கும்.

**தைராய்டு சுரப்பிகள் இயங்க**

முருங்கைக் காய், கீரை,பூ ஆகியவற்றை வாரம் இரண்டு நாட்கள் உபயோகித்துவர, தைராய்டு சுரப்பிகள் சீராக இயங்கும்.

**எலும்புகள் பலம் பெற**

முருங்கைக்காய், கீரையில் சுண்ணாம்புச் சத்து இருப்பதால் எலும்புகளுக்கு சக்தியும், திண்மையும் கிடைக்கும்.



**இரத்த குன்மம்**

முருங்கைப்பூவை கல்யாண முருங்கைப் பூவுடன் கசாயம் போட்டு கொடுக்க முத்துப்பிள்ளைக் கர்ப்பம் கரையும்.

**பெரும்பாடு**

முருங்கைப்பூவை இடித்து தேங்காய்ப் பாலில் கலந்து கொடுக்க பெரும்பாடு நீங்கும்.

**மாதவிலக்கு வலி**

கீரைச் சாறை 50 மில்லி அளவுக்கு 10 நாட்கள் முன்னதாகவே தினசரி கொடுத்துவர மாதவிலக்கு வலி நீங்கும்.

**தொண்டைக் கட்டு**

முருங்கை இலைச்சாறுடன் சிறிது சுண்ணாம்பு, தேன் கலந்து மேலே தடவ தொண்டைக் கம்மல் நீங்கும்.

**ஆண்மை குறைவுக்கு**

முருங்கைப்பூ சாறு 30 மி.லியை வெண்பூசணி லேகியத்துடன் சாப்பிட ஆண்மை இல்லாதவர்களுக்கு ஆண்மை ஏற்படும்.

**விந்து கெட்டிப்பட**

முருங்கைப் பிசினைத் தூள் செய்து காலை மாலை சிறிது பாலில் சாப்பிட விந்து கெட்டிப்படும்.

**மலடு நீங்க**

முருங்கைக் கீரைச் சாறை 30 மில்லி அளவுக்கு காலை வெறும் வயிற்றில் 2 மாதங்கள் தர, கருப்பை பலப்பட்டு மலடு நீங்கும்.

**பொய் பிரசவ வலி**

கர்ப்பக் கால 9-வது 10- வது மாதங்களில் ஏற்படும் பொய் பிரசவ வலிக்கு முருங்கைக்கீரைச் சாறு கொடுக்கலாம்.

**சுகப் பிரசவத்திற்கு**

முருங்கைக்கீரை சாறை 50 மில்லி அளவுக்கு தேன் கலந்து பிரசவ வலி ஏற்பட்டவுடன் கொடுக்க சுகப் பிரசவம் ஏற்படும்.

**கால் வீக்கத்திற்கு**

முருங்கை ஈர்க்கை இடித்து மிளகு, சீரகம் சேர்த்து ரசம் வைத்துக் கொடுக்க, கால் வீக்கம் இறங்கும்.

**மஞ்சள் காமாலை**

முருங்கைத் துளிரும், முத்துத் தழை துளிரும் சம அளவு அரைத்து கொடுக்க மஞ்சள் காமாலை குணமாகும்.

**கல்லீரல், மண்ணீரல் நோய்**

முருங்கைத் துளிரும், கல்யாண முருங்கைத் துளிரும் சம அளவு அரைத்துக் கொடுக்க கல்லீரல், மண்ணீரல் நோய் நீங்கும்.

**மயக்கம், மூர்ச்சை**

முருங்கைக் கீரையை அரைத்து எலுமிச்சை அளவு தினம் உண்டு வர பித்த மயக்கம், மூர்ச்சை நீங்கும்.

**வயிறு உப்புசம்**

முருங்கைப் பட்டையை விளக்கெண்ணெயில் கொதிக்க வைத்து குழந்தைகளுக்கு ஊற்ற வயிறு உப்புசம் நீங்கும்.

**மலச்சிக்கல் நீங்க!**

முருங்கைக் கீரையைப் பொரித்து, வேர்க்கடலையை தூள் செய்து சேர்த்துச் சாப்பிட மலச்சிக்கல் நீங்கும்.

**விக்கல்**

முருங்கைவேர் சாறுடன் பால் சேர்த்துக் கொடுக்க விக்கல் நீங்கும்.

**புழுக்கள் போக**

காய்ந்த முருங்கை விதை மூன்றைச் சாப்பிட ,வயிற்றுப் புழுக்கள் நீங்கும்.

**கட்டி, வீக்கம்**

முருங்கைக் கீரையை வதக்கி கட்டிகள் மீது வைத்துக் கட்ட கட்டிகள் கரையும்.

**நீரிழிவு**

முருங்கை இலைச் சாறை தினசரி 50 மில்லி அளவுக்கு சாப்பிட சர்க்கரை நோய்க்கு சிறந்த மருந்தாகும்.

**நீர் பெருக**

முருங்கைக் கீரையை கசாயம் போட்டு குடிக்க, நீர் அதிகமாக வெளியேறும்.

**நீர் சுருக்க**

முருங்கைப் பிசினை பாலில் கலந்து சாப்பிட அடிக்கடி சிறுநீர் போதல் கட்டுப்படும்.

**இரத்த மூத்திரத்திற்கு**

முருங்கைப்பூவையும்,கரிசாலையையும் சம அளவில் அரைத்து வெண்ணெய்யில் கொடுக்க இரத்த மூத்திரம் குணமாகும்.

**தலைவலி**

முருங்கைப் பிசினை தாய்ப்பாலில் உரைத்துப் பற்றுப் போட தலைவலி நீங்கும்.

**ஒற்றைத் தலைவலி**

முருங்கைக் கீரையும், வேப்பிலையும் சம அளவில் அரைத்து 3 நாட்கள் சாப்பிட ஒற்றைத் தலைவலி போகும்.

**இரத்த அழுத்தம்**

முருங்கைக் கீரைச் சாறைக் கொதிக்க வைத்து தினம் குடிக்க அதிக இரத்த அழுத்தம் குணமாகும்.

**வயிற்று வலி**

முருங்கைச் சாறுடன் சிறிது உப்பு சேர்த்துக் கொடுக்க வயிற்று வலி நீங்கும்.

**முதுகுவலி**

முருங்கை வேரை இடித்து சாறைக் குடிக்க முதுகு வலி நீங்கும்.

**பித்த வெடிப்பு**

முருங்கைப்பூவை இலுப்பை எண்ணெயில் அரைத்துப் பூச பித்த வெடிப்பு மறையும்.

★ *நன்றி :* மருத்துவ அறிவியல் மலர்

# மருத்துவக் குறிப்புகள்

- டாக்டர் ஜி. மணிவாசகம்

- இரத்த புற்று நோயுள்ளோர் வாரம் ஒருமுறை செம்புகம் கறி சாப்பிட விரைவில் குணம் கிடைக்கும்.
- தினசரி ஆவாரம்பூ, தேநீர், முட்டைகோஸ் சூப், மணத்தக்காளி கீரை சூப், வாரம் ஒருமுறை அகத்திக் கீரை சூப் ஆகியவற்றை சாப்பிட குடல் புண் குணமாகும்.
- நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் தினசரி முருங்கைக் கீரை மற்றும் வாழைப்பூ துவட்டல் சாப்பிட நல்ல குணம் கிடைக்கும்.
- வெள்ளைப் போக்கு உள்ளோர் தினசரி செம்பருத்திப்பூ தோசை, வெந்தய இட்லி, வெண் பூசணிக்காய் கூட்டுடன் சாப்பிட ஒரு மாதத்தில் நோய் விலகும்.
- தோல் நோய்களால்பாதிக்கப்பட்டோர் மிளகுப் பொங்கல், மிளகு சீரகப்பொடி, பசலைக் கீரை கூட்டு, குப்பைமேனியிலை அடை சாப்பிட விரைவில் நற்பலன் கிடைக்கும்.
- கால் ஆணியால் அவதிப்படுபவர்கள் மருதாணி இலைகளை அரைத்து சூடம் சேர்த்துக் குழைத்துத் தடவ குணமாகும்.
- குங்கும ஒவ்வாமையால் நெற்றியில் வெண்புள்ளி வந்தால் தினசரி வெள்ளை கரிசலாங்கண்ணி இலைச் சாற்றைத் தடவி வர ஒரு மாதத்தில் வெண்புள்ளி மறையும்.
- தினசரி இரவில் கொள்ளு சுண்டல் சாப்பிட மாரடைப்பு வராது.
- தினசரி கடுக்காய் துவையல் சாப்பிட முடி கொட்டுதல் நிற்கும்.
- மூட்டுவலி உள்ளோர் சுக்கு டீ, முடக்கற்றான் தோசை, முருங்கைக் கீரை காம்புடன் போட்ட சூப் சாப்பிட வலி குறையும்.
- யானைக்கால் சுரம் உள்ளோர் நாயுருவி வேர்க் கசாயம் காலை, மாலை இருவேளைகள் வீதம் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட சுரம் வராது.
- போதைப் பழக்கத்தை நிறுத்த விரும்புவர்கள் காலை,மாலை ஒரு தேக்கரண்டி வில்வ இலைச் சூரணத்தை, நாற்பது நாட்கள் சாப்பிட குணம் கிடைக்கும்.
- கை, கால் நடுக்கம் உள்ளோர், முள் நீக்கிய தூதுவளை இலைகள், ஐந்துடன் உலர்ந்த திராட்சை ஐந்து சேர்த்து காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட இரண்டு மாதங்களில் நடுக்கம் நிற்கும். •

# கூட்டுறவே நாட்டுயர்வு!

நூலிழையின் கூட்டுறவில் ஆடை தோன்றும்
நுண்ணிடையாள் கூட்டுறவில் இன்பம் தோன்றும்
காலிகளின் கூட்டுறவில் கலகம் தோன்றும்
கற்றவர்கள் கூட்டுறவில் கலைகள் தோன்றும்
தாலிதரும் கூட்டுறவில் வாழ்க்கை தோன்றும்
தருக்களது கூட்டுறவில் காடு தோன்றும்
நாலினொடு ஒன்றாக மக்கள் சேர்ந்தால்
நல்லுறவாம் கூட்டுறவில் நன்மை தோன்றும்.

பைந்தமிழின் கூட்டுயர்வில் புலமை பிறக்கும்
பாட்டுடனே இசைசேர்ந்தால் உள்ளம் மயக்கும்
மைந்தரது கூட்டுறவில் இல்லம் சிலிர்க்கும்
மேதைகளின் கூட்டுறவில் பெருமை சுரக்கும்
ஐந்துகணை கூட்டுறவில் மோகம் சிலிர்க்கும்
ஆர்வமுடன் திறமைகூட ஆற்றல் பெருக்கும்
நைந்திடாத மனத்துடனே ஒன்றாய்ச் சேர்ந்தால்
நன்மையென வளம்பெருகும்; நாடே சிறக்கும்.

உழைக்கின்ற பாட்டாளி மக்கள் கூட்டம்
உணர்வுடனே ஒற்றுமையாய்ச் சேர்ந்தா ரென்றால்
தழைத்தென்றும் தொழில்களெலாம் செழிக்கக் காண்போம்
தரணியிலே பரணிபாடி மகிழ்ந்து வாழ்வோம்
'பிழைக்கின்ற வழியறிவோம்' என்போர்க்கெல்லாம்
பெரியதவ வரம்போல நாட்டி லின்று
அழைக்கின்ற அரும்பேறே கூட்டுத் துறையாம்
அத்துறையே நாட்டுயர்வு; நாடித் துடிப்பு!

□ கலைப்பொழிலன்

# கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகை விரைவில் வழங்கப்படும்

தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையை பட்டுவாடா செய்வதைத் துரிதப்படுத்துவதற்காக தனியார் ஆலை அதிபர்கள் மற்றும் பிரதிநிதிகளின் கூட்டத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு பாண்டுரங்கன் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஜீவானந்தம் அவர்களும், 6.11.2001 அன்று நடத்தினார்கள். இக்கூட்டத்தில் திரு கா.அலாவுதீன், இ.ஆ.ப. சர்க்கரைத்துறை ஆணையர், திரு ஆர்.எஸ்.கண்ணன், இ.ஆ.ப., இணை ஆணையர் மற்றும் அரசு அலுவலர்களும், சிஸ்மா செயலர் மற்றும் தனியார் ஆலை அதிபர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் துவக்கத்தில் சர்க்கரைத் துறை ஆணையர், தொழில்துறை அமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகளையும் பிற அலுவலர்களையும் வரவேற்றார். தொழில்துறை அமைச்சர் அவர்கள் தனியார் சர்க்கரை ஆலை அதிபர்களின் கூட்டம் நடத்தப்படுவதின் நோக்கத்தை விளக்கியதுடன் முன்னர் நடந்த கூட்டத்தில் தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கித் தொகையில் சட்டபூர்வ விலைப்படியான பாக்கியை 30–9–2001க்குள்ளும், 5–ஏவின் கீழ் முன்பணமாக வாங்க வேண்டியதை 15.10.2001–க்குள்ளும் வழங்குவதாக உறுதியளித்ததை நினைவுபடுத்தினார். அதன்படி இரு ஆலைகள் தவிர மற்ற அனைத்து ஆலைகளும் 31.10.2001 நிலவரப்படி குறைந்தபட்ச விலை மற்றும் கூடுதல் விலைக்கான முன்பண பாக்கியை வழங்கி விட்டதாக அறிந்து மகிழ்ச்சி தெரிவித்தார். கரும்பு கிரைய பாக்கியுள்ள இரு ஆலைகளும் பாக்கி முழுவதையும் துரிதமாக வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதன்படி அந்த தனியார் ஆலைகளின் பிரதிநிதிகள் 12.11.2001க்குள் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக ரூ.3.08 கோடியும், 5–ஏ முன்பணமாக வழங்க வேண்டிய ரூ.6.05 கோடியும் வழங்கி விடுவதாக உறுதியளித்தனர்.

மேலும் சென்ற ஆண்டு இதே காலத்திற்கு அதாவது 31.10.2000 அன்று தனியார் ஆலைகளின் கரும்பு பாக்கித் தொகை ரூ.150 கோடி பாக்கியிருந்தது. ஆனால், இவ்வாண்டு அதாவது 31.10.2001இல் பாக்கித் தொகை வெகுவாகக் குறைந்து ரூ.9.18 கோடி மட்டும் வழங்க வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமாக தனியார் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்பு கிரையத் தொகை செலுத்துவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தனது உரையில், சர்க்கரை உற்பத்தி 2–3 வருடங்களாக தேவைக்கு அதிகமாக இருப்பதால், சர்க்கரை விலை வீழ்ச்சியடைந்துள்ளதையும், அதனால் ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றியும் தெரிவித்தார். மேலும் விவசாயிகள் பயனடையும் வகையில் தனியார் சர்க்கரை ஆலைகள் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கரும்புத் தொகையை பெரும்பாலான ஆலைகள் வழங்கிவிட்டமைக்கு நன்றி தெரிவித்தார்.

கரும்பு மேல்வரி வசூல் தொடர்பாக ஆய்வு செய்கையில் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கரும்பு மேல்வரித் தொகை ரூ.2.80 கோடி பாக்கி உள்ளது. இந்தத் தொகையையும் முழுமையாக தனியார் ஆலைகள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டவாறு தவணை முறையில் செலுத்தி விடுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே பாக்கித் தொகைக்கான தவணையையும், நடப்பு அரவைக்கான மேல்வரியையும் ஒவ்வொரு மாதமும் தவறாமல் செலுத்தி விடுவதாக தனியார் ஆலைகளின் பிரதிநிதிகள் உறுதியளித்தனர். மேலும், அவர்கள் மாண்புமிகு அமைச்சர்கள் தங்களுடன் கலந்து பேசி கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் வாய்ப்புத் தந்தமைக்கு நன்றியும் தெரிவித்தனர்.



தவிர, தனியார் ஆலைகளின் பிரதிநிதிகள் மொலாசஸ் ஏற்றுமதியை அனுமதிப்பது, ஏற்றுமதியாகும் சர்க்கரைக்கு இணையான கரும்பு மீது கொள்முதல் வரி விலக்களிப்பது, எத்தனால் கலந்த வாகன எரிபொருள் உபயோகத்தை துரிதப்படுத்துவது போன்ற பல்வேறு ஆலோசனை மற்றும் கோரிக்கைகளை எழுப்பினார்கள். அமைச்சர்கள் இருவரும் இதுபற்றி சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து பேசி ஆலோசனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்கள். ●

# இலக்கியமும் உளவியலும்

□ முனைவர் ப. மருதநாயகம்

உளவியலால் இலக்கியத்திற்குக் கிடைத்த பயன்கள் பலவென்று சொல்லலாம். இலக்கியப் படைப்பு எவ்வாறு நிகழ்கிறது, இலக்கியப் படைப்பாளியின் தன்மை என்னவென்பன போன்ற கேள்விகளுக்கு உளவியல் சில விடைகளைத் தந்திருக்கிறது. கவிதையாக்கத்தை விவாதிக்கத் தேவையான ஒரு நுட்பமான மொழியையும் உளவியல் நிபுணர்கள் தந்திருக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் படைப்பிலக்கியத்தில் ஒரு பகுதி ஃபிராய்டு (Freud), யுங் (Jung) ஆகியோரது கோட்பாடுகளின் தாக்கத்தால் விளைந்தது என்றே சொல்லலாம். உளவியல், இலக்கியம் ஆகியவற்றின் கூட்டினால் உளவியல் திறனாய்வு, தொன்மத் திறனாய்வு ஆகிய இரண்டு திறனாய்வு அணுகுமுறைகள் தோற்றம் பெற்றன.

உளவியல் மேதையான ஃபிராய்டு இலக்கியம் பற்றிய தமது முடிவுகளைப் பல கட்டுரைகளில் தெளிவாகக் குறிப்பிட்டார். இலக்கியம் என்பது இலக்கிய ஆசிரியன் ஒருவன் தனது அந்தரங்க ஆசைகளைக் கற்பனையளவில் அனுபவித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியென்பது அவரது கருத்து. வாழ்க்கையில் நடைமுறையில் தனது விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள இயலாத நிலையில் கற்பனை உலகில் அவற்றைத் துய்க்க அவன் இலக்கியம் படைக்கிறான். ஒவ்வொரு கலைஞனும் ஒரு மனக் கோளாறு உடையவனே (neurotic); முற்றும் பைத்தியம் ஆகிவிடாமல் தன்னைக் காத்துக்கொள்ளத் தன் அதீதமான கற்பனைகளுக்கு அவன் கலைவடிவம் கொடுக்கிறான். பகல் கனவுக்காரனான அவன் தனது ஆசைக் கனவுகளுக்குப் புறவடிவம் தந்து மகிழ்கிறான். ஏமாற்றமளிக்கும் உண்மை உலகிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தான் படைக்கும் கற்பனை உலகில் நுழைகிறான்; புறவுலகில் எந்த மாற்றத்தையும் செய்யாமல் தான் விரும்பிய வீரனாகவும், அரசனாகவும் படைப்பாளியாகவும் மாறுகிறான். அவனது அகமன விருப்பங்களின் கற்பனை நிறைவுகளே அவனது படைப்புகள். இவை சாதாரண மனிதனின் கனவுகள் போன்றவையே என்பது ஃபிராய்டின் முடிவு. இலக்கியம் பற்றிய ஃபிராய்டின் கருத்து அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடியது அன்று. அதன் குறைகளை டிரில்லிங் (Trilling) போன்ற திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கனவோடு கலைப்படைப்பை ஒப்பிடும் ஃபிராய்டு அவற்றுக்குள்ள முக்கிய வேறுபாட்டினைக் கவனித்துத் தவறிவிட்டார். கனவு அடிமனத்தது; நமது ஆளுகைக்கு உட்படாதது. கலைப்படைப்பில் நமது அறிவின் வெளிப்படையான நேரடியான தாக்கம் உண்டு. ஃபிராய்டு இலக்கியம் பற்றிப்பேசும்போது அதன் உள்ளடக்கத்தை மட்டுமே கவனத்தில் கொள்கிறார். அதன் தொழில்நுணுக்கக் கூறுபாடுகளை முழுவதும் புறக்கணிக்கிறார். இலக்கியப் படைப்பில் உட்பொருள் பற்றியும் அவரின் விளக்கம் முழுமையானதாக இல்லை. கலைஞனின் நோக்கம் அல்லது கலைஞனின் மனக்கோணல் ஆகியவற்றை வைத்தே இலக்கியத்தைத் தவறான ஆய்வுக்கு உட்படுத்துகிறார். ஒவ்வொரு மனிதனும் மனநோயாளியானால் உன்னதமான படைப்பாற்றலுக்கு மனக்கோளாறு மட்டுமே காரணமாக இருக்க முடியாது. கவிஞனின் மன ஆரோக்கியத்தை அவனது படைப்பைத் திட்டமிட்டு நிறைவேற்றி வெளிக்கொணருவதில் காணமுடியும். கலைஞனின் படைப்பு அவனது மனக்கோணலை நிமிர்த்தும் மருந்தாகவும் பயன்படலாம் என்பதை எர்னஸ்ட் கிரிஸ் (Ernst Kris) குறிப்பிட்டார். அவன் மனநலத்தை அடையச் செய்யும் முயற்சியின் வெளிப்பாடாகக் கலை அமையலாம்; நோய் தீர்க்கும் மருந்தாகலாம் என்பது அவர் கருத்து.

கலையென்பது அடிமன உந்துதல்களிலிருந்து தோற்றம் பெறுவதால் உளவியலாரின் ஆய்வுக்கு அது உட்பட்டதே என்பதை யுங் ஏற்றுக் கொண்டார். ஆனால் உளவியல் நிபுணர்கள் கலையின் பிறப்புப் பற்றிப் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும் அதன் அடிப்படைத் தன்மை பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்குத் தகுதியும் உரிமையும் இல்லையென்றும் அவர் கூறினார். கலைப்படைப்பு என்பது ஒரு தொல்படிமத்தின் (archetypal image) உந்துதலிலும் அது இறுதியில் ஓர் இலக்கியமாக உருப்பெறுவதிலுமே அமைகிறது என்றார். ஆட்லர் (Adler) என்பார் ஃபிராய்டைப் போலவே, கலையாற்றலின் மூலம் மனநோய் என்று கருதினும், ஒவ்வொரு மனக்கோணலும் தாழ்வு நிலையிலிருந்து விடுபட்டு உயர்வுபெறச் செய்யப்படும் முயற்சியென்றும் இது அடிமனத்தில் தேங்கிக் கிடக்கும் கற்பனையென்றும் இலக்கிய ஆசிரியனை இலக்கியம் படைக்கத் தூண்டுவது இதுவேயென்றும் கூறினார். கனவிற்கும் கலைப்படைப்பிற்கும் உள்ள வேற்றுமைகளைக் கென்னித் பர்க் (Kenneth Burke) தெளிவாக்கினார். கனவு கட்டாய, அப்பட்டமான, வெளிப்பாடு ஆகும்; கலையோ முறையான, சீரான தெரிவிப்பாகும். கனவு நிகழ்ச்சிகளெல்லாம் கனவு காண்போனின் உணர்வு அடிப்படையில் எழுவன. அந்நிகழ்ச்சிகள் அவன் உணர்வுக்குக் காரணமாவதில்லை. நிகழ்ச்சிகளைக் கொண்டு உணர்வைக் கண்டறிய முயல்வது கடினமாகும். கலை மனிதனிடம் இயற்கையாகவுள்ள சில பாராட்டும் ஆற்றல்களை (Potentialities of Appreciation) பயன்படுத்திக் கொள்கிறது. ஒற்றுமை, வேற்றுமை, சீரமைப்பு, திரும்பச் சொல்லுதல், ரகசியத்தை வெளிப்படுத்துதல், நேர்மாறாக மாற்றல், சுருக்குதல், விரித்தல், மிகைப்படுத்தல், நிரல்படக்கூறல், விந்தை உணர்வைப் படிப்படியாகக் கிளப்புதல் ஆகியவை மனித மனம் கொண்டுள்ள இயற்கையான ஈடுபாடுகள். இவையெல்லாமே ஒற்றுமை, வேற்றுமை (Unity and Diversity) என்ற இருபெரும் பிரிவினுள் அடங்கும். கலைஞனை மனநோயாளியோடு முழுமையாக ஒருமைப்படுத்துவதும் தவறாகும். கலைஞனிடம் உலகுக்குச் சொல்லவேண்டிய செய்தியொன்று ஒன்று இருக்கிறது. அவனது வாசகர்களைக் கவரவேண்டிய ஆர்வம் அவனிடம் உள்ளது. அவனது ஆரம்ப உணர்வுகள் கலையாக மாறும்போது சில மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.



கருத்துகள் திறனாய்வின் மிகப்பெரிய வளர்ச்சிக்குத் துணை செய்தன. ஈடிபஸ் கோட்பாடு, லிபிடோ (Libido) கோட்பாடு, காஸ்ட்ரேசன் (Castration) கோட்பாடு போன்றவையும் வாயரிசம் (Voyeurism), நெக்ரோ ஃபிலியா நார்சிசிசம் (Narcissism), சாடோமசோகிஸ்டிக் விருப்பங்கள், இன்செஸ்ட் (Incest), இறப்பில் விருப்பு (Death-wish), கருப்பைக்குத் திரும்பல் (Return to the Womb) போன்ற கருத்துகளும் இலக்கியத் திறனாய்வாளர்களால் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. 1919இல் ஆல்பர்ட் மார்டல் (Albert Mardell) என்பவர் The Erotic Motive in Literature என்ற நூலின் மூலம் உளவியல் திறனாய்விற்கு அடிக்கல் நாட்டினார். உளவியல் திறனாய்வு தொடக்க காலத்தில் பழித்தும் இழித்தும் பேசப்பட்டது. அதன் எதிரிகள் அதில் பல குறைபாடுகளைக் கண்டனர். நல்ல நூல்களைத் தெரிந்தெடுப்பதற்கான அளவுகோல் ஒன்றையும் அது தரவில்லை; ஓர் இலக்கியத்தின் மொழியையும் நடையையும் புறக்கணித்து ஆசிரியனின் அடிமன ஆசைகளின் வெளிப்பாடாக மட்டுமே அதனைப் பார்க்கிறது; பாலுணர்வை அடிப்படையாகக் கொண்டே அது எல்லாவற்றையும் விளக்க முயல்கிறது; அதிர்ச்சியளிக்கும் சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்துகிறது என்றெல்லாம் வாதிட்டனர்.


உளவியல் திறனாய்வாளர்களுள் சிலர் தங்களுக்கான வரம்பினைக் கடந்து தவறுகள் செய்திருக்கலாம். ஆனால் உளவியல் திறனாய்வால் தீமையே என்ற வாதம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. ஒவ்வொரு பேரிலக்கியமும் பல முகப்புகள் கொண்ட வைரமாகும். கதைக்கரு, பாத்திரப்படைப்பு, சூழல், மொழிநடை, காட்சியுருக்கள், படிமங்கள், ஆசிரியனின் நோக்கம், சமுதாயப்படப்பிடிப்பு ஆகிய பல கூறுகளும், ஆராயப்பட வேண்டியவையே.

உளவியல் நாவல் (The psychological novel) தோன்றி வளர, ஃபிராய்டின் கருத்துகள் காரணமாயின. பாத்திரங்களின் எண்ண அலைகளை இந்நாவல் பதிவு செய்கிறது. ஜேம்ஸ் ஜாய்ஸ், ஃபாக்னர், தாமஸ் மன், ஷெர்வுட் ஆண்டர்சன், கேதரின் மென்ஸ்ஃபீல்டு, கிரஹாம்கிரீன் ஆகியோரின் படைப்புகள் இதற்குத் தலைசிறந்த எடுத்துகாட்டுகளாம். கனவுகளை உண்மை நிகழ்ச்சிகள்போல் புறவயமாக வெளிப்படுத்துவதில் கஃப்கா (Kafka) பெரும் வெற்றி கண்டார். ஆந்த்ரேபிரெதோன் (Andre Breton) தொடங்கிய சர்ரியலிஸ்ட் இயக்கம் ஃபிராய்டிற்குப் பெரிதும் கடன் பட்டுள்ளது. டிலன்தாமஸின் கவிதைகளிலும் ஹென்ரிமில்லர், வில்லியம் பரோஸ் (William Burroughts) ஆகியோரின் நாவல்களிலும் இதன் தாக்கத்தைக் காணலாம். உளவியல்

இவற்றுள் சிலவற்றையேனும் தெளிவுபடுத்த உளவியல் அணுகுமுறை தேவையாகும். யுங்கின் தொன்மம் பற்றிய கருத்துகளும் அடிமன கோட்பாடும் தொன்மனத் திறனாய்வு என்ற துறையின் வளர்ச்சிக்கு அடிகோலின. ஜோஸப் கேம்ப்பெல் என்பார் தமது ஆயிரம் முகங்கள் கொண்ட வீரன் (The Hero with a Thousand Faces) என்ற அரிய நூலில் பல நாட்டுத் தொன்மைங்களையும் ஆராய்ந்து, கடவுளர்களின் ஆற்றல்மிகு செயல்களையும் வீரர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் வருணிக்கின்ற இப்பழம் கதைகள் எல்லாம் உண்மையிலேயே பல்வேறு இன மக்களின் அந்தரங்க ஆசைகளையும் அச்சங்களையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்துகின்றன என்பதைச் சான்றுகள் மூலம் நிறுவினார். தொன்மங்களின் மூலம் மனித மனத்தின் ஆழத்தையும் சிறப்பையும் உணரமுடியும்.

யுங் தனது தொன்மம் பற்றிய கட்டுரைகளிலேயே மனிதன் வாழ்க்கையில் ஆன்மிகப் பொருள் காணவேண்டுமென்ற ஆசை கொண்டவனாக இருக்கின்றான் என்ற கருத்தை விளக்கினார். பகுத்தறிவுக் கெட்டாத உண்மைகளைக் காணக் கவிஞர்களால் முடியுமென்றார். அடிமனத்தையும் இயற்கை இகந்த ஆற்றலையும் ஒன்றிணைப்பதில் தொன்மத்திற்குப் பெரும் பங்குண்டு என்பதையும் சுட்டிக்காட்டினார். முதிர்ந்த ஞானி, நிழல், அனிமா, அனிமஸ், குழந்தை, கன்னியும் தாயும் போன்ற தொல் படிமங்களெல்லாம் இலக்கியங்களில் மீண்டும் மீண்டும் இடம்பெறுவதை அறிவுறுத்தினார். இவற்றைத் தவிர வேறு தொல்படிமங்களையும் தொன்மத்திறனாய்வாளர்கள் இலக்கியங்களில் காண்கின் றார்கள். வேறு திறனாய்வு அணுகுமுறைகளால் விளக்க முடியாத சில சிறப்புக் கூறுகளைத் தென்மத்திறனாய்வால் விளக்க முடிந்தது. அறிவியல்துறை என்ற முறையிலும் மருத்துவத் துறையின் ஒரு பகுதி என்ற முறையிலும் உளவியலின் வெற்றி ஐயத்திற்குரியது என்பர். ஆனால் அது படைப்பிலக்கியத்திற்கும் திறனாய்வுக்கும் செய்துள்ள பணி சிறப்புடையது. இலக்கியத்திற்கும் உளவியலுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை ஃபிராய்டின் கூற்றே விளக்கும்; அவர் ஒரு முறை கூறினார் : ''அடிமனத்தைக் கண்டுபிடித்தவர்கள் கவிஞர்களே; நான் என்று கூறுவது தவறு''.

பேரறிஞர் ஃபிராய்டு (1856-1939) தற்கால உளவியலுக்குத் தமது பங்களிப்பாகத் தந்தவை அவரது உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளாகும். பலவிதமான நோயாளிகளைப் பரிசோதித்து மனித மனத்தின் உணர்தற்கு அரிய கூறுகள் பற்றித் தமது முடிவுகளை நூல்கள் மூலமும் கட்டுரைகள் வழியும் தெளிவாக எடுத்துரைத்த பெருமை அவரைச்சாரும். அடிமனம், ஆழ்மனம், நனவிலிமனம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற 'Unconscious' எத்தன்மையானது. அது எவ்வாறு செயல்படுகிறது என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் முயற்சியே அவரது ஆராய்ச்சி. அவர், மனித மனம் உறைந்த பனித்தீவு (Iceberg) போன்ற அமைப்புடையதென்றும் அதன் பெரும்பகுதி நீருள் அமிழ்ந்து சிறு பகுதியே, நீருக்கு வெளியே தெரிவது போன்று மனத்தின் பெரும்பகுதி உணர்வு நிலைக்குக் கீழும் சிறுபகுதியே உணர்வு நிலைக்கு உட்படும் அமைந்திருப்பதாகவும் விளக்கினார். மனித உள்ளத்தின் செயற்பாடுகளை உணர்வு வட்டத்திற்குள் வருபவை, உணர்வு வட்டத்திற்கு அப்பாற்பட்டவை என்று பாகுபடுத்தலாம். எந்த உள்ளத்து நடவடிக்கையை நாம் நேரடியாக உணரமுடியாமல் அது கட்டாயம் நடந்திருக்க வேண்டுமென்று அனுமானிக்க வேண்டியிருக்கிறதோ அதுவே "Unconscious' என்பது. அந்நடவடிக்கையின் விளைவுகளிலிருந்து அதனை நாம் தீர்மானிக்க வேண்டியிருக்கும். இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால் நாம் 'Unconscious' என்று குறிப்பிடுவது ஒரு சமயத்தில் செயல்பட்டது என்று நம்மால் ஊகிக்கப்பட்டு, ஆனால் அச்சமயத்தில் அதனைப் பற்றி நாம் ஏதும் அறியாதிருந்த ஒன்றே என்று கூறவேண்டும்.



நாம் நன்றாக உணர்கின்ற உள்ளத்து நடவடிக்கைகள் கூட ஒரு குறிப்பிட்ட, குறைந்த அளவுநேரத்திற்கே நம்மால் உணரப்படும்; வெகுவிரைவில் அவை அடிமனத்துள் புதைந்துவிடலாம்; பின் மீண்டும் நம் உணர்வு வட்டத்திற்குள் வந்தாலும் வரலாம். எனவே, அடிமனத்தை இரண்டு வகைகளாய் வரையறை செய்யலாம். ஒன்று, உணர்வு வட்டத்திற்குள் எளிதாகக் கொண்டுவரக்கூடிய உள்ளத்து நடவடிக்கை, மற்றது, அவ்வாறு இல்லாமல், நம் ஆற்றலையெல்லாம் செலவளித்தால் மட்டுமே வெளிக்கொணர முடிந்த நடவடிக்கை. பின்னதற்கு 'Unconscious' என்ற பெயரை வைத்துக்கொண்டு முன்னதை 'Preconscious' என்று அழைக்கலாம்.

ஒரு மனிதனின் உள்ள நடவடிக்கைகளுள் பெரும்பாலானவை அடி மனத்தவை என்பது ஃபிராய்டின் முக்கியமான, முதலாவது கோட்பாடாகும். மனிதனுடைய நடத்தை முற்றிலும் இணை விழைச்சை, பாலுணர்வை (Sexuality), அடிப்படையாகக் கொண்டு அதனால் உந்தப்படுவது என்பது அவரின் இரண்டாவது கருத்தாகும். இதனை யுங் (Jung), ஆட்லர் (Adler) போன்ற பல உளவியல் விற்பன்னர்களே ஏற்றுக்கொள்ளவில்லை. முதலாவதான உள்ள ஆற்றலை அது பாலுணர்வோடு கொண்ட நெருக்கமான தொடர்பு காரணமாக லிபிடோ (Libido) அல்லது இணைவிழைச்சு (Sexual Energy) என்றே ஃபிராய்டு அழைத்தார். சில பாலுறவு நாட்டங்களுக்கு எதிரான சமுதாயத்தடைகள், கட்டுப்பாடுகள் (Taboos) காரணமாக, நாம் நமது ஆசைகளையும் நினைவுகளையும் ஒடுக்கிவிடுகிறோம் என்பது அவரின் மூன்றாவது கோட்பாடாகும்.


இம்மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் பெற்ற முடிவுகள் பல. அவற்றுள் முதலாவது அவர் மனித மனத்தை இத் (Id), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Superego) என்ற மூன்று வட்டங்களாகப் பிரித்தமையாகும். விழைவு உந்தல்கள் (Instinctive impulses, drives) சார்ந்த வட்டத்தை 'இத்' என்றும் உணர்வுக்கு உட்பட்டு, நடத்தையை உடனடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு வெளியுலகோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் பகுதியை 'ஈகோ' என்றும் பெற்றோரிடமிருந்து குழந்தை பெறும் சமுதாய விதைகளைக் கணக்கில் கொண்டு வளரும் பகுதியை 'சூப்பர் ஈகோ' என்றும் குறிப்பிட்டு அவைகளுக்குள்ள தொடர்பை விளக்கினார்.

'இத்' முழுமையும் நனவிலி மனமாகும்; 'ஈகோ', 'சூப்பர் ஈகோ' ஆகியவற்றிலும் ஒரு சிறு பகுதி மட்டுமே நனவு மனமாகும். இத், உள்ள ஆற்றலுக்கெல்லாம் மூலமான லிபிடோவின் சேமிப்புக்கிடங்கு ஆகும். அது ஆதி வாழ்க்கை நெறியான இன்ப நெறியைப் (Pleasure Principle) பூர்த்தி செய்யவே செயல்படுகிறது. அது உணர்வில்லாமல், காரண காரிய ஒழுங்கின்றி, ஒரு வியக்கத்தக்க அசுர சக்தியுடன் இயங்குகிறது. அதனை ஒழுங்கின்மையை மொத்த உருவமென்றும் தீயில்காய்கின்ற ஒரு பெரிய கொப்பரை என்றும் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன் மூர்க்கத்தனமாகச் செயல்படும் உந்துதல் என்றும் ஃபிராய்டு வருணிப்பார். அது நமது ஆளுமையின் இருண்ட, புரிந்து கொள்ள முடியாத நெருங்கமுடியாத ஒரு பகுதியாகும். தத்துவவிதிகளுக்கு அப்பாற்பட்டு, அதனால் ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய உந்துதல்களையும் ஒருங்கே உள்ளடக்கி இருக்க முடியும். அதற்கு நீதி, நேர்மை, நன்மை, தீமை, மதிப்பு, மரியாதை ஆகியவை பற்றி ஒன்றும் தெரியாது. சமுதாய மரபுகளுக்கும் நியமனங்களுக்கும் கட்டுப்படாமல் சட்டம், ஒழுங்கு, நேர்மை ஆகியவற்றைப் புறக்கணித்து இன்ப நெறியால் மட்டும் இயக்கப்பட்டுச் செயல்படும் தன்மை உடையது 'இத்'. அதை ஒருவன் கட்டுக்குள் வைக்கவில்லையானால் அது வரம்பற்ற முறையில் தன்னிச்சையாகச் செயல்பட்டு அழிவைத் தேடிக்கொள்ளவும் தயங்காது. அது இன்ப நாட்டத்தில் விளைவுகள் பற்றிக் கவலை கொள்ளாது திளைக்கும் தன்மையது. இத்தகைய ஆற்றல் ஒன்று மனிதனை ஆட்டிப்படைப்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே அறிஞர்கள் அறிந்திருந்தனர். ஆனால் அது மனித இயற்கையின் ஓர் உட்கூறு என்பதை உணராமல் மனிதனுக்கு வெளியிலிருந்து அவனை ஆளுகின்ற இயற்கை இகந்த சக்தியாகக் கருதினர். சமயவாதிகள் பேயென்றும் சாத்தானென்றும் கடவுளுக்கெதிரான தீயசக்தியின் திருவிளையாடல் என்றும் எண்ணினர். உள்மன உந்துதல்களுக்கேற்ப ஒழுகும் தன்மையைக் குழந்தை களிடத்தும் மனக்கோளாறுடைய பெரியோர்களிடத்தும் காணலாம்.

'இத்' ஓர் அபாயகரமான சக்தி என்பதால் தனிமனிதனை மனித மனத்தின் வேறுகூறுகள் காக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. தனி மனிதனின் செயல்களை நெறிப்படுத்தி அவனைக் காக்கும் கர்த்தாக்களில் 'ஈகோ' தலையானதாகும். 'இத்' பெற்றிருக்கின்ற ஆற்றலும் வீரியமும் ஈகோவிற்கு இல்லையென்றாலும் இயல்பூக்க உந்துதல்களை நெறிப்படுத்தி அழிவுப்பாதையிலிருந்து நீங்கிய செயல்களில் ஈடுபடுமாறு முன்னதற்கு வழிகாட்டுவது ஈகோவாகும். ஈகோவின் பெரும்பகுதி நனவிலி மனத்தைச் சார்ந்ததாயினும் அது நாம் அறிமனம் (Conscious Mind) என்று நினைப்பதைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பாமரர் மொழியில் சொல்லுவதானால் பகுத்தறிவு, எச்சரிக்கை, விழிப்பு ஆகியனவற்றை 'ஈகோ' கட்டுமானால் கட்டுக்கடங்காத உணர்வுகளை 'இத்' சுட்டுமென்று விளக்கம் அளிப்பார் ஃபிராய்டு. 'இத்' முழுக்க முழுக்க இன்ப நெறியால் (Pleasure Principle) இயக்கப்படுகிறது. அகவுலகிற்கும் புறவுலகிற்கும் இடைத்தரகனாக ஈகோ வினையாற்றுகின்றதென்று சொல்வது பொருந்தும். சமுதாயத்தைக் காக்கும் தலையாய நோக்குடன் செயல்படும் இன்னொரு கர்த்தா சூப்பர் ஈகோ. இது நீதி உணர்த்தும் ஆசானாகவும் மனச்சாட்சி, பெருமித உணர்வு ஆகியவற்றின் தங்குமிடமாகவும் அமைகிறது. சமுதாயம் நல்லவை, உயர்ந்தவை என்று கருதுவனவற்றைப் புரிந்து கொள்ள உதவுகிறது. நேரடியாகவோ, அல்லது ஈகோவின் மூலமாகவோ செயல்படும் சூப்பர் ஈகோ, 'இத்'தின் உந்துதுல்களை ஒடுக்குகிறது, சமுதாயம் நல்ல செயல் என்று எண்ணுவதற்குப் பாராட்டும் தீயதென்று கருதுவதற்குத் தண்டனையும் அளிக்கும் பெற்றோர்களின் தாக்கமே சூப்பர் ஈகோவின் வளர்ச்சிக்குக் காரணமாகும். அளவுக்கு மீறிய செயல்பாடு கொண்ட சூப்பர் ஈகோ இனம்புரியாத குற்றவுணர்வை (Guilt Complex) உண்டாக்கும். 'இத்' இன்பநெறியின் ஆளுகையிலும் ஈகோ யதார்த்த நெறியின்

(Reality Principle) ஆளுகையிலும் சூப்பர் ஈகோ நீதி நெறியின் (Morality Principle) ஆளுகையிலும் இயங்குகின்றன. நம்மை 'இத்' அசுரர்களாகவும், சூப்பர் ஈகோ தேவர்களாகவும் ஆக்க முயலும் போது, இவ்விரண்டு முரண்பட்ட ஆற்றல்களையும் சமன்செய்து நல்ல மனிதர்களாக ஆரோக்கியமான உள்ளம் கொண்டவர்களாக, நம்மை வைத்திருப்பது ஈகோவாகும். இந்த நடுநிலையைத்தான் ஃப்ராய்டு வலியுறுத்தினார்; அடிமனம் போனபோக்கெல்லாம் கட்டுப்பாடின்றி அலைந்து திரியவேண்டுமென்று அவர் சொல்லவில்லை.

ஃப்ராய்டின் குழந்தை பற்றிய உளவியல் கோட்பாடுகள் முன்கூறப்பட்டவையினும் அதிக சர்ச்சைக்குரியவை. நாம்



காலம்காலமாகக் கொண்டிருந்த நம்பிக்கையை மறுத்து, அவர் இளங்குழந்தைப் பருவத்திலேயே பாலுணர்வு அனுபவம் தொடங்கிவிடுகிறதென்று தெரிவித்தார். முதல் ஐந்தாண்டுக் கால வாழ்க்கையிலேயே குழந்தை பாலுணர்வு வளர்ச்சியில் ஒரு சில படி நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு படி நிலையிலும் உடலின் ஒரு பகுதியில் பாலுணர்வு இன்பம் மையம் கொள்கிறது. இத்தகைய உடற்பகுதிகளாக மூன்றை அவர் குறிப்பிடுவார். வாய் (the oral), இடையின் பின்புறம் (the anal), இடையின் முன்புறம் (the genital) ஆகிய மூன்று இடங்களும் பாலுணர்வு இன்பம் நல்குவதோடு அமையாது நமது அடிப்படைத் தேவைகளான உண்டல், உண்டதை வெளியேற்றல், இனவிருத்தி செய்தல் ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கொள்ளக் கருவிகளாகவும் அமைகின்றன. குழந்தை நிலையில் இவ்வின்பங்களைத் துய்ப்பதில் பின்னடைவும் பெருத்த ஏமாற்றமும் ஏதேனும் ஒரு காரணம் பற்றி ஏற்படுமானால், அக்குழந்தை வளர்ந்து மனிதனாகும் போது அவனது ஆளுமை நிரந்தரமாகப் பாதிக்கப்படும். ஆரோக்கியமான மனவளர்ச்சி தடைப்பட்டு ஏதேனும் ஒரு வக்கிர உணர்வு வலிமை பெற்று அளவுக்கதிகமான இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது. மிக இளம் பருவத்திலேயே தாய்ப்பால் பெறாத குழந்தை Oral Fixation காரணமாக, மீளமுடியாத புகைப் பழக்கத்திற்கு ஆளாகலாம்; குழந்தையாக இருந்தபோது மலம் கழிப்பதில் அதிகமான கட்டுப்பாட்டுக் குட்படுத்தப் பட்டிருந்தால் Anal Fixation காரணமாக, சிறியனவற்றை யெல்லாம் பெரிதுபடுத்தி மனவுளைச்சல் பெறும் (Fastidious) மனிதனாகப் பெரும் வாய்ப்புண்டு. ஆரோக்கியமான மனநிலை கொண்ட மனிதர்களும் கூட, பாலுணர்வுத் தூண்டுதலால் விளைந்த வக்கிர எண்ணங்களை உயரிய முறையில் மடைமாற்றம் (Sublimation) செய்துகொள்ள முடிந்தவர்களே.

ஃப்ராய்டின் வழிவந்த லகானின் உளப்பகுப்பாய்விலும் ஈடிபஸ் கோட்டத்திற்கு இன்றியமையாத இடம் ஒன்று உண்டு. இதனையும் ஃப்ராய்டின் ஏனைய கோட்பாடுகளையும் உளப்பகுப்பாய்வுத் திறனாய்வாளர்கள் தமது இலக்கிய ஆய்வுகளில் பலவாறு பயன்படுத்திக் கொண்டு குறிப்பிடத்தக்க சில வெற்றிகளையும் பெற்றனர்.

– ''மேலை நோக்கில் தமிழ்க் கவிதை'' நூலிலிருந்து.
வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்


★ ★ ★

# தமிழகத்திலுள்ள பொதுநூலகங்களின் வளர்ச்சி

மாண்புமிகு கல்வியமைச்சர்
டாக்டர் **மு. தம்பிதுரை**

தமிழகத்தில் மொத்தம் 2884 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுக்கான நூல்கள், குழந்தைகள் நூல்கள், பாட நூல்கள், பொது நூல்கள், குறிப்புதவும் நூல்கள், இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்கள், கணிப்பொறி மற்றும் மருத்துவம் போன்ற பலதுறை சார்ந்த நூல்கள் ஆண்டுதோறும் அரசு வங்கி நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பொது நூலகங்கள் இல்லாத பஞ்சாயத்து இடங்களில் படிப்படியாக பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பொது நூலகங்கள் ஏற்படுத்தும் செயல்திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. புதிதாக நூலகம் துவங்க வேண்டுமெனில் நூலக இயக்கத்தில் ஆர்வமுள்ளவர்கள் நூலக கட்டிடம் மற்றும் காலிமனை நன்கொடையாக வழங்கலாம். மேலும் பொது நூலகங்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் (மேசை, நாற்காலி, நூலடுக்குகள், பெஞ்சு போன்றவை) நன்கொடையாக வழங்க பொதுமக்கள் முன்வரலாம்.

பொது நூலகத்துறையில் உறுப்பினர்கள், புரவலர்களாக சேரும் நல்ல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. அதேசமயம் பொது நூலகங்களில் வாசகர் வட்டம் அமைத்து அதுவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அனைவரும் பொது நூலகங்களில் தங்களை உறுப்பினர்களாகவும், புரவலர்களாகவும், வாசகர் வட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும் முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



பொதுமக்கள் தாங்கள் பயன்படுத்திய நூல்கள் மற்றவர்கள் பயன்பெறும் வகையில், அவற்றை அருகிலுள்ள பொது நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கி மக்கள் அனைவருக்கும் பயன்படுத்தப்படச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வேண்டுகோளை ஏற்று, பொதுமக்களும், வர்த்தக நிறுவனங்களும், தொழிலமைப்புகளும் பொது நூலக இயக்க வளர்ச்சியில் தங்களை ஈடுபடுத்த முன்வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் விவரங்கள் அறிய "பொது நூலக இயக்குநர், 737, அண்ணாசாலை, சென்னை-600 002" என்ற முகவரியிலும், மாவட்டங்களில், மாவட்ட தலைநகரங்களில் உள்ள சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக அலுவலரையும் தொடர்பு கொள்ளலாம் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். ★

# ஆதிதிராவிடர் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு 75% மானியத்தில் விவசாயக் கருவிகள் வழங்குதல்

தமிழ்நாட்டில் இதுவரை சிறப்பு மைய உதவித் திட்டத்தின் கீழ் தனிநபர் ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஆனால் இவ்வாண்டு முதல் தனிநபர்களுக்குப் பதிலாக குழுக்கள் பயன்பெறும் வண்ணம் திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு கருதியுள்ளது.



தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் விவசாயத்தில் மகளிர் (TANWA) திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட 1400 சுய உதவிக் குழுக்களில் 200 முதல் 250 குழுக்கள் முழுவதும் ஆதிதிராவிடர் மகளிரால் ஆனதாகும். இக்குழுக்களில் விவசாய நிலங்கள் உள்ள ஆதிதிராவிடர்கள் உள்ளனர். சுய உதவிக்குழு திட்டத்தினை ஊக்கப்படுத்தவும் இக்குழுக்களின் வருமானத்தை நிலைப்படுத்தவும் முழுவதும் ஆதிதிராவிடர் மகளிர் இடம்பெற்றுள்ள இக்குழுக்களுக்கு 75% மானியத்தில் விசை இயந்திரம், இழுவை, கலப்பை மற்றும் விவசாய துணைக் கருவிகள் மற்றும் தெளிப்பான்கள் வழங்க இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஒரு குழுவிற்கு 75% மானியத்தில் விசை இயந்திரம் வாங்க உத்தேசமாக ரூ.67,500 இழுவை வாங்க ரூ.15,000, கலப்பை மற்றும் துணைக் கருவிகள் வாங்க ரூ.3,750, விசை தெளிப்பான் வாங்க ரூ.3,375 மற்றும் கைத்தெளிப்பான் வாங்க ரூ.750 ஆக மொத்தம் ஒரு குழுவிற்கு உத்தேசமாக ரூ.90,375 மானியம் வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. மீதி 25% தொகையினை குழுக்கள் தாங்களாகவே செலுத்த வேண்டும் அல்லது தாங்களாகவே வங்கிகள் மூலம் பெறவேண்டும். இவ்வாண்டில் 200 ஆதிதிராவிட மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு, ஒரு குழுவிற்கு உத்தேசமாக ரூ.90,375 வீதம் மொத்தம் ரூ.180.75 இலட்சம் மானியம் வழங்கப்படும். வேளாண்மைத்துறை ஆணையர் இத்திட்டத்தினை செயல்படுத்துவார்.

இத்திட்டத்தினால் ஆதிதிராவிட விவசாய மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விவசாய கருவிகளை விதை விதைப்பிலிருந்து அறுவடை வரை பயன்படுத்தலாம். அருகாமையில் உள்ள பிற ஆதிதிராவிட விவசாயிகளுக்கும் வாடகைக்கு விட்டு கூடுதல் வருவாயும் ஈட்டலாம். இதனால் ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் திறன் மேம்பாடடையும்.★

# அமைச்சர் ஆய்வு

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் தொழில் வணிகத்துறையின் கீழ் இயங்கும் டாக்டர் விக்ரம் சாரபாய் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை மற்றும் வடநெமிலியிலுள்ள இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கம் ஆகிய நிறுவனங் களுக்கு சென்று 8.11.2001 அன்று ஆய்வு செய்தார்.

டாக்டர் விக்ரம் சாரபாய் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டையிலுள்ள ஒரு எலக்ட்ரானிக் சிறுதொழில் நிறுவனத்திற்கும் பெருங்குடியிலுள்ள மேம்படுத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டையில் மற்றுமொரு சிறுதொழில் நிறுவனத்திற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று ஆய்வு செய்து அங்கே உற்பத்தியாகின்ற எலக்ட்ரானிக் பொருட்களைப் பற்றிக் கேட்டறிந்தார்.

அப்போது சிறுதொழில் நிறுவன அதிபர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து மேற்கண்ட தொழிற்பேட்டைகளில் சாலை வசதி,தண்ணீர் வசதி, மின்வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய அலுவலர்களுடன் கலந்து ஆய்வு செய்து தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு தக்க பரிசீலனை செய்வதாக தெரிவித்தார்கள்.

அடையாறிலுள்ள விக்ரம் சாரபாய் தொழிற்பேட்டையிலுள்ள தகவல் மையத்தை (Data Bank) பார்வையிட்டு இம்மையம் தொழில்முனைவோர்களுக்கு எவ்வாறு உதவிபுரிகின்றது என்பதை கேட்டறிந்து அதனை மேம்படுத்தும்படி அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

அதன்பிறகு நெமிலியிலுள்ள இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்குச் சென்று அதன் பணிகளைப் பார்வையிட்டார்கள். இருளர்கள் கொடிய நச்சுப்பாம்புகளிடமிருந்து நஞ்சு எவ்வாறு எடுக்கப்படுகிறது என்பதனை நேரடியாக செய்து காட்டினார்கள். எடுக்கப்படும் நஞ்சு எவ்வாறு பதப்படுத்தப்பட்டு மருந்துப் பொருளாக ஆக்கப்படுகிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்தனர். இதன்மூலம் சுமார் 300 இருளர் குடும்பங்கள் பிழைத்து வருவதாகவும் அவர்களுக்கு இச்சங்கத்தின் வழியாக கணிசமான வருமானம் கிடைப்பதாகவும் தெரிவித்தார்கள். மேலும் சங்கத்திற்கு ஒரு வாகனம் (Jeep) வாங்குவதற்கு அரசு நிதி உதவிசெய்ய வேண்டும் என்றும் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டனர். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலிப்பதாக கூறினார்கள்.

இந்த ஆய்வின்போது தொழில்வணிகத்துறை கூடுதல் ஆணையர் திரு. ஆ.சு. ஜீவரத்தினம் இ.ஆ.ப., மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் உடன் சென்றிருந்தனர். •

# சிட்கோ தொழிற்பேட்டையில் அமைச்சர் ஆய்வு


சென்னைக்கருகிலுள்ள சிட்கோ நிறுவனத்தின் அம்பத்தூர் தொழிற்பேட்டையை 10.11.2001 அன்று மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் பார்வையிட்டார். சிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், பொது மேலாளர் மற்றும் சிட்கோ அலுவலர்கள் திட்ட அலுவலகத்தில் அமைச்சரை வரவேற்று சிறுதொழில் நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து எடுத்துக் கூறினர். அம்பத்தூர் தொழிற்பேட்டை தொழிலதிபர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் அமைச்சரை சந்தித்து தொழிற்பேட்டை பராமரிப்புப் பணிகள் குறித்து தெரிவித்தனர். சிட்கோ நிறுவனத்துடன் அம்பத்தூர் நகராட்சியும் இணைந்து பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யும்படி சங்க நிர்வாகிகள் அமைச்சரைக் கேட்டுக் கொண்டனர். தொழிற்பேட்டையில் பயன்படுத்தப்படாமல் உள்ள காலி மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் குறித்த விவரங்களை அமைச்சர் கேட்டறிந்தார். சிட்கோவின் பராமரிப்புப் பணிகள் குறித்தும் அரசின் பரிசீலனையில் உள்ள மேம்பாட்டு முன் மொழிவுகள் குறித்தும் மேலாண்மை இயக்குநர் எடுத்துரைத்தார். திட்ட அலுவலக வளாகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தையும், மருத்துவ மையத்தையும் அமைச்சர் பார்வையிட்டு அவற்றின் செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுடன் தொழிற்பேட்டையில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். தொழிற்பேட்டையில் உள்ள இரண்டு சிறுதொழில் வளாகங்களில் ஆடைகள் தயாரிக்கும் பணியை அமைச்சர் பார்வையிட்டார். அம்பத்தூர் தொழில்நுட்ப மையத்தைப் பார்வையிட்டு அதன் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். தொழிற்பேட்டையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி அமைச்சர் அறிவுறுத்தினார். சிறுதொழில் வளர்ச்சிக்கென அரசு அறிவித்துள்ள புதிய தொழிற்பேட்டை குறித்தும் தொழில் முனைவோர் கோரிக்கைகள் குறித்தும் அமைச்சர் விசாரித்தறிந்தார். •

# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் கோப்புகள் கணினிமயம்


தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மகளிர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக சிறந்த சேவை ஆற்றி வருகிறது. அதன் சேவைக்கு முத்தாய்ப்பு வைக்கும் வகையில் அன்றாட அலுவலக பணிகள் அனைத்தும் கணினி இணையம் (Computer Network) மூலம் செயல்படத் தொடங்கியுள்ளது. அவ்வலுவலகத்தில் வரும் கடிதங்கள் அனைத்தும் பெறப்பட்டவுடன் "totenham" முறைப்படி கணினியில் இலக்கமிட்டு கணினியிலும், கடிதமாகவும் உரிய பிரிவு கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுகிறது. பிரிவு கண்காணிப்பாளர் கடிதத்தை பார்வையிட்டு அந்த கடிதங்களைக் கணினி மூலமும் கடிதமாகவும் தொடர்புள்ள பிரிவு உதவியாளர்களுக்கு அனுப்புகிறார். பிரிவு உதவியாளர்கள் கணினி மூலமாகவே காகிதத்தில் பெறப்பட்ட கடிதத்தை கவனமாக பரிசீலனை செய்து அதன் விபரத்தையும் அதன்மேல் எடுக்கப்படும் நடவடிக்கையையும் தனது குறிப்புடன் கணினி மூலமாக பிரிவு கண்காணிப்பாளருக்கு அனுப்புகிறார்கள். பிரிவு கண்காணிப்பாளர் கடிதத்தில் கூறப்பட்ட விவரங்களையும் அதன் மேல், பிரிவு உதவியாளர்கள் கூறும் கருத்துக்களையும் பரிசீலனை செய்து தனது கருத்து/பரிந்துரையுடன் கணினி மூலமாக தனது மேல் அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். உரிய அதிகாரியும் கணினி மூலமாகவே பெறப்படும் இந்த கோப்புகளில் அவரது குறிப்பு மற்றும் ஆணைகள் அதன் சம்பந்தமான கடிதங்களையும் கணினி மூலமாக ஒப்புதல் செய்து தனது நேர்முக உதவியாளரிடம் கணினி மூலமாக அனுப்புகிறார்கள். கணினி மூலம் ஒப்புதல் செய்யப்பட்ட ஆணை மற்றும் கடிதத்தை கணிப்பொறியில் அச்சு எடுத்து அலுவலரின் ஒப்பம் பெற்ற காகித கடிதம் மற்றும் ஆணையையும், கணிப்பொறியில் ஒப்புதல் செய்யப்பட்ட கோப்பு, ஆணை அனைத்தையும் கணிப்பொறி மூலமாகவே தொடர்புடைய பிரிவு உதவியாளருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. காகிதத்தில் கையொப்பமிடப்பட்ட அலுவலக நகல் தொடர்புடைய கோப்பில் சேர்க்கப் படுகிறது.

இந்த செயல்முறைகள் அனைத்தும் கணினி மூலம் பாதுகாப்பான முறையில் நாடாவில் பதிவு செய்து பாதுகாக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அலுவலக பணிகளை துரிதப்படுத்துவதுடன் கோப்புகள் தாமதம் ஏதுமின்றி, ஒளிவுமறைவின்றி மிக வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் செயல்படும் அனைத்து நடவடிக்கைகளும் குறிப்பாக ஒரு உதவியாளர் அல்லது அலுவலர் எழுதும் குறிப்பினை அவர்களாலும் வேறு எவராலும் எக்காலத்திலும் மாற்ற முடியாது. கணினி மூலமாக கோப்புகள் பராமரிக்கப்படும் இந்த விஞ்ஞான முறை, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன பணியாளர்கள் மற்றும் அலுவலர்களிடையே மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. அவர்கள் மிகவும் உற்சாகத்துடனும் முக மலர்ச்சியுடனும், பெண்கள் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு மேலும் சிறப்பாக பணியாற்ற பெறும் உதவியாயுள்ளது. இந்த செயல்பாட்டினை நடைமுறைபடுத்துவதற்கு ஏதுவான அடிப்படை இணையத்தினை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தில் இதற்கு முன் பொறுப்பிலிருந்தவர்களால் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. இந்த வேகமான, வெளிப்படையான, பாதுகாப்பான கணினி மூலமான கோப்புகள் செயல்பாடு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன வாரிய உறுப்பினர்களின் ஒப்புதலுடன் தற்போது தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தினை முனைப்புடன் செயல்படுத்தி வரும் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திருமதி.குத்சியா காந்தி, இ.ஆ.ப., மற்றும் செயல் இயக்குநர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., அவர்களால் சாத்தியமாகிறது.



தற்போது இந்த கணினி மூலமான கோப்புகள் பராமரிக்கும் செயல்பாடுகளுக்கான மென்பொருள் (Software) ஆந்திர அரசின் தொழில்நுட்ப சேவை மையத்திலிருந்து இலவசமாக பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் வழக்கமான அரசு செயல்பாடுகள் பெரிய பெரிய கோப்பு கட்டுகளாக அலுவலர்களின் மேசைக்கு நகர்த்துவது வெகுவாக குறைக்கப்படுவதுடன், கோப்புகளின் விவரங்கள் அனைத்தும் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டவுடன், அனைத்தும் காகித கட்டுகளாக நகர்வது தவிர்க்கப்பட்டு முற்றிலும் காகிதம் இல்லாமல் கணினி மயமாக்கப்படும். •

# தமிழ்நாடு சுற்றுலா



மெரினா கடற்கரை

*"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" – மகாகவி பாரதியார்*

தமிழ்நாடு – தமிழர்களின் தாயகம். இங்கு பேசப்படும் மிகத் தொன்மையான மொழியைக் கொண்டே இம்மாநிலத்தின் அழகுப் பெயர் அமைந்துள்ளது.

தமிழ் – மிகப் பழமையான, மிக வளர்ச்சிப்பெற்ற இந்திய மூத்த மொழிகளில் ஒன்று. இம்மகத்தான வரலாற்றை வடிப்பதாயின் அது கணக்கில் அடங்காத காவியங்களாக விரியும்.


தனித்தன்மை வாய்ந்த இனப்பெருமை கொண்டதே இம்மண் எனினும், இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச்சோலையாக இம்மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

தமிழ்நாடு – ஆலயங்கள் நிறைந்த கலைக்கோட்டம்; இங்கே, ஆயிரக்கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தற்போது தமிழ்நாட்டில் 30 மாவட்டங்கள் உள்ளன.


**சென்னை**

வரலாற்றில் பல திருப்பங்களை சந்தித்த சென்னை, இன்று பரந்து விரிந்த பெருநகராக, தமிழ்நாட்டின் தலைநகராகத் திகழ்கின்றது. இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் : செயின்ட் ஜார்ஜ் கோட்டை. இது கிழக்கிந்தியக் கம்பெனியின் கோட்டையாக இருந்தது. தற்சமயம் தமிழ்நாடு மாநில சட்டப் பேரவையும், தலைமைச் செயலகம்


கடற்கரை கோவில், மாமல்லபுரம்

மற்றும் அரசு அலுவலகங்களும் இங்கு உள்ளன. மெரினாக் கடற்கரை உலகின் நீளமான இரண்டாவது கடற்கரை ஆகும். இங்கு பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் சமாதிகள் அமைக்கப் பட்டுள்ளன. சாந்தோம் பேராலயம் புனித தாமஸின் கல்லறையின் மீது எழுப்பப்பட்டுள்ள ஒரு கத்தோலிக்கப் பேராலயம் ஆகும். திருமதி அன்னி பெஸன்ட், ஆல்காட் மற்றும் பிளாவட்ஸ்கி இவர்களால் நிறுவப்பட்டு, அடையாறு ஆற்றங்கரையில் அமைந்துள்ள பிரம்ம ஞான சபை, அனைத்துச் சமயச் சங்கத்தின் உலகத் தலைமையகமாகும்.

அருகாமையில் அமைந்துள்ள கலாசேத்திரா, ருக்மணி அருண்டேல் அவர்களால் நிறுவப்பட்டது. இது இந்தியாவின் பாரம்பரிய நடனக் கலையான பரதம் மற்றும் பிற நடனங்கள், இசை இவற்றைப் பயிற்றுவிக்கும் கலைக்கூடம் ஆகும். தேசிய மான்கள் சரணாலயம், சிறுவர் பூங்கா மற்றும் பாம்புப் பண்ணை ஆகியவை நகரின் எல்லைக்குள் அமைந்துள்ளன. இதனருகில் தேசியத் தலைவர்களான மகாத்மா காந்தி, இராஜாஜி, காமராஜர் மற்றும் பக்தவச்சலம் ஆகியோரின் நினைவாலயங்கள் அமைந்துள்ளன. உலகப் புகழ் பெற்ற நூலான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம், திராவிடச் சிற்பக் கலையின் அழகிய உதாரணமாகத் திகழும் கபாலீச்சுவரம், நாட்டின் மிகப் பழமையான அருங்காட்சியகம் மற்றும் கலைக்கூடம், பிர்லா கோளரங்கம் மற்றும் விலங்குகளை அவற்றின் இயற்கைச் சூழலில் பராமரிக்கும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, எம்.ஜி.ஆர். திரைப்பட நகர், மற்றும் தரமணி மென்பொருள் பூங்கா ஆகியவை பார்க்கத் தகுந்த இடங்கள்.


வேடந்தாங்கல்

## காஞ்சிபுரம்

இந்தியாவின் ஏழு புண்ணியத் தலங்களில் ஒன்றான காஞ்சிபுரம், பட்டு சேலைகளுக்குப் பெயர் பெற்றது. பார்க்க வேண்டிய இடங்கள் காமாட்சி அம்மன் திருக்கோவில், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில், வரதராஜசுவாமி திருக்கோவில், வைகுண்டப் பெருமாள் திருக்கோவில், கைலாசநாதர் திருக்கோவில் மற்றும் பட்டு நெசவு செய்யும் இடங்கள். அருகில் ஏனாத்தூரில் காஞ்சி மடத்தினரின் நிகர்நிலைப் பல்கலைக்கழகமும், ஆராய்ச்சி நிலையமும் உள்ளது.

## மாமல்லபுரம்

தொன்மையான இந்தியாவில் பல்லவப் பேரரசின் புகழ்பெற்ற துறைமுகமாக இது இருந்தது. இன்று தென்னிந்தியாவின் முக்கிய கடலோர விடுமுறைத் தலமாகத் திகழ்கின்றது. பார்க்க வேண்டிய இடங்கள் : கடற்கரைக் கோவில், ஐந்து ரதங்கள், அர்ஜுனன் தபசு மற்றும் புலிக்குகை. இங்கிருந்து வடக்கே 14 கி.மீ. தொலைவில் முதலைப் பண்ணையும், மேற்கே 17 கி.மீ. தொலைவில் திருக்கழுக்குன்றமும் அமைந்துள்ளன. முட்டுக்காடு உப்பங்கழிகளில் உல்லாசப் படகு வசதிகள் உள்ளன. சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே வி.ஜி.பி. தங்க கடற்கரை, எம்.ஜி.எம். டிஸ்ஸி வோர்ல்டு மற்றும் லிட்டில் போல்க்ஸ், மாயாஜால், தக்ஷணசித்ரா

போன்ற பொழுதுபோக்குப் பூங்காக்கள் உள்ளன. புதுப்பட்டினம் அருகே தர்சா நீர்விளையாட்டு மையம் உள்ளது.


### வேடந்தாங்கல்

நீர்ப்பறவைகளின் சரணாலயமான இது பறவை விரும்புகிறவர்களின் சொர்க்கமாகும். சென்னையிலிருந்து திருச்சி செல்லும் பாதைக்கு அருகில் 83 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. தகுந்த பருவ காலம் அக்டோபர் – மார்ச். தாம்பரம் மற்றும் செங்கல்பட்டிலிருந்து பேருந்து வசதி உண்டு.

### சிதம்பரம்

அகில உலகமும் வியக்க நடனமாடிய சிவபெருமானாகிய நடராஜரின் திருத்தலம் இங்கு உள்ளது. இங்குள்ள அண்ணாமலை பல்கலைக் கழகம் சிறப்பான ஒரு கல்வி நிறுவனம் ஆகும்.

**நாட்டியாஞ்சலி** – இந்திய நாட்டிய கலைகளில் தலை சிறந்து விளங்கும் கலைஞர்கள் பங்கேற்று நடராஜ பெருமானின் அருளைப் பெற நடத்தப்படும் விழா மகா சிவராத்திரி அன்று தொடங்கி 5 நாட்கள் நடைபெறும்.




### பூம்புகார்

காவிரி நதி கடலில் கலக்குமிடத்தில் அமைந்துள்ள இந்த ஊர், சோழ மன்னர்களின் முக்கிய துறைமுகமாக இருந்தது. பார்க்கத் தகுந்த இடங்கள் – பூம்புகார் கலைக்கூடம், இலஞ்சி மன்றம், பாவை மன்றம் மற்றும் நெடுங்கல் மன்றம், அமைதி தவழும் கடற்கரை.

### தஞ்சாவூர்

கர்நாடக இசை, இசைக்கருவிகள், நடனம் மற்றும் பாரம்பரியக் கலைப் பொருள்களின் இருப்பிடம். இங்குள்ள பிரகதீசுவரர் ஆலயம் புகழ் பெற்றது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட இக்கோவில், கட்டடக் கலை அற்புதங்களில் ஒன்றாகும். தஞ்சாவூர், தஞ்சை மாவட்டத்தின் தலைநகரும் ஆகும். இது தமிழ் நாட்டின் தானியக்களஞ்சியம் என்று அழைக்கப்படுகிறது. கலைக்கூடம் மற்றும் சரஸ்வதி மகால் நூலகம் காண வேண்டிய இடங்களாகும்.


திருவையாறு, திருக்கண்டியூர், கும்பகோணம், திருப்புவனம் மற்றும் தாராசுரம் இவையனைத்தும் 40கிமீ தொலைவுக்குள் அமைந்துள்ளன. நாகூர், இஸ்லாமியத் திருத்தலமாகும். வேளாங்கண்ணி, கிறித்தவத் திருத்தலமாகும். இவ்விரண்டு தலங்களுக்கும், அனைத்து சமயங்களைச் சார்ந்த அனைவரும் வருகை தருகின்றனர்.

*மனோரா:* இது சரபோஜி மன்னரால், மாவீரன் நெப்போலியனை ஆங்கிலேயர்கள் வெற்றி கண்டதை நினைவு கொள்ளும் வகையில் இங்குள்ள நினைவு சின்னம் எழுப்பப்பட்டது.

### திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளியில் மலைக் கோட்டையும், சுமார் 83 மீ. உயரத்தில் அமைந்துள்ள அதன் கோவிலும் புகழ் பெற்றவை. இங்குள்ள பிற கோவில்கள், திரு அரங்கநாத சுவாமி திருக்கோவில் – திருவரங்கம், திருவானைக்காவல் சிவன் கோவில், மற்றும் சமயபுரம் மாரியம்மன் திருக்கோவில்.

நார்த்தா மலை, சித்தன்ன வாசல், குடுமியான் மலை மற்றும் கொடும்பாளூர் – இவை சமணக் குகை ஓவியங்கள் மற்றும் பிற வரலாற்றுச் சான்றுகளுக்குப் புகழ் பெற்றவை. கல்லணை கரிகாலச் சோழனால் இரண்டாம் நூற்றாண்டில் காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்ட பெரிய அணைக்கட்டு, அக்காலப் பொறியியல் வல்லுனர்களின் திறமைக்குச் சான்றாகும். ஆவுடையார் கோவிலில்



கங்கை கொண்ட சோழபுரம்

ஆளுயரச் சிற்பங்கள் உள்ளன. விராலிமலை முருகன் கோவிலும் மயில்கள் சரணாலயமும் புகழ் பெற்றவை. முக்கொம்பு மற்றொரு சுற்றுலாத் தலமாகும்.

## அரியலூர்

அண்மையில் புதிதாக உதயமான இம்மாவட்டத்தில் வரலாற்று சிறப்புமிக்க சுற்றுலாதலம் கங்கை கொண்ட சோழபுரம். இராஜேந்திர சோழன் தன் தந்தை இராஜ இராஜ சோழன் நிறுவிய தஞ்சை பெரிய கோவிலைப் போல் சிறப்பாய் அமைக்க நினைத்து நிறுவிய கோவில் இங்குள்ளது. அழகிய கற்சிற்பங்களையும், கட்டடக் கலையினையும் தன்னகத்தே கொண்ட சிறந்த கோவில்.

## திருவாரூர்

சிறப்புமிக்க சோழ மண்டலத்தின் சிவன் கோவில், மிகப் பெரிய தேர், மிகப்பெரிய திருக்குளம் ஒருங்கே அமைந்தது திருவாரூர் நகரம். மனுநீதிச் சோழன் தன்னுடைய மகன் ஒரு கன்றினை கொன்றதற்காக அவனை தேர்காலிலிட்டது இங்குதான். மேலும் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சதர் மற்றும் சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் அவதரித்த தலங்களும் இங்குள்ளன. இயற்கை எழில் நிறைந்து பசுமைவனப்போடு ஆண்டு முழுவதும் பயணியர் வந்து செல்லக்கூடிய பகுதி இது.

## புதுக்கோட்டை

இந்தியா சுதந்திரம் பெறும் வரை மன்னராட்சியின் கீழ் இருந்த பகுதி இது. இங்குள்ள கட்டட மற்றும் சாலை அமைப்புகள் முறையான நகர் வளர்ச்சி திட்டத்தின் முன்னோடியாக கருதப்படுகின்றன. அருங்காட்சியகம், சித்தன்னவாசல் ஓவியம், ஆவுடையார் கோவில், கொடும்பாளூர் மூவர் கோவில் ஆகிய இடங்களில் உள்ள கோவிற் சிற்பங்கள் ஆகியவை இம்மாவட்டத்தில் காணத்தக்கவை.

## மதுரை


பாண்டியர்களின் தலைநகரமாக இருந்த மதுரை இன்று தமிழ்நாட்டின் இரண்டாவது மிக பெரிய நகரமாக உள்ளது. வானளாவிய கோபுரங்கள் மற்றும் அற்புதச் சிற்பங்களைக் கொண்ட மீனாட்சி அம்மன் கோவில் இவ்வூரின் சிறப்பம்சமாகும். பிற பார்க்க தகுந்த இடங்கள்: திருமலை மன்னரின் அரண்மனை, மாரியம்மன் தெப்பக்குளம், அழகர் கோவில் மற்றும் காந்தி அருங்காட்சியகம் ஆகும்.


திருப்பரங்குன்றம் முருகன் கோவில், அழகர் கோவில், பழமுதிர்ச்சோலையின் முருகன் கோவில், பழநி கோவில், சுருளி நீர்வீழ்ச்சி, வைகை அணை மற்றும் தமிழக எல்லையை அடுத்துள்ள கேரளத்தில் பெரியார் வனவிலங்கு சரணாலயம் ஆகியவை பார்க்கத் தகுந்த இடங்களாகும்.

## சிவகங்கை

இது புகழ்பெற்ற மருது பாண்டியர்கள் ஆட்சி செய்த சீமையாகும். இதனருகில், காளையார்கோவில்,

சித்திரை திருவிழா, மதுரை




சுசீந்திரம்

கடற்கரை மற்றும் விவேகானந்தர் நினைவகம் ஆகியவை.

இசைத் தூண்கள் கொண்ட சுசீந்திரம் கோவில் பத்மநாபபுரத்தின் அரண்மனை மற்றும் அருங் காட்சியகம், வட்டக்கோட்டை மற்றும் நாகர்கோயிலில் நாகராஜா கோவில் திற்பரப்பு அருவி ஆகியவை காணத்தக்கன.

## கொடைக்கானல்

கொடைக்கானல் இந்தியாவின் மிக அழகிய மலை வாழ் ஒய்விடங்களில் ஒன்று. இது **2133** மீ. உயரத்தில் அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் இங்கு சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணம் உள்ளனர்.

*பார்க்க வேண்டிய இடங்கள் :* பிரையண்ட் பூங்கா, தூண் பாறைகள், ஏரி சூரியக் கோளரங்கம், பெருமாள் மலை, வெள்ளி அருவி, கோக்கர் வாக், குறிஞ்சியாண்டவர் கோவில், பேர்ஷோலா அருவி, பேரிஜம் ஏரி, அருங்காட்சியகம் மற்றும் கலைக்கூடம் ஆகும். மலையேற்றம் செல்வதற்கு ஏற்ற அருமையான பாதைகள் இங்குள்ளன.

பிள்ளையார்பட்டி, குன்றக்குடி ஆகிய புகழ் பெற்ற திருத்தலங்கள் உள்ளன. காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகமும், மத்திய மின்னணு ஆராய்ச்சி நிலையமும் உள்ளன.

## இராமேசுவரம்

இந்தியாவின் மிக முக்கியமான புனிதத்தலம். இங்குள்ள கோவிலின் பிரகாரம் தென் ஆசியாவிலேயே மிகவும் நீளமானது. அண்மையில் குடமுழுக்கு நடந்தது. புனித நீராடுமிடம், காந்தமதனபர்வதம், கோதண்டராமர் கோவில், குருசடை தீவு மற்றும் அருகில் உள்ள பவளப் பாறைகள், கடல் வாழ் உயிரினங்கள் நிறைந்த தீவுகள் காணத் தகுந்தவை.

கொடைக்கானல் ஏரி


## கன்னியாகுமரி

இந்தியாவின் தெற்குக் கோடியில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற புண்ணியத் தலம். இங்கு இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடல் ஆகிய மூன்றும் சங்கமமாகின்றன. திரிவேணி சங்கமம் எனும் பெயர் பெற்ற இத்தலத்தில் பார்க்க வேண்டிய இடங்கள்: அய்யன் திருவள்ளுவர் சிலை, குமரி அம்மன் கோவில், காந்தி மற்றும் காமராஜர் நினைவகங்கள்,

## குற்றாலம்

தென்னகத்தின் மிக அழகிய நீர் வீழ்ச்சியான குற்றாலம், மேற்கு தொடர்ச்சி மலைகளில் **167** மீ உயரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள நீர்வீழ்ச்சிகள், நோய்களைக்



தாவரவியல் பூங்கா, உதகமண்டலம்

குணப்படுத்தும் மருத்துவ குணம் வாய்ந்தவை. பருவ காலம் ஜுன் – செப்டம்பர் மாதங்களாகும். உல்லாசப் படகு வசதிகள் உள்ளன.

## ஏற்காடு

சேலம் மாவட்டத்தில், சேர்வராயன் மலைகளில் 1500 மீ. உயரத்தில் அமைந்துள்ள மலை வாழ் ஒய்விடம்.

*பார்க்க வேண்டிய இடங்கள் :* ஏரி, அண்ணா பூங்கா, கலைக்கூடம், லேடீஸ் சீட், பகோடா பாயண்ட், கரடி குகை மற்றும் சேர்வராயன் கோவில்.

## ஒகேனக்கல்


அடர்ந்த காடுகளிடையே அமைந்துள்ள மருத்துவ குணம் வாய்ந்த நீர்வீழ்ச்சி. காவிரி நதியில் பரிசல் ஏற்றம் ஒரு இனிமையான அனுபவம்.

## உதகமண்டலம்

"மலைகளின் அரசி'' என்று அழைக்கப்படுவது, 2286 மீ . உயரத்தில் அமைந்துள்ளது. பார்க்க வேண்டிய இடங்கள்: தாவரவியல் தோட்டம், ஏரி, சிறுவர் பூங்கா, தொட்டபெட்டா, முக்குர்த்தி மலை, பைகாரா அணை மற்றும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும்மேட்டுப் பாளையத்திலுள்ள பிளாக் தண்டர்– பொழுது போக்கு பூங்கா, மலையேற்றம் செல்வதற்கான பாதைகள் உள்ளன. தொட்டபெட்டாவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொலைநோக்கி காட்சியகம் உள்ளது. முதுமலை வனவிலங்கு சரணாலயம் 60 கி.மீ. தொலைவிலும், கோத்தகிரி 29 கி.மீ. தொலைவிலும் உள்ளன.

## முதுமலை

இது புகழ் பெற்ற வனவிலங்கு சரணாலயம். இங்குள்ள விலங்குகள் யானை, கவுர்,புலி, சிறுத்தை, சாம்பார் மான், புள்ளிமான், காட்டுப் பன்றி, முள்ளம் பன்றி



ஒகேனக்கல்

ஆகியன. பறவையினங்களில், மினிவெட், பார்ம்பில், பேரி ப்லுபார்ட்,காட்டுக் கோழி ஆகியன அடங்கும், மேலும் மலைப்பாம்பு, மானிட்டர் பல்லி, பறக்கும் பல்லி ஆகியன உள்ளன.

ஏராளமான சுற்றுலா பயணிகளை ஆண்டுதோறும் கவர்ந்திழுக்கும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

## கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

**உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.**



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்ஃபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி

***பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.***

தமிழரசு
R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190, WPP-130

